।। श्रीः ।।

।। श्रीमते लक्ष्मीनृसिंह परब्रह्मणे नमः ।।


# ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸம்புடம் 79 | ஸஞ்சிகை 5 | ஶார்வரி ஹூ | ஆவணி மீ August 2020 | ₹ 30/-



44ம் பட்டம் முக்கூர் ஸ்ரீமதழகியசிங்கர்
ஸ்ரீவண் ஶடகோப ஸ்ரீ வேதாந்த தேஶிக யதீந்த்ர மஹாதேஶிகன்
125வது திருநக்ஷத்ரம் ஆவணி ஹஸ்தம் (22.08.2020)

# ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மா பிறந்த இடம்
## மதுரா

தமத்புதம் பாலகமம்புஜேக்ஷணம்
சதுர்புஜம் ஶங்ககதார்யுதாயுதம் ।
ஸ்ரீவத்ஸலக்ஷ்மம் கலஶோபிகௌஸ்துபம்
பீதாம்பரம் ஸாந்த்ரபயோதஸௌபகம் ।।



।। श्रीः ।।

।। श्रीमते लक्ष्मीनृसिंह परब्रह्मणे नमः ।।



# ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

## ஸ்ரீஅஹோபில மடம் ஆண்டு 622

ஸம்புடம் 79 | ஸஞ்சிகை 5 | ஶார்வரி ௵ | ஆவணி | **August 2020**





ஸ்ரீமதாதிவண் ஶடகோப ஸ்வாமி
ஸ்தாபகர்- ஸ்ரீ அஹோபிலமடம்

Over 75 Years
78 years
1942-2019
Since 1942


**Editor**
**Dr. M.V. Ananntha padmanabhachariyar**

Publisher : Sri J.S. Vasan
Annual Subscription: Rs.300/-
Overseas: US 60 $ per annum
Life Subscription: Rs.15,000/-

Office Address:
Sri Nrisimhapriya Trust
No.30, Venkatesa Agraharam,
Mylapore, Chennai-600 004.
Tel : 2461 1540, 2461 4402
E-mail: srinarasimhapriya@gmail.com


ஸ்ரீஅஹோபில மடம் 42ம் பட்டம்
இஞ்சிமேடு ஸ்ரீமதழகியசிங்கர்
(நிறுவனர் ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா-தமிழ்)

अहोबिले गारुडशैलमध्ये कृपावशात् कल्पितसन्निधानम् ।
लक्ष्म्या समालिङ्गितवामभागं लक्ष्मीनृसिंहं शरणं प्रपद्ये ।।

श्री नृसिंहप्रिया श्रीमन्नृसिंहकरुणोत्थिता ।
श्री नृसिंहकटाक्षेण जीयादाचन्द्रतारकम् ।।
नृसिंहपदभक्तानां गेहे गेहे सदा वसेत् ।
श्री नृसिंहप्रिया ह्येषा नृसिंहप्रियया सह ।।

ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையினால் உண்டாயிருக்கும் இந்த ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா பத்ரிகை அந்த ஸ்ரீந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும், ஸங்கல்பத்தாலும் சந்திரன் நக்ஷத்திரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது, நம் ஸ்ரீந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள் தோறும் இந்த ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா என்னும் பத்ரிகை. ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.

ஸ்ரீ அஹோபில மடம்
46ம் பட்டம் ஸ்ரீமதழகியசிங்கர் அநுக்ரஹம்



ஸ்ரீவைஷ்ணவ உலகில் ஸத்ஸம்ப்ரதாயத் தொண்டினை 75 வருடங்களாக இடைவிடாமல் செய்துவரும் முதன்மையான ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா என்னும் இப்பத்ரிகை, நம் சிஷ்யர்கள் மற்றும் அபிமாநிகளின் பரிபூர்ண ஒத்துழைப்புடனும், உத்ஸாஹத்துடனும், உய்யும் உபாயத்தை உரைத்துரைக்கும் வித்வத்வரேண்யர்களின் உபதேஶத்தினாலும் மேன்மேலும் வளர்ந்து நம் ஸ்ரீ ந்ருஸிம்ஹ பக்தர்களின் க்ருஹங்களை அலங்கரிக்க வேண்டுமென நம் ஆராத்ய தேவதையான ஸ்ரீமாலோலனைப் ப்ரார்த்திக்கிறோம்.

# உள்ளே


அருள்மொழிகள் 5
முக்கூர் ஸ்ரீமதழகியசிங்கரின் தனியன் 14
பஞ்சாங்க ஸங்க்ரஹம் 19
ஸங்கல்பம் 21
ஸ்ரீமதழகியசிங்கர்களின் திருநக்ஷத்ரங்கள், வைபவங்கள் 25
ஸம்பாதகரின் குறிப்புகள் 29
விடலரிய அருள்வரதர் அடியமே 27
ஸ்ரீ வேதாந்ததேசிக யதீந்த்ர மஹாதேசிகன் வைபம் 31
மனிதக் குரங்கு 39
உகப்பும் கசப்பும் 46
பெரியாழ்வாரின் ஸ்ரீக்ருஷ்ணாநுபவம் 48
நைமிசாரணியத்துள் எந்தாய்-23 52
முக்கூர் ஸ்ரீமதழகியசிங்கரின் ஸௌலப்யம் 59
முக்கூர் ஸ்ரீமதழகியசிங்கர் வைபவம் 61
வேகவாந் 64
தத்வமுக்தாகலாபம் 67
ஸ்ரீபாஷ்யக் கதைகள் 70
திருவாய்மொழி அமுதம் 73
கலியுக கர்ணன் (படக்கதை) 75
வாசகர்களின் கவனத்திற்கு 78
சீதை உகந்த பரிசு 80
பாலர் பகுதி 83
இந்த மாதம் உங்கள் நிலை 85
Matrimonial 89
ஸ்ரீ மஹாபாரதம் கூறும் நல்லுபதேசம் - 11 95


**சந்தாதாரர்கள் இண்டெர்நெட் பேங்கிங் மூலமாகவே தங்களின் சந்தாக்களைச் செலுத்தலாம்.**

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாவிற்கு சந்தா தொகையைப் புதுப்பிக்க விரும்புவோர் கவனத்திற்கு

(1) பணம் கட்டிய தொகை, (2) நிலுவை காலம், (3) தேதி, (4) பெயர், (5) அனுப்புனர் பெயர், (6) எந்த வங்கியின் மூலம் பணம் அனுப்பப்பட்டது, (7) Transaction Ref. No., மற்றும் (8) சந்தா எண், (9) முகவரி, (10) தொலைபேசி எண் – ஆகியவற்றைத் தெளிவாகக் குறிப்பிட்டு எழுதும்படி கேட்டுக்கொள்கிறோம். அநேகம் பேர் மேற்கூறிய விபரங்களை அனுப்பாமல் பணத்தை அனுப்பியதை மட்டுமே எழுதுகின்றனர். இதனால் நாங்கள் கணக்குகளை சரிபார்க்க முடிவதில்லை. Online மூலமாக பணம் செலுத்துவோர்கள் குறைந்தபக்ஷம் 2 ஆண்டுகளுக்காவது சந்தா தொகையைச் செலுத்த வேண்டும். (ரூ.600/–) எனவே சந்தாதாரர்கள் எல்லா விபரங்களையும் சரியாகவும் தவறாமலும் **snpolr@gmail.com** என்கிற E.mail முகவரிக்கு ஒரு முறை ஒரே தகவலாக அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறோம். SMS மூலம் தகவல்களை அனுப்பவேண்டாம். அதே போன்று PayTM/Other Wallets போன்ற வஸதிகளைப் பயன்படுத்தி பணத்தை அனுப்புவதை தவிர்க்கவும். புதிதாக சந்தாதாரராகச் சேர விரும்புவோரும் மேற்கூறிய வசதியைப் பயன்படுத்திக் கொள்ளலாம். அவர்கள் சந்தா எண்ணுக்குப் பதில் புதிய உறுப்பினர் என்று எழுதவும். பணம் வந்து சேர்ந்ததற்கான ரசீது உடனடியாக அனுப்பிவைக்கப்படும். இவ்வசதியை கல்யாண விளம்பரங்களுக்குப் பயன்படுத்த முடியாது. சரியான தகவல் பரிமாற்றம் இருந்தாலொழிய எங்களால் கணக்குகளை சரிபார்க்க முடியாது என்பதை கவனத்தில் கொள்ளவும். தெரிவிக்க வேண்டிய முகவரி E.mail: **snpolr@gmail.com**

**Name of the Account : Sri Nrisimha Priya Trust / Name of the Bank : Canara Bank**

**Name of the Branch: St. Mary's Road, Chennai - 600018.**

**Type of A/C : Savings / Account No : 1287 - 101 - 014579 / IFSC Code : CNRB0001287**

மேற்குறிப்பிட்ட வங்கி பரிவர்த்தனையை ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா சந்தாவிற்கு மாத்திரம் பயன்படுத்தவும்

# ஸ்ரீமதழகியசிங்கரின் அருள்மொழிகள்

## இராமானுச நூற்றந்தாதி

‘கொழுந்து விட்டோடிப் படரும்’ என்கிற பாசுரத்தால் வல்வினையேன் ஆன என்னிடத்திலேயே அவை பயன்பெற்று மிகவும் ப்ரகாசமாக விளங்கியது என்கிறார். உயர்ந்த யோகிகளும் முனிவர்களும் (எல்லாம் கண்ணன் என்று நினைத்து யோகம் செய்பவர்கள் - மனதில் த்யானம் செய்பவர்கள்) கூட தொழும்படியான பெருமை உடையவர் எம் இராமாநுசன். எப்படியென்றால் இங்கு தவமென்பது ப்ரபத்திதான். ஏனென்றால் கீதையில் கண்ணன் **वासुदेवस्सर्वमिति समहात्मा सुदुर्लभः** வாஸுதேவஸ் ஸர்வமிதி ஸமஹாத்மா ஸுதுர்லப: என்றபடிக்கு (எல்லாம் கண்ணன் தான் என்று நினைக்கும் மஹாத்மா மிகவும் துர்லபம்) (கிடைக்க முடியாதவர்கள் என்று பொருள்) என்றான்.

அப்படிக் கண்ணனையே எல்லாமுமாகக் கருதும் எண்ணமுடைய நம்மாழ்வார் போன்ற மஹாத்மாக்கள் வணங்கும் தன்மை வாய்த்தவர். நமக்கு வேறு ஆளில்லாததால் வந்து ஆட்கொள்ளவில்லை. தவங்களில் உயர்ந்த தவமானது ப்ரபத்தி மார்க்கம் தான். அதனால் ஸம்ஸாரத்திலிருந்து கரையேற்றும் சக்தி உடையது ப்ரபத்தி என்று நன்கு தெரிகிறது.

இராமாநுசர் ஸ்ரீரங்கநாதனிடம் பண்ணின ப்ரபத்தி அவனை (ரங்கநாதனை)த் தன் கட்டளைக்குட்பட்டவனாகச் செய்தது. **रङ्गराजः वश्यस्सदा भवति ते यतिराज तस्मात् शक्तस्वकीय जन पाप विमोचनेत्वम् ॥** ரங்கராஜ: வஶ்யஸ்ஸதா பவதி தே யதிராஜ தஸ்மாத் ஶக்த ஸ்வகீயஜனபாப விமோசனேத்வம் ॥ எப்படியென்றால் ஒரு பம் செய்ய ஆரம்பித்தால் அது மேன்மேலும் தொடர்ந்து வளர்ந்து தொடராகப் பரவிக்கொண்டே போகும்.

அந்த வினைகள் மிகவும் கொடுமையானவை. வலிமையும் மிக்கது. அதை எம்பெருமானாலும் இதுவரையில் போக்கடிக்க முடியாமல் அந்த பாபத்தில் அழுந்தியிருப்பவன் நான். (எப்படி ராமாயணத்தில் ஸீதாப்பிராட்டி **यस्त्वयासह सस्स्वर्गो निरयोयस्त्वया विना ।**



யஸ் த்வயாஸஹ ஸஸ்வர்கோநிரயோ யஸ்த்வயா விநா । உன்னுடன் கூடியிருந்தால் ஸ்வர்கம். உன்னைவிட்டுப் பிரிந்திருந்தால் நரகம் என்று ராமபிரானைப் பார்த்துச் சொல்லுகிறாளோ அதேபோல் பல கிளைகளுடன் நன்கு செழித்து வளர்ந்துள்ளது என் பாபமாகிற மரம்.

அப்படிப்பட்ட ஸம்ஸாரமென்னும் சேற்றிலிருந்து நரகத்தில் அழுந்தி உள்ளேன். இங்கு நம்மாழ்வார் ‘நலமென நினைமின் நரகழுந்தாதே’ என்றார். எம்பெருமானை அடைதல் நலம். அடையாததால் நரகம் என்று பொருள். ஞானிகளுக்கு பகவதநுபவம் ஸ்வர்கம். ஸம்ஸாரம் நரகம். அநாதியாய் உள்ள பாபங்களினால் வரும் ஸம்ஸாரம் அளவற்ற துன்பம் விளைவிக்கும் நரகம். இதை நம்மாழ்வார் ‘வானுயர் இன்பம் எய்திலென் மற்றை நரகமெய்திலென்’ (ஸ்வர்கம் போகவில்லை, நரகமும் போகவில்லை) என்றபடி.

அமுதனார் தம்மை ஸம்ஸாரத்தில் அழுந்திவிட்டதாக ஸாதித்துக் கொள்கிறார்.

எம்பெருமானும் நீண்ட நெடுந் தடக்கை நீட்டி எடுக்க ஒண்ணாதபடி ஆழ அழுந்திவிட்ட தம்மை, இராமாநுசர் அப்பேர்ப்பட்ட நிலையிலும் வந்து எடுத்து ஆட்கொண்டுவிடுகிறுர் என்கிறுர். திருமங்கைமன்னன் ஸம்ஸாரபந்தத்தில் அழுந்தாமல் இருக்க அருள்புரிய வேணுமாய் ப்ரார்த்திக்கிறுர். 'நந்தா நரகத்தழுந்தாவகை' என்று பாசுரமிட்டுப் பேசுகிறுர். ஆனுல் நான் இராமாநுசர் இருக்கும் இடம் தேடிப் போகவில்லை (அப்படி என் பாபம் அழுந்தியுள்ளது) அவரே என்னிருப்பிடம் வந்து ஆட்கொண்டார். என்னே ஆச்சர்யம்! எழமுடியாத என்னை கைதூக்கியெடுத்து ரக்ஷித்தார். ஆனுல் என்னை ஆட்கொண்டபின் அவர் புகழ் மேன்மேலும் ப்ரகாசித்தது.

அதற்குக் காரணம் அவர் என்னைப்போன்ற யாரொருவர் தன் உதவியை எதிர்பார்த்துக் காத்திருக்கிறுர் என்று தேடியது தான் புகழ் சுடர்மிக்கெழுந்தது. இப்படியும் பூமியில் நம்மை கரை சேர்க்க நினைப்பவர் உண்டு என்று. அதற்கு இந்த பூமிக்கு தான் என்ன பாக்யம்! நிரயத்தழுந்துமிடம் நோக்கி செல்வதால் புகழ் மாசுபடுவது இயல்பு. ஆனுல் அதற்கு நேர்மாறாக சுடர் மிக்கு எழுந்தது. இது நல்லதோர் பரிவு. மிகவும் ஆச்சர்யமல்லவா? சாதாரணமாக பூமியில் தீயவர் உள்ள இடத்தில் சேர்ந்தால் அதனுல் தாங்களும் தீயவராய் கெட்டுப்போவர். இங்கு தவயோகிகள் முனிவர்கள் தொழத்தகுந்த இராமாநுசர் போன்ற தூயவர் அந்தத் தீய சேர்த்தியினுல் தாங்கள் கெடாததோடு அனைவரையும் தூய்மையாக்கும் சீர்மை உடையவராதலால் அவர் குணங்கள் மாறாமலும் மற்றவர்களையும் நல்லவர்களாய் மாற்றுவதனுல் அவர் புகழ் சுடர் மிக்கதாயிற்று என அருளுகிறுர் அமுதனுர்.

# ரிக்வேத ஆஹ்நிகம்

இந்த வைஶ்வதேவத்தை ஔபாஸநாக்னியிலோ அல்லது பசனாக்னி என்று சொல்லப்படும் தளிகை செய்த அக்னியிலேயே செய்யலாம். ஔபாஸனாக்னியில் வைஶ்வதேவம் செய்தால் அதை தம்பதிகள் மட்டுமே புஜிக்கலாம் என்பதாக ஸ்ரீமத் கோபாலதேஶிகாஹ்நிகத்தில் சொல்லப் பட்டுள்ளது. பசனாக்னியில் செய்தால் எல்லோரும் புஜிக்கத்தக்கதாகும் வைஶ்வதேவ சேஷம். அதனுல் பல ஶிஷ்டர்கள் பசனாக்னியிலேயேதான் செய்து வருகிறுர்கள் என்பது ஸித்தம்.

ஔபாஸனாக்னியில் செய்தால் அந்தக் குடும்பத்தில் உள்ளவர்கள் புஜிக்கலாமென்று ஶௌனகர் சொல்கிறுர். சில ஶிஷ்டர் ஔபாஸனாக்நியில் செய்ததைக் கொண்டு அதிதி சத்காரம் செய்வது வழக்கத்தில் உள்ளது. வைஶ்வதேவத்தில் அன்னத்தைக் கையினுல் தான் வைக்கவேண்டும். ஸ்ருவம் என்று சொல்லப்படுகிற மரக் கரண்டியினுலோ அல்லது மற்ற தர்வீ முதலியவைகளாலோ செய்யக் கூடாது. அன்னம் தவிர்த்து பால், தயிர் முதலியவற்றால் செய்யும் பொழுது கரண்டியினுல் வைக்கவேண்டும் என்று உள்ளது. ரிக்வேதிகளுக்கு வைஶ்வதேவம் சக்ராகாரமாகவே மட்டும் சொல்லப் பட்டுள்ளது. ஸ்ம்ருதி ரத்னாகரத்தில் சக்ராகாரம் சிறந்தது என்று கூறியுள்ளார் ஆஶ்வலாயனர். அதனுல் சக்ராகாரம்தான் ரிக்வேதிகள் செய்து வருகிறுர்கள். தினமும் வைஶ்வதேவம் செய்வதற்கு முன் ஶகல ஹோமம் என்று 16 ஸமித்துக்களை மந்த்ரங்கள் சொல்லி அக்னியில் ஹோமம் செய்ய வேண்டும் என்று சொல்லி இருப்பதனுல் இதை ரிக்வேதிகள் செய்து வரவேணும்.

இரண்டு கால்களையும் அலம்பிக்கொண்டு, இரண்டு தடவை ஆசமனம் செய்து மூன்று

ப்ராணாயாமங்கள் செய்து வைஶ்வதேவம் ஸூக்தம் என்கிற वैश्वानरस्य வைஶ்வாநரஸ்ய மந்த்ரங்களைச் சொல்லிய பிறகு समस्त एनो निर्हरणार्थं शकल होमा करिष्ये ஸமஸ்த ஏநோ நிர்ஹரணார்த்தம் ஶகல ஹோமம் கரிஷ்யே என்று ஸங்கல்பம் செய்து பகவானேவ என்று ஸாத்விக த்யாகம் செய்த பிறகு அக்னிக்கு उल्लिख्य + प्रतिष्टाभ्य । உல்லிக்ய + ப்ரதிஷ்டாப்ய। வரை ஔபாஸனத்தில் சொன்னது போல் செய்து ओं भूर्भुवस्स्वः பூர்புவஸ்ஸ்வ: என்று அக்னிக்கு பரிஷேஷணம் செய்து ஸமித்தை ஹோமம் செய்ய வேண்டும். (பசநாக்னியில் அல்லது ஔபாஸனாக்நியில்)

1. देवकृतस्यैनसोवयजनमसि स्वाहा ।

தேவக்ருதஸ்யைநஸோவயஜனமஸி ஸ்வாஹா ।

देवकृतै र्नो निर्हरणकर्त्रेरग्नय इदं नारायणाय ।

தேவக்ருதைர்நோநிர்ஹரணகர்த்ரேரக்ன ய இதம் நாராயணாய ।

2. पितृकृतस्यैवसोवयजनमसि स्वाहा ।

பித்ருக்ருதஸ்யைநஸோவயஜநமஸி ஸ்வாஹா ।

पितृकृतैनो निर्हरण कर्त्रे नारायणाय इदं ।

பித்ருக்ருதைநோ நிர்ஹரண கர்த்ரே நாராயணாய இதம் ।

3. मनुष्य कृतस्यैजसोवयजनमसि स्वाहा ।

மனுஷ்ய க்ருதஸ்யைநஸோவயஜநமஸி ஸ்வாஹா ।

मनुष्यकृतैनो निर्हरण कर्त्रे नारायणाय इदं ।

மனுஷ்யக்ருதைநோ நிர்ஹரண கர்த்ரே நாராயணாய இதம் ।

4. अस्मत्कृतस्यैवसोवयजनमसि स्वाहा ।

அஸ்மத்க்ருதஸ்யைவஸோவயஜநயஸி ஸ்வாஹா ।

अस्मत्कृतैनो निर्हरण कर्त्रे नारायणाय इदं ।

அஸ்மத்க்ருதைநோ நிர்ஹரண கர்த்ரே நாராயணாய இதம் ।

5. यद्दिवानक्तं चेनश्चकृमतस्यावयजनमसि स्वाहा ।

யத்திவாநக்தம்சேநஶ்சக்ருமதஸ்யாவஜந மஸி ஸ்வாஹா ।

दिवारात्रिकृतैनो निर्हरण कर्त्रे नारायणाय इदं ।

திவாராத்ரிக்ருதைநோ நிர்வஹண கர்த்ரே நாராயணாய இதம் ।

6. यत् स्वपन्तश्चजागृतश्चैनश्चकृम तस्यावयजनमसि स्वाहा ।

யத் ஸ்வபந்தஶ்ச ஜாக்ருதஶ்சைநஶ்சக்ரும தஸ்யாவயஜநமஸி ஸ்வாஹா ।

स्वपत् जाग्रतै नो निर्हरण कर्त्रे नारायणाय इदं ।

ஸ்வபத்ஜாக்ருதோநோ நிர்ஹரண கர்த்ரே நாராயணாய இதம் ।

7. यद्विद्वांसश्चाविद्वांसश्चैनश्चकृम तस्यावयजनमसि स्वाहा ।

யத்வித்வாம்ஶ்சாவித்வாம்ஶ்சைநஶ்சக்ரும தஸ்யாவயஜநமஸி ஸ்வாஹா ।

विद्वदविद्वत कृतै नो निर्हरण कर्त्रे नारायणा इदं ।

வித்வதவித்வத்க்ருதைநோ நிர்ஹரண கர்த்ரே நாராயணாய இதம் ।

8. एनस एनसोवयजनमसि स्वाहा ।

ஏநஸ ஏநஸோவயஜநமஸி ஸ்வாஹா ।

एनो निर्हरण कर्त्रे नारायणाय इदं ।

ஏநோ நிர்ஹரணகர்த்ரே நாராயணாய இதம் ।

9. कामावकीर्णोस्म्यवकीर्णोस्मिकामकामाय स्वाहा । कामायेदम् ।

காமாவகீர்ணோஸ்ம்யவகீர்ணோஸ்மி காம காமாய ஸ்வாஹா । காமாயேதம் ।

10. कामामाभिदुग्धोस्म्यभिदुग्धोस्मि काम कामाय स्वाहा । कामायेदम् ।

காமாமாபடிதுக்தோஸ்ம்யபிதுர்தோஸ்மி காமகாமாய ஸ்வாஹா । காமாயேதம் ।

11. पुनर्ममैत्विन्द्रियं पुनरायुः पुन र्भगः । पुनर्द्रविणमैतुमां स्वाहा । इन्द्रियादिभ्य इदम् ।

புனர்மமைத்விந்த்ரியம் புநராயு: புனர்பக: புனர்த்ரவிண மைதுமாம் ஸ்வாஹா । இந்த்ரியாதிப்ய இதம் ।

12. पुनर्मनः पुनरात्माम आगात् । पुनश्चक्षुः पुनः श्रोत्रं म आगात् । पुनः प्राणः पुनराधीतं म आगात् । वैश्वानरो दब्धस्तनूपा अन्तस्तिष्ठ तु मे मनो मृतस्यकेतुः स्वाहा । मनादिभ्य इदम् ।

புனர்மந: புநராத்மா ம ஆகாத் । புநப்ஸ்சக்ஷு: புன: ப்ஸ்ரோத்ரம் ம ஆகாத் । புன: ப்ராண: புனராதீதம் ம ஆகாத் । வைப்ஸ்வாநரோ தப்தஸ்தநூபா அந்தஸ் திஷ்டது மே மநோ ம்ருதஸ்யகேது: ஸ்வாஹா । மன ஆதிப்ய இதம் ।

13. भूस्स्वाहा । अग्नय इदं ।

பூஸ்ஸ்வாஹா । அக்னய இதம் ।

14.भुवस्स्वाहा।वायवइदं।

புவஸ்ஸ்வாஹா।வாயவஇதம்।

15.स्वस्स्वाहा।सूर्यायइदं।

ஸ்வஸ்ஸ்வாஹா।ஸூர்யாயஇதம்।

16.ओंभूर्भुवस्स्वस्वाहा।प्रजापतयइदं।

ஓம் பூர்புவஸ்ஸ்வஸ்வாஹா । ப்ரஜாபதய இதம்।

என்று ஸமித்தினுல் ஹோமம் செய்த பிறகு

ओं भूर्भुवस्स्व । ஓம் பூர்புவஸ்ஸ்வ । என்று அக்னிக்கு வடகிழக்கு மூலையிலிருந்து ப்ரதக்ஷிணமாக வடகிழக்கு மூலையிலேயே முடியும்படியாக பரிஷேசநம் செய்ய வேண்டும்.

ஸ்ரீ:

# கோபால விம்ஶதி:

## வந்தே ப்ருந்தாவன சரம் வல்லவீ ஜன வல்லபம் ।
## ஜயந்தீ ஸம்பவம் தாம வைஜயந்தீ விபூஷணம் ।।



ஸ்வாமி ஸ்ரீ தேஶிகன் ஸ்ரீ கோபாலன் விஷயமாக ஸாதித்தருளிய கோபால விம்ஶதி 'வந்தே' என்று தொடக்கம் 'யௌவத ப்ரியம்' என்று முடிவு. 'விருந்தாவனத்தே கண்டோமே' என்கிறாள் ஸ்ரீ ஆண்டாள். ஸ்வாமி அங்கே ஸேவிக்கிறார். அதனால் 'ப்ருந்தாவன சரம்' என்று முதலில் கூறுகிறார்.

ஸ்ரீ ஜயந்தீயன்று தோன்றியவனும், ப்ருந்தாவனத்தில் ஸஞ்சரிப்பவனும் வல்லவீ ஜநங்களுக்கு (கோபிகைகளுக்கு) பரம ப்ரியமானவனுமான வைஜயந்தீ மாலையை அணிகலனுமாகக் கொண்டவனுமான ஒரு ஒளியை - தேஜஸை நான் வணங்குகின்றேன்

தேஜஸ்வி

# திருவாடிப்பூர மஹோத்ஸவங்கள் ஸ்ரீ அஹோபிலம்






ஸ்ரீ ப்ரஹ்லாதவரதன்
சூடிக்கொடுத்த நாச்சியார்
திருமஞ்சனம்






# திருவாடிப்பூர மஹோத்ஸவங்கள் திருவுள்ளூர்



முத்தங்கி ஸேவையில்
ஸ்ரீ ஆண்டாள்








# திருவாடிப்பூர மஹோத்ஸவங்கள்



ஸ்ரீப்ரஹ்லாதவரதன் ஸந்நிதி ஸ்ரீமதஹோபிலமடம் செம்பூர் மும்பை



ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ ஸ்வாமி ஸந்நிதி
சேலையூர்



திருவாடிப்பூர உத்ஸவம்
ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ ஸ்வாமி ஸந்நிதி
சேலையூர்

## திருவாடிப்பூர மஹோத்ஸவங்கள்



ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ ஸ்வாமி ஸந்நிதி
சேலையூர்



ஸ்ரீ ஆண்டாள் பெருமாள் சேர்த்தி ஸேவை
பாக்யபுரி ஸ்ரீ மடம் (ஹைதராபாத்)

## ஸ்ரீ ஸுதர்ஶன ஜயந்தீ பாக்யபுரி ஸ்ரீ மடம் (ஹைதராபாத்)





ஸ்ரீ ஆண்டாள் பெருமாள்
ஸ்ரீ ஸுதர்ஶன ஜயந்தீ





ஸ்ரீமதழகியசிங்கரால் ஸமர்ப்பிக்கப்பட்ட நூதன திருவபிஷேகம் (க்ரீடங்கள்)
நாச்சியார் கோவில் வஞ்சுளவல்லீ ஸமேத ஸ்ரீஸ்ரீநிவாஸ பெருமாள், கல்கருடனுடன்



25ம் பட்டம் ஸ்ரீமதழகியசிங்கர்
வார்ஷிக திருநக்ஷத்ரம்
சேலையூர்



ஸ்ரீவரதராஜ பெருமாள் ஸந்நிதி
இஞ்சிமேடு

# முக்கூர் ஸ்ரீமதழகியசிங்கரின் தனியன்

ஸ்ரீஅஹோபிலமடம் ஆஸ்தாந வித்வான்
ஸ்ரீ உ.வே. சோகத்தூர் ராமாநுஜாசார்யர் ஸ்வாமி, பெங்களூரு

**श्रीरङ्गनाथशठकोपयतीन्द्रदृष्टं लक्ष्मीनृसिंहशठजित्करुणैकपात्रम् ।**
**श्रीरङ्गवीररघुराट् शठकोपहृद्यं वेदान्तदेशिकयतीन्द्रमहं प्रपद्ये ॥**

ஸ்ரீமதஹோபிலமடத்தில் 44-ம் பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீவண்சடகோப ஸ்ரீவேதாந்ததேசிக யதீந்த்ர மஹாதேசிகன் என்னும் ஸ்ரீமுக்கூர் ஸ்ரீமதழகியசிங்கரின் 120 திருநக்ஷத்ர நிறைவு விழாவில் அவ்வாசார்ய ஸார்வபௌமரின் அளவற்ற உயர்ந்த கல்யாணகுணங்களின் கூட்டத்திலிருந்து சிலவற்றை அடியேன் ஸ்வரூபத்தை ஸபலமாக்கிக் கொள்வதற்காக, விவரித்து க்ருதார்த்தனாகிறேன்.

## தனியனின் பொருளாழம்

ஸ்ரீ முக்கூர் அழகியசிங்கர், ஸ்ரீமதஹோபிலமடத்தில் 40-ம் பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீவண்சடகோப ஸ்ரீரங்கநாத சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் என்னும் ஸ்ரீகாருகுறிச்சி பெரிய ஸ்ரீமதழகியசிங்கரின் க்ருபா கடாக்ஷத்தால் ஸமாச்ரயணமும், ஸ்ரீமடத்தின் ஆராத்ய மூர்த்தியான ஸ்ரீமாலோலனின் திருவாராதனம் உபதேசமும் பெற்று ஆராதகராய் கைங்கர்யம் செய்யப் பெற்றார். 40-ம்



பட்டம் ஸ்ரீமதழகியசிங்கர் ஸ்ரீந்ருஸிம்ஹ ஸாக்ஷாத்காரம் உள்ளவராதலால் அவரிடம் ஸ்ரீந்ருஸிம்ஹ மந்த்ரமும் உபதேசிக்கப் பெற்று அதன் பலனாக மஹாப்ரபாவசாலியாய் எழுந்தருளி இருந்தார். ஸாதாரணமாக ஸபையில் எழுந்தருளி இருக்கும் போதும், சிஷ்யர்களை அநுக்ரஹிக்கும் போதும் பலமந்த்ராச்ஷதையைத் தம்

திருக்கைகளால் அளைவது போல் கண்டாலும் ஸ்ரீந்ருஸிம்ஹ பீஜாக்ஷரத்தை அநாயாஸமாக எழுதிக் கொண்டிருந்தாகும். இது தனியனின் முதல் பாதத்தில் காட்டப்படுகிறது.

ஸ்ரீமதஹோபிலமடத்தில் 41-ம் பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீவண்சடகோப ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் என்னும் ஸ்ரீகாருகுறிச்சி சின்ன ஸ்ரீமதழகியசிங்கரின் திருவடிகளில் ஆத்மரக்ஷாபரஸமர்ப்பணம் செய்யப்பெற்று அவ்வாசார்யரின் பரிபூர்ண க்ருபைக்குக் காரணமானவராய் இருந்தார். அவ்வழகியசிங்கர் ஸ்ரீந்ருஸிம்ஹாஸ்தானத்துக்கு எழுந்தருளுவதற்குக் கூட நம் முக்கூர்



அழகியசிங்கர் ஒரு வகையில் காரணமாவார்.

40-ம் பட்டம் ஸ்ரீமதழகியசிங்கர் தம் அந்திம தசையில் அடுத்த அழகியசிங்கரை நியமிக்க வேண்டி ஸ்ரீராமபத்ராசார்யர்



என்பவரை ஸ்தானத்துக்கு நிர்தேசித்தார். ஆனால், அத்திருநாமம் கொண்ட மூன்று ஸ்வாமிகள் இருந்ததால் ஸ்ரீமடத்து சிஷ்யர்களுக்குக் கலக்கம் ஏற்பட, ஸ்ரீமுக்கூர் அழகியசிங்கர், 40-ம் பட்டம் ஸ்ரீமதழகியசிங்கரின் திருச்செவிகளில் உரத்த குரலில் ஸ்ரீகோபால ராமபத்ராசார்யரைத் தானே திருவுள்ளம் பற்றியாயிற்றெனக் கேட்க,

அவ்வழகியசிங்கரும், தன்னுடைய அசக்த தசையிலும் திருமுடியை நன்கு உயர்த்தி இசைவு தெரிவித்தாயிற்றென்றும் அதனால் 41-ம் பட்டம் ஸ்ரீமதழகியசிங்கர் ஆஸ்தானம் ஏற்றாரென்றும் குருபரம்பரையிலிருந்து அறியலாம்.

41-ம் பட்டம் ஸ்ரீமதழகியசிங்கர் பரந்யாஸம் செய்து கொள்ள ப்ரார்த்திக்கும் சிஷ்யர்களுக்குத் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்களை நன்கு உபதேசித்து, பல காலம் பரீக்ஷித்து, பின்னரே வெகு அழகாக, ப்ரபத்தி அனுஷ்டானம் பண்ணி வைத்தாகும் என்று அவ்வழகியசிங்கரிடமே பரந்யாஸம் அடியேன் மாதாமஹரும் ஸாதித்துள்ளார். இது இரண்டாம் பாதத்தில் சொல்லப்பட்டது. இவ்விரு அழகியசிங்கர்களும் உயர்ந்த வேதாத்யாயிகளென்பதும் ஸுப்ரஸித்தம்.

ஜகத்விக்யாதவைபவரான 42-ம் பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த லக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்யபாதுகாஸேவக ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் என்னும் ஸ்ரீமத் இஞ்சிமேட்டு ஸ்ரீமதழகியசிங்கர், முக்கூர் ஸ்ரீமதழகியசிங்கருக்கு பூர்வாச்ரமத்தில் திருமேனி ஸம்பந்தத்தாலும் - சிறிய தகப்பனார் முறை - ஆஸ்தான வித்வானாக அநுக்ரஹித்ததாலும், அப்பொழுதும் ஆராதகராக இருந்ததாலும், இவ்வாறே 43-ம் பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ வீரராகவ சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் என்னும் ஸ்ரீமத் தேவனார்விளாகம் ஸ்ரீமதழகியசிங்கருடையவும் திருவருளுக்குப் பாத்ரராய் எழுந்தருளி இருந்தார். இது தனியனின் மூன்றாம் பாதத்தில் சொல்லப்படுகிறது.





ஸ்ரீமடத்தில் முதன்முறையாக வேதாந்ததேசிக யதீந்த்ர மஹாதேசிகன் என்ற திருநாமத்துடன் விளங்கிய, அஸாதாரண குணங்கள் பல நிரம்பப் பெற்றிருந்த முக்கூர் ஸ்ரீமதழகியசிங்கரை முக்கரணங்களாலும் வணங்கி சரணமடைகிறேன் என நான்காம் பாதத்தில் கூறியுள்ளது. இவ்வாறு ஆசார்யகுணானுஸந்தானத்திற்காக ஏற்பட்ட தனியனை அறிந்து உரைத்து ஆனந்திப்போம். ❋



## நம் ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா அலுவலகத்தில் விற்பனைக்கு இருக்கும் புஸ்தகங்கள்

| | |
|---|---|
| 1. 44ம் பட்டம் முக்கூர் ஸ்ரீமதழகியசிங்கரின் அமுதமொழிகள் 2 பாகங்கள் | 400.00 |
| 2. ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸார விவரணம் முதல் பாகம் மறுபதிப்பு 45ம் பட்டம் வில்லிவலம் ஸ்ரீமதழகியசிங்கர் அருளியது | 600.00 |
| 3. ஸுந்தரகாண்டம் மூலம் (ஸம்ஸ்க்ருதம் தமிழ்) | 300.00 |
| 4. அயோத்யா காண்டம் வ்யாக்யானம் 2 பாகங்கள் | 400.00 |
| 5. இயற்பா வ்யாக்யானம் - 2 பாகங்கள் | 300.00 |
| 6. அமாவாஸ்யை தர்ப்பணம் | 15.00 |
| 7. ஸ்ரீந்ருஸிம்ஹ, வேங்கடேச, ஹயக்ரீவ, ராம, க்ருஷ்ண, ஸுதர்சன, ஸ்ரீலக்ஷ்மி, ராமாநுஜ, வேதாந்ததேசிக - அஷ்டோத்தர சதநாம ஸ்தோத்ரம், நாமாவளி | 45.00 |
| 8. கல்யாண வைபோகமே (தமிழ்) | 40.00 |
| 9. கல்யாண வைபோகமே (ஆங்கிலம்) | 40.00 |
| 10. கத்யத்ரயம் மூலம் | 60.00 |
| 11. பஞ்சஸ்தவம் | 190.00 |
| 12. வைணவம் ஓர் உரையாடல் | 100.00 |
| 13. மஹாவீர வைபவம் (தமிழ்) | 100.00 |
| 14. மஹாவீர வைபவம் (ஆங்கிலம்) | 200.00 |
| 15. வைபவஸுதா (தமிழ்) | 40.00 |
| 16. வைபவஸுதா (ஆங்கிலம்) | 180.00 |
| 17. தேசிக ஸ்தோத்ராணி (ஸம்ஸ்க்ரும் தமிழ்) | 350.00 |
| **18. The Peerless Preceptor (Book on 45th Srimad Azhagiyasingar)** | **350.00** |
| 19. தைத்திரீய உபநிஷத் (ஸம்ஸ்க்ருதம் தமிழ்) | 50.00 |
| 20. விஷ்ணுபுராணம் 2 பாகங்கள் | 350.00 |
| 21. பகவத் கீதை 3 பாகங்கள் | 450.00 |
| 22. ஸாரபோதினீ 2 பாகங்கள் (இஞ்சிமேடு ஸ்ரீமதழகியசிங்கரின் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸார வ்யாக்யானம்) | 750.00 |
| 23. ஸந்த்யாவந்தனம் | 40.00 |
| 24. ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமம் (பெரிய எழுத்தில்) | 50.00 |
| 25. ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்நாம பாஷ்யம் | 250.00 |
| 26. ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்நாம பாஷ்யம் (55 நாமங்கள்) விளக்கவுரை | 250.00 |
| 27. ஸுபோதினீ திருப்பாவை விளக்கவுரை 44ம் பட்டம் ஸ்ரீமதழகியசிங்கர் | 120.00 |
| 28. நித்யாநுஸந்தானம் | 250.00 |
| 29. நித்யாநுஸந்தான ஸ்தோத்ரானி (ஸம்ஸ்க்ருதம்) | 25.00 |
| 30. ஹரிவம்சம் 3 பாகங்கள் | 1000.00 |
| 31. க்ரந்தசதுஷ்டய அநுஸந்தான தனியன்கள் ஸ்ரீ ஸந்நிதி க்ரமம் (ஸம்ஸ்க்ருதம் தமிழ்) | 50.00 |
| 32. மஹாபாரதம் 16 பாகங்கள் | 1700.00 |
| **33. Sri Vaishnavam** | **40.00** |
| 34. தைத்திரீய க்ருஷ்ண யஜுர்வேதம் 2 பாகங்கள் | 600.00 |
| 35. மந்த்ரராஜபத ஸ்தோத்ரம் | 15.00 |
| 36. ஸ்ரீரங்கநாத பாதுகா அஷ்டோத்தர சதநாமாவளி | 100.00 |
| **37. Sri Ahobila Math Profile & Branch Details** | **50.00** |

# பஞ்சாங்க ஸங்க்ரஹம்

ஶார்வரி ஞூ -- தக்ஷிணாயனம் -- வருஷ ருது,

ஆவணி - புரட்டாசி மீ (ஸிம்ம - கன்னி) (August - September 2020 )

ஸ்ரீ உ.வே. பழவேரி, வில்லிவலம் லக்ஷ்மீநரஸிம்ஹாசார்யர் ஸ்வாமி,
ஆராதகர், ஆஸ்தான வித்வான், ஸ்ரீமடம்

| Aug. | ஆவணி | | |
|---|---|---|---|
| 17 | 01 | திங்கள் | த்ரயோதஶி 13.19 (காலை 11.20) புனர்வஸு 00.17 (காலை 06.07) ஶூன்ய திதி - விஷ்ணுபதி |
| 18 | 02 | செவ்வாய் | சதுர்தஶி 10.38 ஆயில்யம் 57.56 அமாவாஸ்யை திதி ஸர்வ அமாவாஸ்யை |
| 19 | 03 | புதன் | அமாவாஸ்யை 06.53 சுக்ல ப்ரதமை திதி மகம் 55.26 தர்ப்ப ஸங்க்ரஹம் |
| 20 | 04 | வியாழன் | ப்ரதமை 2.23 த்விதீயை திதி 54.44 பூரம் 52.09 |
| 21 | 05 | வெள்ளி | த்ருதீயை திதி 51.27 உத்திரம் 48.28 |
| 22 | 06 | சனி | சதுர்த்தி திதி 45.28 ஹஸ்தம் 44.28 - **ஸ்ரீமதழகியசிங்கர் ஸ்ரீவண் ஶடகோப ஸ்ரீவேதாந்த தேஶிக யதீந்த்ர மஹாதேஶிகன் (44ம் பட்டம் முக்கூர் ஸ்ரீமதழகியசிங்கர்) 125வது திருநக்ஷத்ரம் ஸாம உபாகர்மா** |
| 23 | 07 | ஞாயிறு | பஞ்சமி திதி 39.23 சித்ரா 40.21 |
| 24 | 08 | திங்கள் | ஷஷ்டி திதி 33.23 ஸ்வாதீ 36.19 |
| 25 | 09 | செவ்வாய் | ஸப்தமி திதி 27.40 விசாகம் 32.35 |
| 26 | 10 | புதன் | அஷ்டமி 22.29 அஷ்டமி - நவமி திதி த்வயம் அனுஷம் 29.24 |
| 27 | 11 | வியாழன் | நவமி 17.57 தஶமி திதி கேட்டை 26.54 - **ஸ்ரீமதழகியசிங்கர் ஸ்ரீவண் ஶடகோப ஸ்ரீமந்நாராயண யதீந்த்ர மஹாதேஶிகன் (2ம் பட்டம்) திருநக்ஷத்ரம்** |
| 28 | 12 | வெள்ளி | தஶமி 14.12 ஏகாதஶி திதி மூலம் 25.12 - **ஸ்ரீமதழகியசிங்கர் ஸ்ரீவண் ஶடகோப ஸ்ரீரங்கநாத ஶடகோப யதீந்த்ர மஹாதேஶிகன் (28ம் பட்டம்) திருநக்ஷத்ரம்** |
| 29 | 13 | சனி | ஏகாதஶி 11.25 த்வாதஶி திதி பூராடம் 24.31 **ஸர்வ ஏகாதஶி** |
| 30 | 14 | ஞாயிறு | த்வாதஶி 09.50 த்ரயோதஶி திதி உத்திராடம் 25.01 **ப்ரதோஷம்** |
| 31 | 15 | திங்கள் | த்ரயோதஶி 09.30 சதுர்தஶி திதி ஶ்ரவணம் 26.43 **ஶ்ரவண வ்ரதம்** |
| **Sep.** | | | |
| 01 | 16 | செவ்வாய் | சதுர்தஶி 10.24 பௌர்ணமி திதி அவிட்டம் 29.38 |
| 02 | 17 | புதன் | பௌர்ணமி 12.39 க்ருஷ்ண ப்ரதமை திதி சதயம் 33.48 **மஹாளயபக்ஷம் ஆரம்பம்** |
| 03 | 18 | வியாழன் | ப்ரதமை 16.02 த்விதீயை திதி பூரட்டாதி 38.58 |
| 04 | 19 | வெள்ளி | த்விதீயை 20.16 அதிதி உத்திரட்டாதி 44.53 |
| 05 | 20 | சனி | த்ருதீயை திதி 25.03 ரேவதி 51.12 |

| | | | |
|---|---|---|---|
| 06 | 21 | ஞாயிறு | சதுர்த்தி திதி 30.05 அஸ்விநீ 57.37 |
| 07 | 22 | திங்கள் | பஞ்சமி திதி 34.53 பரணி 60.00 **மஹாபரணி** |
| 08 | 23 | செவ்வாய் | ஷஷ்டி 39.09 பரணி 03.41 |
| 09 | 24 | புதன் | ஸப்தமி திதி 42.34 க்ருத்திகை 09.02 **வைகானஸ ஸ்ரீஜயந்தி** |
| 10 | 25 | வியாழன் | அஷ்டமி திதி 44.52 ரோஹிணீ 13.27 **மத்யாஷ்டமி** |
| | | | **பாஞ்சராத்ர ஸ்ரீஜயந்தி - முனித்ரய ஸ்ரீஜயந்தி** |
| 11 | 26 | வெள்ளி | நவமி திதி 45.52 ம்ருகசீர்ஷம் 16.40 |
| 12 | 27 | சனி | தசமி திதி 45.39 திருவாதிரை 18.38 **மஹாவ்யதீபாதம்** |
| 13 | 28 | ஞாயிறு | ஏகாதசி திதி 44.12 புனர்வஸு 19.26 **ஸர்வ ஏகாதசி** |
| 14 | 29 | திங்கள் | த்வாதசி திதி 41.31 புஷ்யம் 19.01 **ஸந்யஸ்த மஹாளயம்** |
| 15 | 30 | செவ்வாய் | த்ரயோதசி திதி 37.52 ஆயில்யம் 17.33 **ப்ரதோஷம்** |
| | | | **கஜச்சாயை** |
| 16 | 31 | புதன் | சதுர்தசி திதி 33.26 மகம் 15.13 போதாயன அமாவாஸ்யை |
| | | | **சஸ்த்ரஹத மஹாளயம்** |
| | புரட்டாசி | | |
| 17 | 01 | வியாழன் | அமாவாஸ்யை 28.19 பூரம் 12.11 **ஸர்வ மஹாளய** |
| | | | **அமாவாஸ்யை கன்யாரவி 00.04 ஷடசீதி - சூன்யதிதி** |
| 18 | 02 | வெள்ளி | சுக்ல ப்ரதமை 22.41 ப்ரதமை - த்வதீயை திதி த்வயம் |
| | | | உத்திரம் - 08.34 |
| 19 | 03 | சனி | த்விதீயை 16.43 த்ருதீயை திதி ஹஸ்தம் 04.33 |
| 20 | 04 | ஞாயிறு | த்ருதீயை 10.41 சதுர்த்தி திதி சித்ரா 00.24 ஸ்வாதீ 55.57 |
| 21 | 05 | திங்கள் | சதுர்த்தி 04.45 பஞ்சமி திதி 54.24 விசாகம் 52.36 |
| 22 | 06 | செவ்வாய் | ஷஷ்டி திதி 53.57 அனுஷம் 49.13 |
| 23 | 07 | புதன் | ஸப்தமி திதி 49.31 கேட்டை 46.33 **ஸ்ரீமதாதிவண் சடகோப** |
| | | | **யதீந்த்ர மஹாதேசிகன் (முதல் பட்டம்) திருநக்ஷத்ரம்** |
| 24 | 08 | வியாழன் | அஷ்டமி திதி 45.49 மூலம் 44.37 |
| 25 | 09 | வெள்ளி | நவமி திதி 43.11 பூராடம் 43.44 |
| 26 | 10 | சனி | தசமி திதி 41.41 உத்திராடம் 43.58 |
| 27 | 11 | ஞாயிறு | ஏகாதசி திதி 41.23 ச்ரவணம் 45.21 - **ஸர்வ ஏகாதசி** |
| | | | **ஸ்வாமி ஸ்ரீதேசிகன் திருநக்ஷத்ரம்** ✵ |

**ஸ்ரீ கோபால விம்சதி:**



ஆவிர்பவத்வனிப்ருதாபரணம் புரஸ்தாத்
ஆகுஞ்சிதைக சரணம் நிப்ருதாந்ய பாதம் ।
தத்நா நிமந்த முகரேண நிபத்த தாளம்
நாதஸ்ய நந்த பவனே நவநீத நாட்யம் ।। (4)

ஒருகால் மடக்கியதும், அசையாமல் இருக்கும் மற்றொரு காலின் நிலையையுடையதும் அசைகின்ற ஆபரணங்களையுடையதும் கடைவதால் ஒலிக்கின்ற ஓசையால் தாளம் அமைக்கப்பட்டதும் நந்தபவநத்தில் நாதன் செய்யும் நவநீத நாட்யம் (வெண்ணைக்காக ஆடிய நர்த்தனம்) என் கண் முன்னே தோன்றட்டும். தேஜஸ்வி

# ஸங்கல்பம்

*ஸிம்ம ஸங்க்ரமண தர்ப்பணம் - ஶார்வரீ ஞூ ஆவணி மீ 1ந் தேதி (17.8.2020) திங்கட்கிழமை த்ரயோதஶி 13.19 (காலை 11.20 மணி) புனர்வஸூ 00.17 (காலை 06.07 மணி) புஷ்யம் 59.24 வ்யதீபாதம் 55.27 வணிஜை 13.19 விஷ்ணுபதி)*

*1. ஶார்வரீ நாம ஸம்வத்ஸரே 2. தக்ஷிணாயனே 3. வர்ஷ ருதௌ 4. ஸிம்ம மாஸே 5. க்ருஷ்ண பக்ஷே 6. த்ரயோதஶ்யாம் புண்யதிதௌ 7. இந்து வாஸர 8. புஷ்ய நக்ஷத்ர யுக்தாயாம் 9. வ்யதீபாத யோக 10. வணிஜை கரண (ஸ்ரீவிஷ்ணுயோக ஸ்ரீவிஷ்ணுகரண சுபயோக சுபகரண) ஏவங்குண விசேஷண விசிஷ்டாயாம் அஸ்யாம் 11. த்ரயோதஶ்யாம் புண்யதிதௌ 12. ஸிம்ம ஸங்க்ரமண ஶ்ராத்த ப்ரதிநிதி திலதர்ப்பணம் கரிஷ்யே.*

---

*அமாவாஸ்யை தர்ப்பணம் - ஶார்வரீ ஞூ ஆவணி மீ 2ந் தேதி (18.8.2020) செவ்வாய்க்கிழமை சதுர்தஶி 10.38 (காலை 10.15 மணி) ஆயில்யம் 57.56 வரீயான் 50.03 சகுனி 10.38 ஸர்வ அமாவாஸ்யை*

*1. ஶார்வரீ நாம ஸம்வத்ஸரே 2. தக்ஷிணாயனே 3. வர்ஷ ருதௌ 4. ஸிம்ம மாஸே 5. க்ருஷ்ண பக்ஷே 6. சதுர்தஶ்யாம் / அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ 7. பௌம வாஸர 8. ஆஶ்லேஷா நக்ஷத்ர யுக்தாயாம் 9. வரீயான் யோக 10. சகுனி கரண / சதுஷ்பாத கரண (ஸ்ரீவிஷ்ணுயோக ஸ்ரீவிஷ்ணுகரண சுபயோக சுபகரண) ஏவங்குண விசேஷண விசிஷ்டாயாம் அஸ்யாம் 11. சதுர்தஶ்யாம் / அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ 10. தர்ஶ ஶ்ராத்த ப்ரதிநிதி திலதர்ப்பணம் கரிஷ்யே.*

---

*மஹாளய (அபபரணி) தர்ப்பணம் - ஶார்வரீ ஞூ ஆவணி மீ 22ந் தேதி (7.9.2020) திங்கட்கிழமை பஞ்சமி 34.53 பரணி 60.00 த்ருவம் 27.06 தைதுலை 34.53 மஹாபரணி*

*1. ஶார்வரீ நாம ஸம்வத்ஸரே 2. தக்ஷிணாயனே 3. வர்ஷ ருதௌ 4. ஸிம்ம மாஸே 5. க்ருஷ்ண பக்ஷே 6. பஞ்சம்யாம் புண்யதிதௌ 7. இந்து வாஸர 8. அபபரணீ நக்ஷத்ர யுக்தாயாம் 9. த்ருவ யோக 10. தைதுலை கரண (ஸ்ரீவிஷ்ணுயோக ஸ்ரீவிஷ்ணுகரண சுபயோக சுபகரண) ஏவங்குண விசேஷண விசிஷ்டாயாம் அஸ்யாம் 11. பஞ்சம்யாம் புண்யதிதௌ 12. ஸக்ருந் மஹாளய ஶ்ராத்த ப்ரதிநிதி திலதர்ப்பணம் கரிஷ்யே.*

---

*மஹாளய (மத்யாஷ்டமி) தர்ப்பணம் - ஶார்வரீ ஞூ ஆவணி மீ 25ந் தேதி (10.9.2020) வியாழக்கிழமை அஷ்டமி 44.52 ரோஹிணீ 13.27 மத்யாஷ்டமி வஜ்ரம் 27.52 பாலவம் 13.43*

*1. ஶார்வரீ நாம ஸம்வத்ஸரே 2. தக்ஷிணாயனே 3. வர்ஷ ருதௌ 4. ஸிம்ம மாஸே 5. க்ருஷ்ண பக்ஷே 6. அஷ்டம்யாம் புண்யதிதௌ 7. குருவாஸர 8. ரோஹிணீ / ம்ருகசீர்ஷ நக்ஷத்ர யுக்தாயாம் 9. வஜ்ரயோக 10. பாலவ கரண / கௌளவ கரண (ஸ்ரீவிஷ்ணுயோக ஸ்ரீவிஷ்ணுகரண சுபயோக சுபகரண) ஏவங்குண விசேஷண விசிஷ்டாயாம் அஸ்யாம் 11. அஷ்டம்யாம் புண்யதிதௌ 12. ஸக்ருந் மஹாளய ஶ்ராத்த ப்ரதிநிதி திலதர்ப்பணம் கரிஷ்யே.*

☞

*வ்யதீபாத மஹாளய தர்ப்பணம் - ஶார்வரீ ஸூ ஆவணி மீ 27ந் தேதி (12.09.2020) சனிக்கிழமை தஶமி 45.39 திருவாதிரை 18.38 (பகல் 01.27 மணி வரை) வ்யதீபாதம் 23.52 வணிஜை 15.46*

*1. ஶார்வரீ நாம ஸம்வத்ஸரே 2. தக்ஷிணாயனே 3. வர்ஷ ருதௌ 4. ஸிம்மமாஸே 5. க்ருஷ்ண பக்ஷே 6. தஶம்யாம் புண்யதிதௌ 7. ஸ்திர வாஸர 8. ஆர்த்ரா நக்ஷத்ர யுக்தாயாம் 9. வ்யதீபாத யோக 10. வணிஜைகரண (ஸ்ரீவிஷ்ணுயோக ஸ்ரீவிஷ்ணுகரண சுபயோக சுபகரண) ஏவங்குண விஶேஷண விஶிஷ்டாயாம் அஸ்யாம் 11. தஶம்யாம் புண்யதிதௌ 12. ஸக்ருந் மஹாளய ஶ்ராத்த ப்ரதிநிதி திலதர்ப்பணம் கரிஷ்யே.*

---

*கஜச்சாயை மஹாளய தர்ப்பணம் - ஶார்வரீ ஸூ ஆவணி மீ 30ந் தேதி (15.9.2020) செவ்வாய்க்கிழமை த்ரயோதஶீ 37.52 ஆயில்யம் 17.33 (பகல் மணி 1.00) சிவம் 10.42 வணிஜை 37.52*

*1. ஶார்வரீ நாம ஸம்வத்ஸரே 2. தக்ஷிணாயனே 3. வர்ஷ ருதௌ 4. ஸிம்ம மாஸே 5. க்ருஷ்ண பக்ஷே 6. த்ரயோதஶ்யாம் புண்யதிதௌ 7. பௌமவாஸர 8. ஆஶ்லேஷா நக்ஷத்ரயுக்தாயாம் 9. சிவ யோக / ஸித்தம்யோக 10. வணிஜை கரண (ஸ்ரீவிஷ்ணுயோக ஸ்ரீவிஷ்ணுகரண சுபயோக சுபகரண) ஏவங்குண விசேஷண விசிஷ்டாயாம் அஸ்யாம் 11. த்ரயோதஶ்யாம் புண்யதிதௌ 12. ஸக்ருந் மஹாளய ஶ்ராத்த ப்ரதிநிதி திலதர்ப்பணம் கரிஷ்யே.*

---

*மஹாளய அமாவாஸ்யை தர்ப்பணம் /கன்யா ஸங்க்ரமண தர்ப்பணம் - ஶார்வரீ ஸூ புரட்டாசி 1ந்தேதி (17.9.2020) வியாழக்கிழமை அமாவாஸ்யை 28.19 பூரம் 12.11 (காலை 10.52 மணி) சுபம் 50.58 நாகவம் 28.19 ஸர்வ அமாவாஸ்யை, கன்னி ரவி 00.04*

*1. ஶார்வரீ நாம ஸம்வத்ஸரே 2. தக்ஷிணாயனே 3. வர்ஷருதௌ 4. கன்யாமாஸே 5. க்ருஷ்ண பக்ஷே 6. அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ 7. குருவாஸர 8. பூர்வ பல்குனி / உத்தரபல்குனி நக்ஷத்ரயுக்தாயாம் 9. சுபயோக 10. நாகவகரண (ஸ்ரீவிஷ்ணுயோக ஸ்ரீவிஷ்ணுகரண சுபயோக சுபகரண) ஏவங்குண விசேஷண விசிஷ்டாயாம் அஸ்யாம் 11. அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ 12. தர்ஶ ச்ராத்த ப்ரதிநிதி திலதர்ப்பணம் கரிஷ்யே (கன்யா ஸங்க்ரமண ச்ராத்த ப்ரதிநிதி திலதர்ப்பணம் கரிஷ்யே.)*

*குறிப்பு 1 - புரட்டாசி 1ந் தேதி (17.9.2020) வியாழக்கிழமை அன்று கன்யா ஸங்க்ரமணமும், அமாவாஸ்யையும் ஸம்பவிக்கிறது. அன்றைய தினம் தர்ப்பணம் எப்படிப் பண்ணுவது? என்ற ஸந்தேஹம் ஏற்படுகிறது. இதற்கு ஸமாதானத்தை ஸ்ரீமதழகியசிங்கர் அருளிய ஸ்ரீவைஷ்ணவ ஸதாசார நிர்ணயத்தில் அநுபந்தத்தில் உள்ள வாக்யங்களைக் கீழே குறிப்பிடுகிறோம்.*

*'அமாவாஸ்யை தர்ப்பணத்துடன் ஸங்க்ரமண (மாதப்பிறப்பு) தர்ப்பணம் சேர்ந்தால் மாஸப்பிறப்பு தர்ப்பணத்தை மட்டுமே செய்யவேணும். இரண்டு தர்ப்பணங்களில் ஒன்று நியதம் மற்றொன்று அநியதம். இவற்றுள் அநியதம் பலமுள்ளதால் அதை மட்டும் செய்து மற்றொன்றை விட்டு விடலாம்.*

*ஆக இவ்வளவால் ஸமான தேவதைகளைக் கொண்ட நியத - அநியத ச்ராத்தங்களுடைய சேர்க்கையில் அநியத (ஸங்க்ரமண) ச்ராத்தத்தை மட்டுமே செய்யவேணும். நியத ச்ராத்தத்தை விட்டுவிட வேண்டும் என்று தேறிற்று. பெரியோர்கள் சிலர் இரண்டையுமே அநுஷ்டிக்கிறார்கள். அவரவர்கள் பெரியோர்கள் உபதேசப்படிச் செய்யவும்.*

*நான்கு மாதங்கள் மட்டுமே ஸங்க்ரமண தர்ப்பணம் பண்ணுபவர்கள் அமாவாஸ்யை தர்பணத்தை மட்டும் பண்ணவும்.*

***குறிப்பு 2 - (மத்யாஷ்டமி அன்று ஸ்ரீஜயந்தி ஸம்பவிப்பதால் மஹாளய தர்ப்பணத்தை முன்பு அல்லது பின்பு ஸௌகர்யப்படி அநுஷ்டிப்பது உசிதம்.)*** ❋

# முனித்ரய ஸ்ரீஜயந்தி

*இவ்வருடத்தில் (ஶார்வரீ ஌) பஞ்சாங்கங்களில் முனித்ரய ஸ்ரீஜயந்தியை ஆவணி மீ 25ந்தேதி (10.9.2020) வியாழக்கிழமை என்று குறிப்பிட்டுள்ளார்கள். அதன்படியே நாமும் ப்ரசுரித்துள்ளோம்.*

*1. ஆவணி மீ 24ந்தேதி (9.9.2020) புதன்கிழமை ஸப்தமி 42.34 (இரவு 11.02 மணி) க்ருத்திகை 09.02 (காலை 9.37 மணி)*

*2. ஆவணி மீ 25ந்தேதி (10.9.2020) வியாழக்கிழமை அஷ்டமி 44.52 (11.57 இரவு) ரோஹிணீ 13.27 (காலை 11.23)*

*ஸ்ரீமத் திருக்குடந்தை தேஶிகன் ஸ்ரீகோபாலார்ய மஹாதேஶிகன் அருளிய ஸ்ரீஜயந்தி நிர்ணயத்தில் முனித்ரய க்ரந்தங்களின் ஸாரமான அர்த்தம் என்று அருளியுள்ள தமிழாக்கத்தின் படியும், பரமஹ்ரீ கோழியாலம் ஸ்வாமி என்று ஸுப்ரஸித்தரான ஸ்ரீரங்கராமானுஜ மஹாதேஶிகனின் 'நிர்ணய ஸப்ததி' என்கிற க்ரந்த்த்தில் ஸ்ரீஜயந்தி நிர்ணயங்களுக்கு விளக்கங்களை சுருக்கமாகச் சேர்த்து ஸாதித்துள்ளவற்றின் படியும், 15 குறிப்புகளில் 5வது குறிப்பின்படியும், 9வது குறிப்பில் குறிப்பிட்டுள்ள புதஸோமவார முக்யத்வத்தையும் கருதி 'முதல் தினத்தில் நிஶீத காலத்தில் (சந்த்ரோதயத்தில்) (45.46) நாழிகைகள்) அஷ்டமி - ரோஹிணி ஸம்பந்தமும், புதஸோமவாரம் ஸம்பந்தமிருக்கும்போது முதல் தினத்திலேயே வ்ரதத்தைச் செய்ய வேண்டியது' என்று உள்ளபடியால் இந்த வருடம் ஸ்ரீமுனித்ரய ஸம்ப்ரதாயஸ்தர்கள் ஆவணி 24ந்தேதி (9.9.2020) புதன்கிழமை ஸ்ரீஜயந்தி வ்ரதத்தையும் அன்றே தந்த்ரேண ஜன்மாஷ்டமி வ்ரதத்தையும் அநுஷ்டிக்கவேண்டும் என்று தோன்றுகிறது. (ஸ்ரீரங்கநாதபாதுகா ஜய ஌ ஆவணி மீ* Aug 2014 *ஸ்ரீஜயந்தி விளக்கம்) மேலும் பாரணையை* तिथ्यन्ते वा भान्ते वा *(தித்யந்தே வா பாந்தே வா) என்கிற ரீதியில் மறுநாள் (அஷ்டமி திதி 44.52 நாழிகை (.ரவு 11.57 மணிவரை) ரோஹிணீ 13.27 (காலை 11.23 மணிவரை) இவைகளின் முடிவில் பாரணை) செய்யவேண்டுமெனத் தோன்றுகிறது. அவரவர்கள் பெரியோர்கள் உபதேசப்படிச் செய்யவும்.* ❋

# மஹாளய தர்பணம்

*1) பக்ஷமஹாளய ச்ராத்தம், ஸக்ருந் மஹாளயச்ராத்தம் என்று இருவகைப்படும். 2) பக்ஷ மஹாளய ச்ராத்தம் - பக்ஷம் முழுவதும் - 16 நாட்களும் செய்வதால் திதி, நக்ஷத்ர வார தோஷம் பார்க்கவேண்டாம். வெகுசிலரே அநுஷ்டிக்கிறார்கள். 3) ஸக்ருந் மஹாளயச்ராத்தம் - க்ருஷ்ண பக்ஷத்தில் என்றேனும் ஒருநாள் ஏதேனும் ஒரு திதியில் அநுஷ்டிப்பதால் ஸக்ருந் மஹாளயம் என்று பெயர். 4) பஞ்சமிக்கு முன்னுள் மஹாளயம் பண்ணக்கூடாது. பஞ்சமிக்கு முன்னுள் மஹாபரணி வந்தால் சிலர் அன்று மஹாளய தர்பணம் செய்கிறார்கள். 5) மஹாபரணியில் செய்பவர்கள் - திதி வாரம் தோஷங்கள் பார்க்கவேண்டாம். வெள்ளிக்கிழமையிலும் பண்ணலாம். 6) மத்யாஷ்டமியில் அநுஷ்டிப்பது விசேஷம். பிதா இறந்த திதி, வ்யதீபாதம், கஜச்சாயை போன்ற நாட்களிலும் பண்ணலாம். 7) இதரநாட்களில் பண்ணுவதானல் வெள்ளிக்கிழமை, தன்னுடையவும், தன் பத்நீ - ஜ்யேஷ்ட புத்ரன் ஆகியோருடைய ஜன்ம நக்ஷத்ரம் ஆகியவற்றில் பண்ணக்கூடாது. 8) மாதாபிதாக்களின் ச்ராத்தம் அந்த மாஸத்தில் ஸம்பவித்தால் ச்ராத்தத்திற்கு முன் மஹாளய தர்பணம் பண்ணக்கூடாது. பத்நீ ரஜஸ்வலையாய் (மாதவிலக்கில்) இருந்தால் பண்ணக்கூடாது. 9) மஹாளயம் அன்ன ரூபமாகவும், தில ரூபமாகவும் பண்ணலாம். ப்ரதி வருஷமும் அன்னரூபமாகவே பண்ணவேணும் என்கிற நியமமில்லை. ஸ்மார்த்தர்கள் அந்த பக்ஷத்தில் ஹிரண்ய ரூபமாகவும், ஆமரூபமாகவும் செய்கின்றனர். 10) தான் மஹாளய தர்பணம் செய்வதற்கு முன் பிறருடைய மஹாளயத்தில் வரிக்கப்பட்டு புஜிக்கலாகாது. 11) அமாவாஸ்யாதி தர்பணங்களில் போலவே இரண்டு வர்கங்களுக்கும் புக்நங்கள் சேர்த்துத் தர்ப்பிக்க வேண்டும். காருண்ய பித்ருக்களுக்கு வேண்டாம் என்பது ஸ்ரீமதழகியசிங்கர் திருவுள்ளம். 12) காருண்ய பித்ருக்களுக்குச் செய்யவேண்டும் என்ற பக்ஷத்தில் மூன்றாவதாக இரண்டு புக்நங்களைச் சேர்த்து ஆவாஹநாதிகளைப் பண்ணித் தர்பிக்கவேண்டும். ஏற்கெனவே சேர்த்துள்ள இரண்டு வர்கங்களுக்கான புக்நங்களிலேயே இவர்களையும் ஆவாஹநம் செய்து தர்ப்பிக்கலாம் என்கின்றனர் சிலர். 13) அன்னரூபமாகச் செய்வதானல் தான் முதல் நாள் இரவு பலகாரம், தில தர்பணம் செய்பவர்கள் அன்று இரவு பலகாரம் பண்ணவும். ஸக்ருந் மஹாளயம் பண்ணுபவர்கள் பக்ஷம் முழுவதும் இரவில் பலகாரம் சிலர் பண்ணுகிறார்கள். 14) புரட்டாசியில் க்ருஷ்ண பஞ்சமி ஆரம்பித்து ஐப்பசி சுக்லபக்ஷ பஞ்சமி வரை அவகாசம் உண்டு. இதில் செய்யமுடியாதவர்கள் ஐப்பசி மாதம் முடிவதற்குள் (கார்த்திகை மாத ஆரம்பத்திற்குள்) பண்ணலாம். 15) தகப்பனர் இறந்த வருடத்திலும் (ஸபிண்டீகரணம் செய்து முடித்திருந்தால்) மஹாளய தர்பணம் பண்ணவேண்டும். 16) ஆரம்ப ஸங்கல்பம் முதலில் செய்து வருஷம், அயனம், ருது, மாஸம், திதி, வாரம், நக்ஷத்ரம் இவற்றைச் சொல்லிவிட்டு ஸக்ருந்மஹாளயச்ராத்த ப்ரதிநிதி திலதர்பணம் கரிஷ்யே என்று ஸங்கல்பித்துக் கொள்ளவேண்டும். ✵*

# ஸ்ரீமதழகியசிங்கர்களின் திருநக்ஷத்ரங்கள், வைபவங்கள்

## ஸ்ரீமதழகியசிங்கர் (௨ம் பட்டம்)

## ஸ்ரீவண் ஶடகோப ஸ்ரீமந்நாராயண யதீந்த்ர மஹாதேஶிகன்

*பூர்வாஶ்ரமம்*

*திருமலை, நம்பாக்கம், க்ருஷ்ணமாசார்யர் ஸ்வாமி*

*தனியன் -*

*ஸ்ரீஶடாரியதீஶாந பதபங்கஜஷட்பதம் ।*
*ஸ்ரீமந்நாராயணமுநிம்ஶ்ரயே*
*ஸ்ரீபாஷ்யதேஶிகம் ॥*

*திருநக்ஷத்ரம் - ஆவணி மாதம் கேட்டை*

*ஆஸ்தானத்திற்கு எழுந்தருளின காலம் -*

*பஹுதான்ய வருஷம் (கி.பி. 1458) ஏப்ரல் மாதம்.*

*செய்தருளின க்ரந்தங்கள்*

*அறுபது, 1. திருவாராதன க்ரமம் 2. ந்யாஸ தஶக வ்யாக்யானம் 3. ஸந்த்யா பாஷ்யம் முதலியன.*

*திருநாட்டிற்கு எழுந்தருளின காலம்*

*நந்தன வருஷம் பங்குனி மாதம் க்ருஷ்ண பக்ஷம் த்விதீயை (கி.பி. 1473) மார்ச் மாதம்.*

*அக்ரஹார ஸ்தாபிதம் - மதுரமங்கலம்*

*எழுந்தருளின திவ்யதேஶங்கள்*

*திருநாராயணபுரத்திலிருந்து ஸ்ரீஅஹோபிலம் எழுந்தருளி அங்கிருந்து ஸ்ரீரங்கம்வரை எல்லா திவ்யதேஶங்களும்.*

*குறிப்பு - இவ்வழகியசிங்கர் திருநாராயணபுரம் ஸ்ரீசெல்வப்பிள்ளை நியமன ப்ரகாரம் ஸ்ரீமதாதிவண் ஶடகோப யதீந்த்ர மஹாதேஶிகனின் திவ்யமங்கள விக்ரஹமொன்றை ஸ்ரீசெல்வப்பிள்ளை ஸந்நிதியிலும், ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் நியமன ப்ரகாரம் ஸ்ரீமதாதிவண் ஶடகோப யதீந்த்ர மஹாதேஶிகன் திவ்யமங்கள விக்ரஹமொன்றை ஸ்ரீமதாதிவண் ஶடகோப யதீந்த்ர மஹாதேஶிகன் ப்ருந்தாவனத்திலும் ஸ்ரீமதாதிவண் ஶடகோப யதீந்த்ர மஹாதேஶிகன் திருநாட்டிற்கு எழுந்தருளின பிறகு திருப்ரதிஷ்டைகளைச் செய்தருளினர்.*

*இவ்வனுஷ்டானத்தைப் பின்பற்றி ஒவ்வொரு மடங்களிலும் ஸ்ரீமதாதிவண் ஶடகோப யதீந்த்ர மஹாதேஶிகன் திவ்யமங்கள விக்ரஹங்கள் ப்ரதிஷ்டை செய்யப்பட்டு வருகின்றன.*

---

## ஸ்ரீமதழகியசிங்கர் (௨௮வது பட்டம்)

## ஸ்ரீவண் ஶடகோப ஸ்ரீரங்கநாத ஶடகோப யதீந்த்ர மஹாதேஶிகன்

*பூர்வாஶ்ரமம்*

*திருக்குறுங்குடி, நடாதூர், ஸ்ரீவத்ஸாங்கம், ஸ்ரீ உ.வே. வானமாமலாசார்ய ஸ்வாமி.*

*தனியன் -*

*ஸ்ரீவாஸ ரங்கபதிவீரரகூத்வஹாதி*
*வேதாந்தஸம்யவமிவரைர்*
*குருஸார்வபௌமை: ।*
*ஸம்ப்ரேக்ஷிதம் கருணயா பரிபூர்ணபூதம்*
*ஸ்ரீரங்கநாத ஶடகோபமுநிம் பஜாம: ॥*

*திருநக்ஷத்ரம் - ஆவணி மாதம் மூலம்*

*ஆஸ்தானத்திற்கு எழுந்தருளின காலம்*

*விஜய வருஷம் ஆனி மாதம் (7.7.1833)*

*திருநாட்டிற்கு எழுந்தருளின காலம்*

*துர்முகி வருஷம் மார்கழி மாதம் க்ருஷ்ண பக்ஷம் ஸப்தமி, வ்யாழக்கிழமை (29.12.1836)*

ப்ருந்தாவனம்

ஸ்ரீமதுராந்தகத்தில்

ஆஸ்தான நிர்வாஹ காலம்

3 வருஷம் 5 மாதம்

எழுந்தருளின திவ்ய தேஶங்கள்

கத்தவால் முதல் மதுராந்தகம் வரை

குறிப்பு - இவ்வழகியசிங்கர் ஸ்ரீந்ருஸிம்ஹ ஸாக்ஷாத்காரம் பெற்றவர். ஸ்ரீபாஷ்யகாரர், ஸ்ரீமதாதிவண் ஶடகோப யதீந்த்ர மஹாதேஶிகன், ஸ்ரீஷஷ்ட பராங்குஶ யதீந்த்ர மஹாதேஶிகன், ஸ்ரீஸ்ரீநிவாஸ யதீந்த்ர மஹாதேஶிகன்இவர்களின் அனுஷ்டானத்தைப் பின்பற்றி தன்மந்த்ர ப்ரபாவத்தாலே ஆச்ரிதர்களின் கஷ்ட நஷ்டங்களை நிவர்த்தி செய்த மஹான். இவ்வழகியசிங்கரும், பூர்வாஶ்ரம திருத்தம்பியாரான ஸ்ரீவத்ஸாங்கம், நடாதூர், ஸ்ரீ உ.வே. வேங்கடநாராயணாசார்ய ஸ்வாமியும் அத்யந்தம் மேதாவிகள். ஶ்ருதப்ரகாஶிகை, முப்பதாயிரப்படி முதலிய தர்ஶந க்ரந்தங்களை முகஸ்தமாக ஸாதிக்கும் சக்தி வாய்ந்தவர்கள். வாக்யார்த்தம் செய்வதில் அஸஹாய சூரர்கள். நல்ல அனுஷ்டாதாக்கள். இவ்வழகியசிங்கர் தர்ஶந க்ரந்தங்களில் வாக்யார்த்தம் ஸாதித்து ஆஸ்தானத்தை திருவுள்ளம் பற்றியவர். இவ்வழகியசிங்கர் ப்ருந்தாவனத்தில் இன்றைக்கும் ப்ரார்த்தனைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. தான் திருநாட்டிற்கு எழுந்தருளும் ஸமயத்தில் தனக்குப்பின் லாலாப்பேட்டை வஜ்ரம் ஸ்ரீபராங்குஶ ராமாநுஜ யதீந்த்ர மஹாதேஶிகனை நியமித்து விட்டு, அந்த ஸ்வாமியையும் தனக்கு ஶ்ரமம் வந்தவாறே ஸ்ரீவத்ஸாங்கம் இளநகர், கதாதரபுரம் ஸ்ரீ உ.வே. சக்ரவர்த்யாசார்ய ஸ்வாமியினிடம் இவ்வாஸ்தானத்தை ஒப்புவிக்கும்படியாயும் நியமித்து அருளினார்.

ஒரு சமயத்தில் பகவத் பக்தியில்லாத தனவந்தனான ஒரு ப்ரபு அநேக த்ரவ்யத்தைக் கொண்டு வந்து ஸ்ரீஅழகியசிங்கர் திருவடிகளில் ஸமர்ப்பிக்க, ஸ்ரீஅழகியசிங்கரும், அந்த ப்ரபுவின் மமதையை அடக்குவதற்காக அத்திரவியத்தை, மாதுளம்பழ முத்துக்களுடன் சேர்த்து ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுக்கு நிவேதனஞ்செய்து, கோஷ்டிக்கு விநியோகம் செய்து விட்டார்.

33வது பட்டம் ஸ்ரீவண் ஶடகோப ஸ்ரீஶடகோப யதீந்த்ர மஹாதேஶிகனும், 34வது பட்டம் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்யபாதுகாஸேவக ஸ்ரீஶடகோப ராமாநுஜ யதீந்த்ர மஹாதேஶிகனும் இம் மஹானிடத்தில் அத்யந்தம் ப்ரதிபத்தியுடன் கூடினவர்களாயிருந்தார்கள் என்பது ஸுப்ரஸித்தம்.

---

## ஸ்ரீமதழகியசிங்கர் (44வது பட்டம்)

## ஸ்ரீவண் ஶடகோப ஸ்ரீவேதாந்த தேஶிக யதீந்த்ர மஹாதேஶிகன்

பூர்வாஶ்ரமம்

வித்வான் முக்கூர் ராஜகோபாலாச்சார்யர்

தனியன் -

ஸ்ரீரங்கநாத ஶடகோப யதீந்த்ர த்ருஷ்டம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹ ஶடஜித் கருணைகபாத்ரம் ।
ஸ்ரீரங்கவீரரகுராட் ஶடகோபஹ்ருத்யம்
வேதாந்ததேஶிகயதீந்த்ரமஹம் ப்ரபத்யே ।।

திருநக்ஷத்ரம் - ஆவணி மாதம் ஹஸ்தம் (ஆகஸ்ட் 1895)

ஆஸ்தானத்திற்கு எழுந்தருளின காலம்

ஹேமலம்ப கார்த்திகை 12உ (27.11.1957) ஶ்ரவணம்

ஆஶ்ரம ஸ்வீகாரம்

கார்த்திகை 22உ 6.12 57 பட்டாபிஷேகம்

செய்தருளிய க்ரந்தங்கள் - கைங்கர்யங்கள்

நைமிசாரண்யத்தில் ப்ருந்தாவனமும், யாத்ரிகர்கள் தங்குவதற்கு ஆறு அறைகளும், முக்கூரில் கோவில், காஞ்சிபுரத்தில் நம்மாழ்வார் ஸந்நிதி, விளம்பி மாசி ஶ்ரவணத்தில் நம்மாழ்வார், ஸ்ரீதேஶிகன் ப்ரதிஷ்டை, புள்ளம்பூதங்குடியில் மடம், இஞ்சிமேட்டுக் கோயிலில் தாயார் ஸந்நிதி, இஞ்சிமேட்டு ஸ்ரீஅழகியசிங்கர் அவதார ஸ்தலத்தில் விசாலமான கருங்கல் மண்டபம், ஸ்ரீஅஹோபிலத்தில் ராஜகோபுரம், திருவள்ளூரில் சைத்ர ப்ரஹ்மோத்ஸவ மண்டபம், ஹ்ருத்தாபநாசினி புஷ்கரிணி, பம்பாய் செம்பூரில் ஸ்ரீலக்ஷ்மீநாராயணன் கோவில், கல்யாண மண்டபம், புள்ளம்பூதங்குடியில் ஜீர்ணோத்தாரணம், ஆதனூரில் ராஜகோபுரம், மூலவர் ப்ரதிஷ்டை, திருவஹீந்த்ரபுரத்தில் ஸ்ரீஅஹோபிலமடம் (கருங்கல் கட்டிடம்).

மற்றும் நடைபெற்றவை - ஸ்ரீஅஹோபிலம் தாயார் ஸந்நிதி விமானம் புதுப்பித்து ஸம்ரோக்ஷணம், திருவள்ளூரில் பெருமாள் ஸந்நிதி, ஸ்ரீராமன் ஸந்நிதி, ஆண்டாள் ஸந்நிதி, செல்வர் மண்டபம், விமானங்கள் ஜீர்ணோத்தாரணம், மூலவர் உத்ஸவர்களுக்கு முத்தங்கி, உத்ஸவருக்கு ரத்னங்கி, கண்ணாடியறை, வெள்ளிக்கதவுகள் முதலியன. வானமாமலையில் மடம், மதுராந்தகம் ஸம்ஸ்க்ருத கலாசாலை மேல்மாடிக் கட்டிடம். இவையெல்லாவற்றிற்கும் சிகரமாக ஸ்ரீரங்கம் தெற்கு ராஜகோபுரம்.

அருளிச்செய்த க்ரந்தங்கள்

1. இஞ்சிமேட்டு ஸ்ரீஅழகியசிங்கர் மங்களம் 2. ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ கராவலம்ப ஸ்தோத்ரம் 3. ஶாரீரகாதிகரணக்ரமபோதிநீ 4. ப்ரஹ்மஸூத்ரார்த்த பத்யமாலிகா 5. விசிஷ்டாத்வைத ஸித்தாந்த தத்துவ ஸங்க்ரஹம், 6. லக்ஷ்மீந்ருஸிம்ஹ ப்ரபத்தி மங்களம் 7. தயாஸாகர சதகம் 8. பஞ்சாம்ருத ஸ்தோத்ரம் 9. ஸ்ரீஅஹோபிலமடம் ஸ்ரீஅழகியசிங்கர் மங்களமாலிகை 10. ஸதுபதேசம் முதலிய 150க்கு மேலான அருள்மொழிகள் 11. திருப்பாவைக்கு ஸுபோதிநி என்கிற வ்யாக்யானம்.

ஸஞ்சாரம் - நைமிசாரண்யம் முதல் ஸேது வரையில். சென்னை, பெங்களூர், ஹைதராபாத், பம்பாய் முதலிய நகரங்களுக்குப் பலதடவை.

ஆஸ்தாந வித்வான் இஞ்சிமேடு, தேவனூர்விளாகம் அழகியசிங்கர்கள் காலம்.

திருநாட்டிற்கு எழுந்தருளின காலம்

ஆங்கிரஸ வருஷம் ஆடி மாதம் 32உ க்ருஷ்ண த்ருதீயை பூரட்டாதி (16.8.1992)

ப்ருந்தாவனம்

ஸ்ரீரங்கம் தசாவதார ஸந்நிதி

ஆஸ்தாந நிர்வாஹ காலம்

35 வருஷம். ✵



SRI AHOBILA MATH
8-A, Aarathi Nagar,
(Behind Selaiyur Police Station)
East Tambaram, Chennai-600 059

श्रीमदहोबिल मठम् ஸ்ரீ அஹோபில மடம் Sri Ahobila Math

Date:-28.11.2017

Just as Sri Nrisimhapriya (Tamil) was established 75 years ago by Injimedu Srimad Azhagiasingar, the English edition of Sri Nrisimhapriya was begun with the benediction of Villivalam Srimad Azhagiasingar 13 years ago, with the noble intention of imparting Sampradayic wisdom to those eager for knowledge, but lacking adequate mastery over Tamil. Since then, the journal has made significant progress and occupies the premier position among Sri Vaishnava religious journals in English.

The English edition of Sri Nrisimhapriya not only brings to its readers distilled wisdom of Sri Vaishnava tenets every month, but also serves as a link between the Sri Matham and its disciples. We confer our benediction upon Sri Nrisimhapriya (English) for achieving spectacular increase in readership and also for making its readers wise and spiritually-inclined.

It would give us pleasure to see all devotees patronize the English edition of Sri Nrisimhapriya by becoming subscribers.


Mangalani Bhavanthu

H. H. THE JEER OF
SRI AHOBILA MUTT

Central Office: 30, Venkatesa Agraharam, Mylapore, Chennai-600004 Email:azhagiyasingarsam@gmail.com

॥श्रीः॥
॥ श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः ॥

## ஸம்பாதகரின் குறிப்புகள்



योऽन्तः प्रविश्य मम वाचमिमां प्रसुप्तां सञ्जीवयत्यखिलशक्तिधरः स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरण श्रवणत्वगादीन् प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ।।

# ஜன்ம ஸாபல்யம்

**अद्य मे सफलं जन्म जीवितं च सुजीवितम् ।**
**लक्ष्मीनृसिंहं सद्भक्त गुरुवर्यान् भजेऽनिशम् ॥**

*இன்று தான் எனது ஜன்மம் பயனுடைத்தானது. பிறந்த காலங்கள் எத்தனையோ ஆயினும் அன்று நான் பிறந்திலேன், பிறந்த பின் மறந்திலேன் என்னும்படி இப்போதுதான் ஜீவனம் பெற்றேன். அது எப்படி தெரியுமா? லக்ஷ்மீ நருஸிம்ஹனின் ஸத்பக்தர்களான குரு வரர்களை (அழகியசிங்கர்களை) முப்போதும் வணங்குகிறேன். இதனால் என் ஸம்ஸார இராத்ரி கழிந்தது. ஜீவிதமும் ப்ரயோஜனமடைந்தது என்று மஹானான முக்கூர் ஸ்ரீமதழகியசிங்கர் ஶரணாகதி விஷயமாக அநுஸந்தானம் செய்தருள்கிறார்.*



*ஆநுகூல்ய ஸங்கல்பம், ப்ராதிகூல்ய வர்ஜனம், ரக்ஷிஷ்யதி எனும் விஶ்வாஸம், கோப்த்ருத்வ வரணம், கார்ப்பண்யம் எனும் ஐந்து அங்கங்களுடன் கூடி அங்கியான ஆத்ம நிக்ஷேபம் சொல்லப்படுகிறது. இவற்றுடன் ஸ்ரீப்ரபத்தி பூர்வகமாக ஸ்ரீமதழகியசிங்கர் அத்யாச்சர்யமான ஶரணாகதி அநுஸந்தான க்ரமத்தினை அனுஷ்டுப் ஶ்லோகங்களாக அருளுகிறார்.*

**प्रपन्नात् अन्येषां न दिशतिमुकुन्दः निजपदं** *என்கிறார் ஸ்வாமி ஸ்ரீதேஶிகன். அதாவது ஸுலபமாக அநுஷ்டிக்கக் கூடிய ப்ரபத்தியைத் தவிர்த்து வேறு எதைச் செய்தாலும் எம்பெருமானிடமிருந்து மோக்ஷம் பெற இயலாது. அத்தகைய ப்ரபத்தியை ஸ்ரீலக்ஷ்மீ நருஸிம்ஹனின் திருவடிகளில் ஸமர்ப்பித்தலன்றோ பிறந்த பயன்.*

**श्रीवण्शठाराति यतीन्द्रपूर्वैः**
**स्थीनेभिषिक्तैः यतिराजचन्द्रैः ।**
**संपूजितं ह्यात्मदमात्मदानां**
**लक्ष्मीनृसिंहं शरणं प्रपद्ये ॥**

*ஸ்ரீவண் ஶடாராதி யதீந்த்ர பூர்வை:*
*ஸ்தாநேபிஷிக்தை: யதிராஜ சந்த்ரை: ।*
*ஸம்பூஜிதம் ஹ்யாத்மதமாத்மதாநாம்*
*லக்ஷ்மீ நருஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்யே ॥*

*'ஸ்ரீமதாதிவண் ஶடகோப யதீந்த்ர மஹாதேஶிகன் தொடங்கி ஸ்ரீஸந்நிதி*

ஆஸ்தானத்தில் பட்டாபிஷேகம் செய்விக்கப் பட்ட எல்லா யதிராஜர்களாலும் நன்கு ஆராதிக்கப்பட்டும், தன்னைக் கொடுத்தவர்களுக்குத் தன்னைக் கொடுக்கும் ஆத்ம ஸமர்ப்பணமாகிய பரந்யாஸத்தைச் செய்பவர்களுக்கு எனக்கே தன்னைத் தந்த கற்பகம் என்றபடி தன்னைத்தரும் பரிபூர்ண ப்ரஹ்மாநுபவமான தன் ஸாயுஜ்யத்தைத் தருகிறான். அத்தகு ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹனை சரணம் அடைகிறேன் என்று ஶரணாகதிக்காகவே ஏற்பட்ட எம்பெருமானான அல்லிமாதர் புல்கநின்ற ஆயிரந்தோளன் நம்முடைய நம்பெருமானைச் சரணடைகிறோம்.

முக்கூர் ஸ்ரீமதழகியசிங்கர் ப்ரபத்தி செய்து வைக்கும் வைகரியை வர்ணிக்க வார்த்தைகளே இல்லை என்பர் பெரியோர். வெள்ளி மண்டபத்தில் விசேஷமாக ஸேவை தரும் எம்பெருமானின் திருக்கல்யாண குணங்களை நெஞ்சுருகி, கண்கள் பனிப்ப வர்ணித்து, நாஸ்திகனும் நெகிழும்படியாக உபந்யாஸம் செய்தாகுமாம். ப்ரபன்னன் விஷயமாக பிராட்டிக்கும், பெருமாளுக்குமான ஸம்வாதத்தைக் கேட்பவர்கள் வைகுந்தத்தை ப்ரத்யக்ஷமாகக் கண்டவராவாராம். இத்தகைய மஹாத்மாவான ஸ்ரீமதழகியசிங்கரின் திருவடி ஸம்பந்தம் பெற்ற ப்ரக்ருதம் ஸ்ரீமதழகியசிங்கர் தனது ஆசார்யன் திருநக்ஷத்ரத்தை பரம ஶ்ரத்தையுடன் பாரோர் போற்றும்படி நடத்தி வருகிறபடி. தற்போதுள்ள அஸாதாரண சூழலிலும் ஆசார்ய பக்திமிக்கவரான அழகியசிங்கர் யதோசிதமாக அதனைக் கொண்டாட உத்தேஶித்தாயுள்ளது, என்கிற செய்தி தேனும் பாலும் கன்னலும் அமுதமாக தித்திக்கிறது. ❋



# முக்கூர் ஸ்ரீமதழகியசிங்கர் ஸ்ரீ வேதாந்த தேஶிக யதீந்த்ர மஹாதேஶிகன் வைபவம்

*ஸ்ரீஅஹோபிலமடம் ஆஸ்தாந வித்வான்*
*ஸ்ரீ உ.வே. சோகத்தூர் ராமாநுஜாசார்யர் ஸ்வாமி, பெங்களூரு*

श्रीरङ्गनाथशठकोपयतीन्द्रदृष्टं
लक्ष्मीनृसिंहशठजित्करुणैकपात्रम् ।
श्रीरङ्गवीररघुराट् शठकोपहृद्यं
वेदान्तदेशिकयतीन्द्रमहं प्रपद्ये ॥

*ஸ்ரீமதஹோபிலமடத்தில் 44ம் பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீவண்ஶடகோப ஸ்ரீவேதாந்ததேஶிக யதீந்த்ர மஹாதேஶிகன் என்னும் ஸ்ரீமுக்கூர் ஸ்ரீமதழகியசிங்கரின் 120வது திருநக்ஷத்ர நிறைவு விழாவில், (தற்போது 125வது திருநக்ஷத்ர மஹோத்ஸவம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.) அவ்வாசார்ய ஸார்வபௌமரின் அளவற்ற உயர்ந்த கல்யாணகுணங்களின் கூட்டத்திலிருந்து சிலவற்றை, அடியேன் ஸ்வரூபத்தை ஸபலமாக்கிக் கொள்வதற்காக, விவரித்து க்ருதார்த்தனாகிறேன்.*

### *திரு அவதாரம் 1957ல் நைமிசாரண்யத்தில்*

*முக்கூர் ஸ்ரீமதழகியசிங்கர் ஆஶ்ரமத்தை ஏற்றுக் கொண்டதே ஸ்ரீமடத்துக்கு மிகவும் சோதனையான ஒரு காலகட்டத்திலும் நெருக்கடியான ஸந்தர்ப்பத்திலுமாகும். தேவனார்விளாகம் ஸ்ரீமதழகியசிங்கர் எதிர்பாராத விதமாக மிகச்சிறு ப்ராயத்திலேயே (ஷஷ்ட்யப்தபூர்த்தி கூடக் காணாமல்) திடீரென நைமிஶாரண்யத்தில் பரமபதித்ததால். உடனே, செய்வதறியாது திகைத்துக் கலங்கிய கைங்கர்யபரர்கள் எல்லோருக்கும் அபயம் அளித்து, எவ்விதத் தயக்கமுமின்றி, தன் திருமேனிப் பாங்கில்லாததையும் கணிசியாது திடநெஞ்சுடனும் ஸ்ரீமாலோலனிடத்தில் அசைக்க முடியாத பக்தி மற்றும் தன்னம்பிக்கையாலும் அங்கு அப்பொழுதே ஸ்ரீந்ருஸிம்ஹ அவதாரத்தைப் போலவே, 'அவிசார்ய தூர்ணம்' ஸந்நிதி ஆஸ்தானத்தை ஏற்றுக் கொண்டார். ஆதலால், உண்மையிலேயே ஸந்நிதி ஸம்ப்ரதாயத்தைக் காக்க வேண்டிய தருணத்தில், அதைச் செவ்வனே நிறைவேற்றிய பெருமை, 'விளையும் பயிர் முளையிலே' என்னும்படி, ஆஶ்ரம ஸ்வீகாரத்திலிருந்தே ஸம்ப்ரதாய ரக்ஷணம் செய்த முக்கூர் ஸ்ரீமதழகியசிங்கரைச் சேரும். சிங்கம் காட்டில் விளங்குவது பொருத்தமன்றோ? புராணங்களெல்லாம் உண்டான க்ஷேத்ரமும், எம்பெருமான் வனரூபியாக ஸாந்நித்யம் செய்யும் நைமிஶாரண்ய க்ஷேத்ரமாகிய திவ்ய தேஶத்திலிருந்து கிளம்பி பின்னர் அஹோபில க்ஷேத்ரத்தை அடைந்தது. திருமங்கையாழ்வார், திருவதரி, ஸாளக்ராமம், நைமிஶாரண்யம், ஸ்ரீஅஹோபிலம் என்று வரிசையாக மங்களாசாஸனம் செய்ததை ஒக்கும்.* तत्साधु

मन्येऽसुरवर्य देहिनां.... वनं गतो यद्धरिमाश्रयेत

என்று ஸ்ரீப்ரஹ்லாதாழ்வான் உபதேசித்தான். ஸம்ஸாரிகள் எல்லோருக்கும் நன்மை பயப்பது, காட்டில் சென்று, ஆராயும் சீர்மைத்தல்லாத பெருமையனான சிங்கப்பிரானை அடைக்கலம் புகுவதால், என்பதையும் நடத்தியருளினார்.

### கைங்கர்யங்கள் பற்பல

பூர்வாஶ்ரமத்தில் திருமேனி அசக்தியுடன் எழுந்தருளியிருந்த ஸந்தர்பத்தில் ஸந்யாஸ ஆஶ்ரமத்தை ஸ்வீகரித்த போதிலும், உடனே திருமேனி பாங்கு நேர்ப்பட்டுப் பற்பல கைங்கர்யங்களைப் பல ஆண்டுகள் குறைவற, ஸ்ரீமாலோலனின் அளவற்ற அருளால் ஸாதித்தது ஆஶ்சர்யமே. அதிலும் 90 திருநக்ஷத்ரங்கள் தாண்டிய பின்னர் உலகம் போற்றும் உயர் திருப்பணியான, ஸ்ரீரங்கத்தில் தெற்கு வாசலில் ப்ரதானமான ராஜகோபுரத்தைக் கட்டி, என்றென்றும் ஸ்ரீஸந்நிதியின் பெருமை



வானளாவி உயரக் காரணமானார். அஹோபில திவ்யதேஶமான, சென்று காண்டற்கரிய கோயிலான, தெய்வமல்லால் செல்லவொண்ணாச் சிங்கவேள் குன்றத்தில் ராஜகோபுர நிர்மாண ப்ரதிஷ்டைகளைத் தமது



70வது திருநக்ஷத்ரத்தில் நடத்தியது. திருவெவ்வுளூர் திவ்யதேஶத்தில், ஹ்ருத்தாபநாசினி புஷ்கரிணியைச் சீரமைத்துத் தண்ணீர் வசதியை ஏற்படுத்தியது, திருப்புள்ளம் பூதங்குடி, திரு ஆதனூர் திவ்யதேஶங்களில் ஸந்நிதிகளின் ஸம்ப்ரோக்ஷணம், பம்பாயில் செம்பூரில் ஸ்ரீமடத்தின் ஸந்நிதி நிர்மாணம் முதலியன. முக்கூர் ஸ்ரீமதழகியசிங்கரின் பகவத் பாகவத கைங்கர்யத்தில் நிலையான, சீர்மையான திருவுள்ளத்தைப் பறைசாற்றும்.

### அடியேனுக்கு முக்கூர் ஸ்ரீமதழகியசிங்கரின் அனுக்ரஹம்

முக்கூர் ஸ்ரீமதழகியசிங்கரின் ஆஶ்ரம ஸ்வீகாரத்துக்குப் பிறகே பிறந்தவன் அடியேன். அடியேனுக்கு ஸமாச்ரயணம் 1968ல். முக்கூர் ஸ்ரீமதழகியசிங்கரின் பம்பாய் ஸ்ரீமடத்தின் ப்ரதிஷ்டைக்கான யாத்ரைக்கு முன்னர், ஆம்பூரில் நடந்தது. அடியேனின் திருத்தகப்பனாரையும், மாதாமஹனையும் நன்கு அறிந்திருந்ததால், ஸ்ரீமதழகியசிங்கர் பரமக்ருபையுடன் க்ரந்தங்கள் உட்பட பஞ்ச ஸம்ஸ்காரத்தில் உபதேஶித்து, நன்கு வேத சாஸ்த்ர அத்யயனமும் செய்யும்படி அனுக்ரஹித்தாயிற்று. அப்பொழுதே திவ்ய ப்ரபந்தங்களை அதிகரித்திருந்ததால் அது

குறித்தும் உகந்தாயிற்று. பின்னர், ஸ்ரீமதழகியசிங்கரின் திவ்ய அநுக்ரஹம் சிறிது சிறிதாகப் பலிக்க ஆரம்பித்தது. க்ரமாந்தம் அத்யயனம் முடியும் முன்னரே அடியேன் திருத்தகப்பனார் 1974ல் பரமபதித்து, பின்னர் அடியேனின் அத்திம்பேரான மேல்மா திருமலாச்சார் ஸ்வாமியிடம் க்ரமாந்தம் முடித்துக் கொள்ளும் தருணத்தில் அவரும், அடியேனின் தமையனும் சேர்ந்து, நீரில் மூழ்கி, அகாலமாக 1976ல் பரமபதிக்க குடும்ப பாரமும் சேர்ந்து, லௌகிக உத்யோகத்தை ஏற்று, சற்று ஸௌகர்யம் உண்டாகி, ஒரு குடிசையையும் 1982ல் எம்பெருமான் அநுக்ரஹித்தான்.

### ஸ்ரீமதழகியசிங்கரின் அவ்யாஜ க்ருபை

ஸ்ரீமதழகியசிங்கரின் ஶதாபிஷேக மஹோத்ஸவம் 1975ல் காஞ்சீபுரத்தில் வெகு விமர்சையாக நடந்தபோது அந்த வ்யாஜத்தால், முதல் முறையாக அடியேன் தேவப்பெருமாளை ஸேவிக்கச் சென்றேன். பாராயண கோஷ்டியிலும் அந்வயித்தேன். அடியேனுக்கு ப்ராசார்யரான மஹாவித்வான் ஸோமயாஜி, கொத்திமங்கலம் நாராயணாசார்ய ஸ்வாமியையும் ஸேவித்து, ஸம்பாஷிக்க நேர்ந்தது. ஸதஸ்ஸின் போது ஸ்ரீமதழகியசிங்கர் மஹாவித்வான் ப்ரதிவாதி பயங்கரம் காஞ்சி அண்ணங்கராச்சார் ஸ்வாமியை அடியேனை வேதம், ப்ரபந்தம் இரண்டிலும், பரீக்ஷிக்கச் சொல்லி உகந்து அநுக்ரஹித்தார். அந்த ஸ்வாமிக்கும் அடியேனுடைய திருத் தகப்பனாரிடம் பெருமதிப்பு இருந்ததால் அவரும் உகந்தருளினார்.

அடியேனின் குடிசையில் ஸ்ரீமதழகிய சிங்கரை டோலைக்கு எழுந்தருளப்பண்ண அடியேன் 1982ல் பெங்களூரில் ப்ரகாஷ் நகரில் ஸ்ரீமடத்தின் ப்ரதிஷ்டையின் போது ப்ரார்த்தித்திருந்தேன். ஸ்ரீமதழகியசிங்கரும் பரம க்ருபையுடன் ஏற்றுக்கொண்டாயிற்று. ஆனால், டோலைக்குக் குறித்திருந்த நாளுக்கு முதல் நாள் இரவில் ஸ்ரீமதழகியசிங்கரின் பூர்வாஶ்ரமத் திருக்குமாரர், பல வருடங்களுக்குப் பின்னர் ஸ்ரீமதழகியசிங்கரை ஸேவிக்க எழுந்தருளி, ஸேவித்து எதிர்பாராத விதமாக அன்றிரவே பரமபதித்தார். மறுநாள் காலை அடியேன் விச்வரூபத்துக்குச் செல்லும்போது தான் அடியேனுக்கு இது தெரிய வந்தது. ஆதலால் அடியேன் டோலையைப் பற்றி ப்ரஸ்தாவிக்கவில்லை. ஆனால், ஸ்ரீமதழகியசிங்கரே அடியேனைக் கூப்பிட்டு, 'டோலைக்கு ஸித்தமாக இரு. சற்று நேரத்தில் பெருமாள் எழுந்தருளுவார்' என்று ஸாதிக்க அடியேனும் ஸந்நிதி கைங்கர்யபரர்கள் எல்லோரும் ஸ்ரீமதழகிய சிங்கரின் நிஶ்சலமான திருவுள்ளத்தால் ஆஶ்சர்யத்தில் மூழ்கினோம். ஒரே பூர்வாஶ்ரமத் திருக்குமாரரைப் பல ஆண்டுகளுக்குப் பின் பார்த்தும், திடீரென அவர் பரமபதித்திருந்தும் அந்த வியோகம் ஸ்ரீமதழகியசிங்கரைச் சிறிது கூட பாதிக்காதது, **न कर्मणा न प्रजया धनेन त्यागेनैके अमृतत्वमानशुः ।** …. **वेदान्तविज्ञानसुनिश्चितार्थाः सन्यासयोगाद्यतयः शुद्धसत्वाः ।** என ஶ்ருதியும், ஸ்தித ப்ரஜ்ஞனென கீதாசார்யனும் ஸாதித்தபடி ஸ்ரீமதழகிய சிங்கரின் வைராக்யத்துக்கு மிக உயர்ந்த எடுத்துக்காட்டாகத்திகழ்ந்தது. வைகுண்டவாஸி ஸ்ரீபுரிசை ஸ்வாமி அன்று அங்கு எழுந்தருளியிருந்தார். அவருக்கும் திருமேனி ஸம்பந்தம் இருந்ததால், அவர் குரல் தழுதழுக்க அடியேனுக்குக் கூட துஸ்ஸஹமான இந்த வியோகம், ஸ்ரீமதழகியசிங்கரைப் பாதிக்காதது, அம்மஹானின் அளவிட முடியாத வைராக்யத்தின் பெருமை என ஸாதிக்கும்படி இருந்தது.

பின்னர் அன்று அடியேனின் குடிசைக்கு டோலைக்காகப் பொன்னடி சாற்றிய ஸ்ரீமதழகியசிங்கர் வெகு விரிவாக கோபால விம்சதியிலிருந்து 'மஹஸே மஹிதாய' என்ற ச்லோகத்தை நித்யஸூரிகளின் அனுபவம் போல் உபந்யஸித்தார். பிறகு, அடியேன் குடிசையை முழுவதும் க்ருபையுடன் கடாக்ஷித்தார். பெருமாள் ஸந்நிதியில்

உட்கார்ந்து திருவாராதனம் செய்யும்படி கட்டியிருந்ததைக் கடாக்ஷித்து, உன் திருத்தகப்பனார் வ்ருத்தராக இருந்ததால் அவர் உட்கார்ந்து திருவாராதனம் செய்ததைப் பார்த்ததால், நீயும் அவ்வாறே செய்வது சரியல்ல. நின்று திருவாராதனம் பண்ணும்படி அமைத்துக்கொள் என நியமித்தருளினார். கூடவே, அன்று டோலையில் ஹாரத்தியின் போது, 'யாராவது பாடலாம் என ஸாதித்தபோது, அடியேன் அப்பொழுது ப்ரம்மசாரியாக இருந்ததால் அங்கு வந்திருந்த அடியேனின் ஹிதைஷியான ஒரு பெண்மணி பாடினார். ஸ்ரீமதழகியசிங்கர் அவருக்கே உரிய கம்பீரமான திருக்குரலில், என்னடா! கிழக்குரலாகக் கேட்கிறது விரைவில் விவாஹம் செய்து கொள்' என ஸாதித்தாயிற்று. அதற்கு அடியேன் பணிவுடன் அடியேன் திருத்தாயாருக்குக் காது கேட்காது. உலக வழக்கும் தெரியாது. ஆதலால் அழகியசிங்கரே ஒரு தகுந்த வரனை நிர்தேஶிக்க வேண்டும் என விஜ்ஞாபித்தேன். அதுவும் பின்னர் ஸ்ரீமதழகியசிங்கர் அனுக்ரஹத்தாலேயே நடைபெற்றது.

## ப்ரபத்த்யநுஷ்டானம்

அடியோங்கள் பெங்களூரில் ஒரு பாகவத கோஷ்டியாக, வில்லிவலம் ஸ்ரீமதழகிய சிங்கரிடம் பூர்வாஶ்ரமத்தில் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரத்தின் ப்ரபத்திக்கு மிகவும் தேவையான நான்கு அதிகாரங்களைக் காலக்ஷேபம் பண்ணி, ஸ்ரீரங்கத்தில் முக்கூர் ஸ்ரீமதழகியசிங்கர் தஶாவதார ஸந்நிதியில் எழுந்தருளியிருந்த போது, அவர் திருவடியில் பரந்யாஸத்துக்காகச் சென்றோம். வில்லிவலம் ஸ்ரீஸ்வாமி ஸ்ரீமதழகியசிங்கரிடம அடியோங்களுக்காகப் புருஷகாரம் செய்தாயிற்று. அப்போது அடியேனைப் பற்றி, 'இவனுக்கு ஸாரசாஸ்த்ர பங்க்தியில் உபஸ்திதி உள்ளது. ஆகவே ஸ்ரீமதழகியசிங்கர் பரீக்ஷித்து பரந்யாஸம் செய்வித்தருளவேண்டும்' என ஸாதித்தாயிற்று. முக்கூர் ஸ்ரீமதழகியசிங்கரும் பல ப்ரஶ்நங்களைப் பண்ணி உகந்து மறுநாள் ஆத்மரக்ஷாபரஸமர்ப்பணம் செய்விப்பதாக அங்கீகரித்தாயிற்று.

மறுநாள் 20.11.1982 அன்று, அடியோங்களைக் க்ருபையுடன் ஸ்ரீமாலோலனின் ஸந்நிதிக்கு அழைத்துச் சென்று உக்திநிஷ்டையாக ப்ரபத்தி செய்விக்கத் தொடங்கியாயிற்று. அப்போது ஸங்கல்பத்தில் அடியேனின் ஶர்மநாமாவைக் கேட்க, அடியேன் அதைச் சொன்னேன். அப்போது ஸ்ரீமதழகியசிங்கர் ஸங்கல்பத்தில் உன் பெயரைக் கூட நான் முதலில் சொல்ல, நீ அதைத் திருப்பிச் சொல்ல வேண்டும். அப்பொழுது தான் ஆசார்யோக்தியை அனுக்தி செய்தால் உக்திநிஷ்டையாகும்' எனத் தெளிவித்தார். பின்னர், ஸ்ரீப்ரபத்திக்குப் பிறகு ஒரு க்ஷணம் நிறுத்திவிட்டு 'நீ தினமும் ஸந்த்யாவந்தனத்தில் எவ்வளவு முறை காயத்ரி ஜபம் பண்ணுகிறாய்? எனக் கேட்டாயிற்று. அடியேன் 28 முறை என பதிலளித்தேன். அதற்கு ஸ்ரீமதழகியசிங்கர், ஒரு நாளாவது 27 அல்லது 29 தடவை இல்லாமல் சரியாக 28 தடவை ஜபம் செய்திருப்பாயா? எனக் கேட்டாயிற்று. அடியேன் நிஶ்சயமாகச் சொல்ல இயலவில்லை எனப் பதிலளித்தேன். உடனே ஸ்ரீமதழகியசிங்கர் என்னை எம்பெருமானிடம் நான் செய்யாத தவற்றுக்கு மன்னிப்பு கேட்க வைத்து விட்டார் என நினைக்கலாகாது என்பதற்காகவே இந்தக் கேள்வியைக் கேட்டேன் என ஸாதித்தாயிற்று. என்னே ஆசார்யரின் கருணை! இன்றளவும், ஒவ்வொரு வேளையும் ஸந்த்யாவந்தனம் செய்யும்போது ஸ்ரீமதழகியசிங்கர் ஸாதித்தது நினைவுக்கு வந்து ஓரளவாவது ஒழுங்காக கர்மானுஷ்டாநம் பண்ண உதவுகிறது.

பிறகு, உக்திநிஷ்டை நடந்து முடிந்த பிறகு பெருமாள் ஸம்பாவனை எடுக்கும்போது, மறுபடியும் சற்று நிறுத்தி இப்போது நாம் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனுக்கு ஸம்பாவனை எடுக்கப் போகிறோம். ஆனால் நாம் ஸ்ரீரங்கக்ஷேத்ரத்தில் இருப்பதால், ஸ்ரீரங்கநாதனுக்கு ஏன் ஸம்பாவனை எடுக்கக்

கூடாது என்று யாராவது கேட்டால், அது கூடாது. ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனுக்குத்தான் ஸம்பாவனை எடுக்க வேண்டும் என்பதற்குக் காரணம் சொல்லத் தெரியுமா? என ஒரு கேள்வியைக் கேட்டாயிற்று. அடியேன் தெரியாது ஸ்ரீமதழகியசிங்கரே ஸாதிக்க வேண்டும் என விஜ்ஞாபித்தேன். அதற்கு ஸ்ரீமதழகியசிங்கர் பரம க்ருபையுடன் **योऽहमस्मि स सन् यजे । यस्यास्मि न तमन्तरेमि ।** என்று ஶ்ருதி உள்ளது. நீ பிறப்பதற்குக் காரணமான உன் பெற்றோர் கர்பாதான ஸம்ஸ்காரத்தன்று **ह्रीश्च ते लक्ष्मीश्च पत्न्यौ । अहोरात्रे पार्श्वे ।** முதலிய மந்த்ரத்தைச் சொல்லி ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ ஸ்வாமி ஸம்பாவனா என்று சொல்லி ஸம்பாவனை எடுத்து அதன் பலனாகப் பிறந்தவன் நீ. ஆதலால் கருவரங்கத்தில் இருக்கும்போதே ஸ்ரீமாலோலனுக்கு ஆட்பட்டவன் நீ. ஆகையால் லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுக்குத் தான் ஸம்பாவனை எடுக்க வேண்டும் என ஸாதித்தாயிற்று. இப்படி ஸூக்ஷ்மமான உயர்ந்த மிகவும் அவஶ்யமான ஶாஸ்த்ரார்த்தங்களை இவ்வளவு தெளிவாக யார் தாம் ஸாதிக்க வல்லார்? இப்படிப்பட்ட ஆசார்யர் கிடைத்தது எவ்வளவு பெரிய பாக்யவிசேஷம்?

### ஆசார்யனின் பரம க்ருபை

அடியேன் ஸ்ரீமதழகியசிங்கரின் திருநக்ஷத்ரத்துக்கும் அப்போது நடக்கும் மாலோல வித்வத் ஸதஸ்ஸுக்கும் செல்வது வழக்கம். ஸ்ரீமதழகியசிங்கரின் அனுமதியுடனும் ஆசியுடனும் அடியேன் பெங்களூரில் எழுந்தருளியிருந்த ஸ்ரீபரகால மடத்தின் முன்னாள் ஆஸ்தான வித்வானும் மஹாவையாகரணரும் அலங்கார வேதாந்த ஶாஸ்த்ரஜ்ஞருமான மாதீஹள்ளி லக்ஷ்மணாச்சார் ஸ்வாமி என்னும் மஹானிடம் வ்யாகரண சாஸ்த்ரமும் வேதாந்தத்தில் ப்ரகரண க்ரந்தங்களும் அதிகரித்து வந்தேன். அப்படியாக அடியேன் ஸ்ரீமதழகியசிங்கரின் ஸதஸ்ஸில் கேள்வி கேட்கும் வைகரியை அனுபவிக்க நேர்ந்து பலகால் மஹாவித்வான்களும் வியக்கத்தக்க விஷயங்களை அநாயாஸமாக ஸ்ரீமதழகியசிங்கர் ஸாதிப்பதை ரஸித்து தன்யனாயுள்ளேன். அவ்வாறு 1983ம் வருடத்திய ஸதஸ்ஸுக்குச் சென்றிருந்தபோது நடந்த ஒரு ஸம்பவம் குறிப்பிடத்தக்கது.

தைத்திரீய ஸம்ஹிதையின் ஒரு பதிப்பு. மஹாராஷ்ட்ராவில்பூனாவிலுள்ள 'ஸ்வாத்யாய மண்டல்' என்னும் இயக்கத்திலிருந்து வெளியிடப்பட்டு அதில் 'வேதவேதிகா' என்னும் தலைப்புடன் முன்னுரையில் 'தைத்திரீய சாகையின் அத்யயன பரம்பரையில் மந்த்ரங்களுக்கு ரிஷி, சந்தஸ், தேவதை, விநியோகம் என்கிற நான்கு விஷயங்களுடன் அத்யயனம் செய்யும் பழக்கம் இல்லாததால் அதற்கு யாதயாமம் என்ற குறை உள்ளது எனவும், ஆர்ஷேய க்ரமம் என்னும் முறையில் அத்யயனம் செய்வது தான் தக்கது' என்பது முதலிய பல விஷயங்கள் குறிக்கப் பட்டிருந்தன. அதற்கு ஒரு மறுப்பு எழுதுவது அவச்யம் என ஸ்ரீந்ருஸிம்ஹ ஸாக்ஷாத்காரம் இருந்த 40ம் பட்டம் ஸ்ரீமதழகியசிங்கர் அனுக்ரஹத்துப் பாத்ரரான பாப்பாக்குறிச்சி ஸ்ரீநிவாஸாசாரியார் என்னும் மஹானால் நியமிக்கப்பட்டு அடியேன் 'வேதவேதிகா விமர்சம்' என்ற கட்டுரையை பல ப்ரமாணங்களை மேற்கோள் காட்டியும், 200 ச்லோகங்களுடனும் எழுதி, முக்கூர் ஸ்ரீமதழகியசிங்கரிடம் ஸமர்ப்பித்து, கடாக்ஷிக்கச் சொல்லி விஜ்ஞாபித்தேன். ஸ்ரீமதழகியசிங்கர் பரம க்ருபையுடன் அப்போது ஸ்ரீஸந்நிதியில் பாராயண கைங்கர்யத்தில் ஈடுபட்டிருந்த வித்வான், கனபாடி, பழவேரி ராஜகோபாலாசார்யர் ஸ்வாமியை அக்கட்டுரையை முழுவதும் படிக்க நியமித்து, திருச்செவி சாத்தி, அடியேனைக் குளிரக் கடாக்ஷித்து அனுக்ரஹித்தாயிற்று.

பிறகு, ஒருமுறை ஸ்ரீதஶாவதார ஸந்நிதியில் நித்யப்படி வேத பாராயணத்தில்

மஹாவித்வான் ஸ்ரீகோஷ்டீபுரம் ஸ்வாமியின் தௌஹித்ரரான வைகுண்டவாஸி கூத்தப் பாக்கம் க்ருஷ்ணமாச்சார்ய ஸ்வாமி, க்ரம பாராயணம் செய்து வர, प्राच्यां दिशि त्वमिन्द्रासि राजोतोदीच्यां वृत्रहन्वृत्रहासि என்ற மந்த்ரத்தின் வாக்யாந்த வேஷ்டநத்தில், ஸ்வரத்தில் ஸந்தேஹம் ஏற்பட்டது. அடியேன் அப்பொழுது அவ்விஷயத்தில் கருத்து தெரிவிக்க, ஸ்ரீமதழகியசிங்கர் அடியேனை அழைத்து, நீ விமர்சகனாயிற்றே, வ்யாகரணப்படி இங்கு உள்ள ஸந்தேஹம், அதற்குப் பரிஹாரம் முதலியவற்றை விவரமாக ஆறு மாதத்திற்குள் நிரூபி' என நியமித்து அநுக்ரஹித்தார். அதன்படி அடியேன் 'தைத்திரீயத்தில் திநந்த ஸ்வர விசாரம்' என ஒரு கட்டுரையை ஸம்ஹிதையில் உள்ள சுமார் 30000 வினைச் சொற்களை ஆராய்ந்து ஸமர்ப்பித்தேன். இதெல்லாம் பின்னர் அடியேனுக்கு கம்ப்யூட்டர் மூலமாக வேதம், மற்றும் ஶாஸ்த்ரங்களில் ஆராய்ச்சிக்குப் பெரிதும் உதவின.

ஒருமுறை, தர்மபூதஜ்ஞானத்தின் லக்ஷண விஷயத்தில், மஹாவித்வான்களான உத்தமூர் ஸ்வாமி, மதுராந்தகம் ஸ்வாமி, வில்லிவலம் நாராயணாசார்யர் ஸ்வாமி முதலிய பல ப்ரஸித்த வித்வான்களான மஹான்களின் ஸந்நிதியில் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்தின்படி விஜ்ஞாபிக்க நேர்ந்து, ஸ்ரீமதழகியசிங்கரின் அநுக்ரஹம் கிடைக்கப் பெற்றேன். பல தடவை ஸ்ரீமதழகியசிங்கர் அடியேனுக்குக் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதில் தெரியாதிருப்பினும், பலவகைகளில் தாமே பதிலை ஸூசிப்பித்து, ஊக்குவித்து அநுக்ரஹித்ததுண்டு.

ஸ்ரீமதழகியசிங்கர் - கல்யாண காரகர்

ஆசார்ய க்ருபையால் தான் ஒரு சேதனன் எல்லா ஶ்ரேயஸ்ஸையும் அடைகிறான். அது இங்கும் அங்கும் என इहामुत्र च तत्पादौ शरणं देशिका विदुः என்று ஸ்வாமி தேஶிகன் ஸாதித்துள்ளார். அடியேன் விஷயத்தில் ஐஹிக ஆமுஷ்மிக எல்லா க்ஷேமங்களுக்கும் முக்கூர் ஸ்ரீமதழகியசிங்கர் ஒருவரே காரணமாகி இருப்பது அடியேனுக்கு விவாஹத்துக்குக் கூட ஸ்ரீமதழகியசிங்கர் காரணமானதால் விளங்கும். தம் ஆஶ்ரமத்தின் பக்கத்து க்ருஹத்தில் எழுந்தருளி இருந்த வித்வத்வரேண்யரும், அநுஷ்டானஶீலரும், ஆத்மகுணபூர்ணருமான ஒரத்தி ஸ்ரீரகுநந்தனாசார்ய ஸ்வாமியின் குமாரத்தியை அடியேனுக்கு விவாஹம் செய்வித்தாயிற்று. நிஶ்சயதார்த்தத்தையும், விவாஹத்தையும் தஶாவதார ஸந்நிதியிலேயே தாமே எழுந்தருளி இருந்து நடத்தி வைத்தாயிற்று. விவாஹத்தின் போது, அம்மி மிதிக்கும் படலத்தில் அடியேன் பார்யையைத் தன் காலை அம்மியின் மீது வைக்கச் சொன்னபோது ஸ்ரீமதழகியசிங்கர் அதட்டலுடன் 'டேய்! நீ அவள் காலை உன் கைகளால் பிடித்து அம்மியின் மீது வைக்க வேண்டும்!' என்று ஸாதித்ததல்லாது 'செம்மையுடைய திருக்கையால் தாள் பற்றி அம்மி மிதிக்க' என்று நாச்சியாரும், तस्याः सलीलं चरणारविन्दं कीमी गृहीत्वा करपल्लवाभ्याम् । आस्थापयद्यां दृषदं मुकुन्दः ॥ என்று ஸ்வாமி தேசிகனும் யாதவாப்யுதயத்தில் ஸாதித் திருப்பதைக் கூறி அனுக்ரஹித்தாயிற்று. ஶிஷ்யனும் ஜ்ஞான ஸந்ததியாதலால் उत्सवेषु च सर्वेषु पितेव परितुष्यति என்னும்படி அமைகிறது இவ்வனுக்ரஹம். பின்னரும் பலகால் அடியேனுடைய குமாரனும், முதல் குமாரத்தியும் ஸ்ரீரங்கத்தில் தஶாவதார ஸந்நிதியிலேயே பிறந்த போதும் ஸ்ரீமதழகியசிங்கரின் அமோகமான அனுக்ரஹம் அடியேனின் குடும்பத்துக்கு நிரவதிகமாகக் கிடைத்துள்ளது.

கடைசி ஸேவை

1990ல் அடியேன் உத்யோக நிமித்தமாகப் பூனா செல்லவேண்டி வந்து, ஸ்ரீரங்கத்துக்கு ஸ்ரீமதழகியசிங்கரின் நியமனத்துக்காகச் சென்ற

போதும் பரமக்ருபையுடன் நன்கு உயர்வுடன் பணி செய்ய அனுக்ரஹித்தாயிற்று. அடியேனுடைய பார்யையையும் விசேஷமாக அறிவுரை கூறி அனுக்ரஹித்தாயிற்று. அடியேன் பூனாவில் இருக்கும் போதே ஸ்ரீமதழகிசிங்கரின் பரமபதப்ராப்தி ஏற்பட்டது. அடியேன் அங்கிருந்தே 'நினைந்திருந்தே சிரமம் தீர்ந்தேன்' என்னும்படி அவ்வாசார்யனைப் பின்னர் இந்நிலவுலகில் ஸேவிக்கப் பெறவில்லை எனினும், அவருடைய பற்பல கல்யாண குணங்களை தாரக, போஷக போக்யங்களாக அனுஸந்திக்கப் பெற்றது பெறும் பேறாகும்.

मन्त्रोपदेशेन सुबोधकत्वात्
रक्षाभरन्याससदुक्तितोऽपि ।
कृपाकृतस्वात्मसुजीवताच्च
वेदान्तयोगीन्द्रगुरुरेव ईड्यः ॥
श्रीमते वण्शठाराति - वेदान्तार्य - यतीन्दवे ।
मम सर्व स्वभूताय देशिकायास्तु मङ्गलम् ॥

ஸ்ரீமதே ஸ்ரீவண்ஶட்கோப ஸ்ரீவேதாந்த தேஶிக யதீந்த்ர மஹாதேஶிகாய நம:

## வரப்பெற்றோம்

| | |
|---|---|
| புஸ்தகப் பெயர் | ஆலய ப்ராயஶ்சித்தவிதி |
| தொகுத்து வெளியிட்டவர் | பாஞ்சராத்ர வேதாந்த ஆகம வாசஸ்பதி அழிசூர், ஹஸ்திகிரி நாதமுடும்பை சித்ராபர்வம் ஸ்ரீ உ.வே. தி. ஸ்ரீநிவாஸாசாரியர், மயிலாப்பூர், சென்னை 600004 |
| முதற்பதிப்பு | ஜூன் 2020 |
| விலை | Rs.75/- (தபால் சிலவு தனி) |
| கிடைக்குமிடம் | No.2, டிரஸ்ட் மெயின் ரோடு, மந்தைவெளிப்பாக்கம், சென்னை 600028. தொலைபேசி 044 24641225. |

ஆகம ஶாஸ்த்ர விஷயமாகப் பல அரிய பெரிய நூல்களை திருக்கோயில் அர்ச்சகர்களுக்கும், நிர்வாஹிகளுக்கும் உதவும் வண்ணம் வெளியிட்டு பேருபகாரங்களைச் செய்து கொண்டிருப்பவர் ஸ்ரீஅஹோபில மடத்தின் ஆஸ்தான வித்வானும், மயிலாப்பூர் வாஸியுமான அழிசூர் ஸ்ரீஸ்ரீநிவாஸாசார்யர் ஸ்வாமி. இந்த ஸ்வாமி இப்போது மிகுந்த பரிஶ்ரமப்பட்டு திருக் கோவில்களிலும், ஸந்நிதிகளிலும் நடந்து வரும் சாந்திஹோமம், பஞ்சபர்வ உத்ஸவங்கள், பவித்ரோத்ஸவ விஷயம், அசுத்தி ஏற்பட்டால் அதற்கான ப்ராயச்சித்த விதிமுறைகள், ரதோத்ஸவ விஷயம் போன்றவைகளைப் பற்றி மிகத் தெளிவாக இந்த நூலில் ஸம்ஸ்க்ருதத்திலும், தமிழிலும் எடுத்து உரைத்திருக்கிறார். கூடவே பல்வேறு வகையான ஸந்தேஹங்களைப் பற்றியும் ஆங்காங்கே விளக்கி இருக்கிறார். புஸ்தகத்தை ஸ்வஸ்தி வாசநத்துடன் இனிதே நிறைவு செய்திருக்கிறார். அர்ச்சகப் பெருமக்களுக்கும் திருக்கோவில் நிர்வாஹத்தினருக்கும் மிகவும் பயன்படக் கூடிய நூலாகும் இது. திருப்புல்லாணி ஸ்ரீநிவாஸன்

## திருவள்ளூர் செய்திகள்

*திருவள்ளூரில் அரசாங்கம் அறிவித்த ஊரடங்கு தொடர்ந்து அமலில் இருந்து வருகிறது.*

*ஸ்ரீவீரராகவ ஸ்வாமியின் தேவஸ்தானத்தில் திருவாடிப்பூரம் உத்ஸவம் 10 நாட்கள் சிறப்பாக ஆஸ்தானத்திலேயே நடைபெற்றது. ஆண்டாள் சாத்துபடி, பின் உடை அலங்காரம், புஷ்பங்கள் ஆகிய அனைத்தும் மிக அழகாக இருந்தது. திருவாடிப்பூரத்தன்று வழக்கம்போல் காலையில் ஸ்ரீஆண்டாள் திருமஞ்சனம், மத்யாந்நம் ஸ்ரீவீரராகவன் ஸ்ரீஆண்டாள் ஸந்நிதிக்கு எழுந்தருளி திருப்பாவை சாற்றுமறை மற்றும் பெரிய சாற்றுமறை நடைபெற்றது. ஸ்ரீவீரராகவன் ஆண்டாள் ஊஞ்சலில் மிக அழகான திருவாபரணங்களுடன் வெகு அழகாக ஸேவை ஸாதித்தனர். கோவில் கைங்கர்யபரர்கள் அரசாங்கம் அறிவித்தபடி குறிப்பிட்ட அளவிலே பங்கு பெற்றனர். அனைத்து உபயதாரர்களும் தேவஸ்தானத்திற்குப் பணம் அனுப்பி உத்ஸவங்கள் நன்றாக நடைபெற உதவி செய்ததோடு மட்டுமல்லாமல் அரசாங்க சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு உத்ஸவங்களில் பங்கேற்றனர்.*


*சேவா பாரதி உறுப்பினர்கள் அரிசி, பருப்பு மற்றும் சாமக்ரியைகளை கைங்கர்யபரர்களுக்குக் கொடுத்து உதவினர்.*

*இஞ்சிமேடு ஸ்ரீமத் அழகியசிங்கர் சாரிட்டபுள் டிரஸ்ட் ஜூலை மாதமும் கோவிலில் கைங்கர்யம் செய்யும் அர்ச்சகர்கள், ஸ்தாநீகர்கள் மற்றும் சுற்றுக் கோயில் கைங்கர்யபரர்களுக்கு மற்றும் அருகிலுள்ள கோயிலுக்கும் கணிசமான தொகையை ஸம்பாவனை செய்து க்ருதார்த்தரானுர்கள்.*

**எவ்வுளூரான்**

## வரப்பெற்றோம்

### ஸ்ரீதேவநாத ஸுப்ரபாதம்




நடுநாட்டுத் திருப்பதிகளில் ஒன்றான திருவஹீந்த்ரபுரத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அடியவர்க்கு மெய்யனான ஸ்ரீதேவநாதன் விஷயமாக கூத்தக்குடி ஸ்ரீமுஷ்ணம் திருமலை நல்லான் சக்ரவர்த்தி Dr. N.S. ஶடகோபாசார்யர் முன்பே எழுதி அநுக்ரஹித்த மேற்படி புஸ்தகம் தற்போது இரண்டாவது பதிப்பாக வெளிவந்திருக்கிறது. பெரும்புகழ் பெற்ற இந்த திவ்யதேஶத்தில் ஸேவை ஸாதிக்கும் எம்பெருமான்களைப் பற்றிய திருப்பள்ளியெழுச்சியாகும் (ஸுப்ரபாதம்) இந்த நூல். மிகுந்த அர்த்தபுஷ்டியுடையது. இதில் ஸ்ரீதேவநாதனைப் பற்றிய ஸ்தோத்ரமும் ப்ரபத்தியும் மங்கள ஸ்லோகங்களும் அத்யத்புதமாக விவரிக்கப்பட்டு இருக்கின்றன. மேல் விபரங்களுக்கு - கூத்தக்குடி ஸ்ரீமுஷ்ணம் திருமலை நல்லான் சக்ரவர்த்தி ஸ்ரீராமாசார்யர் குடும்பத்தினரைத் தொடர்பு கொள்ளலாம். விலை ஏதும் குறிப்பிடப்படவில்லை.

**திருப்புல்லாணி ஸ்ரீநிவாஸன்**

# மனிதக் குரங்கு

## முக்கூர் ஸ்ரீமதழகியசிங்கரின் அமுதமொழிகளிலிருந்து...

அநேக விதமான குரங்குகளை நாம் பார்த்திருக்கிறோம். நாம் பார்க்காத அநேக விதமான குரங்குகள் சில பெரிய காடுகளில் இருப்பதாகவும், சிலர் அவற்றைத் தாங்கள் நேரில் பார்த்ததாகவும் சொல்லுகிறார்கள். சில குரங்குகளுக்கு வால் நீளமாகவும், சில குரங்குகளுக்கு வால் குட்டையாகவும், சில குரங்குகளுக்கு வால் இல்லாமலும் இருக்கிறது. கண்டதும் உண்டு. கேட்டதும் உண்டு.

குரங்குகளின் குணங்களையும் செயல்களையும் பார்த்திருக்கிறோம். அவைமனிதனைப் பார்க்கும்போது தெரிந்து கொள்ளும். உடனே அவன் கையில் இருப்பதைப் பிடுங்கிக் கொள்ளும். நாம் விரட்டினால் அவை நம்மைத் துரத்தும். அடிக்கப்போனால் 'உர்' என்று பயமுறுத்தும். கொம்பு எடுத்துக்கொண்டு போனால் உயரே ஏறிவிடும். கடிக்க வரும். குரங்குகள் ஒன்றுக்கொன்று கட்டிப் புரளும்; சண்டை போடும்; கிளைக்குக் கிளை தாவும், கோபுரத்தில் ஏறிக் குதிக்கும்; மரங்களில் தலைகீழாகத் தொங்கும். இவற்றைத் திருப்பதி முதலான இடங்களில் பார்த்திருக்கிறோம். கூத்தாடும். ஒன்றுக்கொன்று பேன் பார்க்கும். இதைப் போல் இன்னமும் அநேக விதங்களான குரங்குகளுடைய வேடிக்கைகளைப் பார்த்திருக்கிறோம்.

கள் குடித்த குரங்குகளுக்குத் தேளும் கொட்டிப் பிசாசும் பிடித்துக்கொண்டால் அவை என்ன செய்யும்? என்பதை மனத்தால்



நன்றாக நினைத்துப் பாருங்கள். முடியாவிட்டால் யாரையாவது கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள்.

இப்பொழுது குரங்குகளைப் பற்றி எதற்காகச் சொல்ல வேண்டும் என்றால், இதற்கு மேல் படித்துப் பார்த்தீர்களேயானால் நீங்களே தெரிந்து கொள்ளுவீர்கள்.

ப்ரஹ்ம ஸ்ருஷ்டியில் உள்ள கீழ்ச்சொன்ன குரங்குகளைக் காட்டிலும், மிகவும் ஆச்சர்யமான குரங்குகள் இவ்வுலகில் இருக்கின்றன. இவற்றுக்கு வால் இல்லை. ஆனால் வால்தனம் இருக்கிறது. ஒரு துஷ்ட மனிதனைப் பார்த்து, உன் வாலை ஒட்ட அறுத்துவிடுவேன் என்று சொல்லுகிறார்களே! அது என்ன வால்? அந்த வால் இந்தக் குரங்குகளுக்கும்.

அந்த மாதிரியான புதுத் தினுசுக் குரங்கு எது? என்றால் மனிதக் குரங்குதான். மனிதக் குரங்கு என்றால் என்ன? ஜன்மாந்தர புண்யத்தினாலும், பெரியோர்கள் செய்த

புண்யத்தினாலும், மனிதனாகப் பிறந்தும், குரங்கு போல் சஞ்சலமான மனஸ் இழுக்கிறபடி எல்லாம் அக்ரமங்களைச் செய்கிறவர்கள்தாம் மனிதக் குரங்குகள்.

*சலேந மநஸா யஸ்ய*
*ஸ்திரம் கார்யம் ந வித்யதே*
*புண்யைர் ஜாதோபி மநுஜ: கர்மணா நரவாநர: ।*
*அகார்யம் குருதே யஸ்து காமலோபப்ரபீடித:*
*ஸபுதை: கத்யதே லோகே நரவாநர இத்யபி ।।*

எத்தனை விதமான அக்ரமங்களைச் செய்தால் - எந்த எந்த விதமான அக்ரமங்களைச் செய்தால் மனிதனை 'மனிதக் குரங்கு' என்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள்., சொல்லுவார்கள் என்பதைச் சொல்லுகிறேன், கேளுங்கள். சொன்னால் விரோதம். ஆகிலும் சொல்லித்தான் ஆகவேண்டியிருக்கிறது. தூஷிப்பதற்காகச் சொல்லவில்லை. சீர்திருத்திக் கொண்டு குரங்குத்தனத்தை விட்டு நல்ல மனிதர்களாக இருப்பதற்காகத்தான் சொல்லுகிறேன். கவனமாய்ப் படித்துப் பாருங்கள்.

1. கண்ட ஸ்த்ரீகளிடத்திலும் கண்ட புருஷர்களிடத்திலும் கெட்ட அநுபவம் செய்கிறவர்கள் மனிதக் குரங்குகள்.

2. பிறருடைய சொத்துக்களைத் திருடுகிறவர்கள் மனிதக் குரங்குகள்.

3. சாப்பிடக் கூடாத பதார்த்தங்களைச் சாப்பிடுபவர்கள் மனிதக் குரங்குகள்.

4. அசுத்தமான இடங்களில் வசிக்கிறவர்கள் மனிதக் குரங்குகள்.

5. அசுத்தமான இடங்களில் சாப்பிடுகிறவர்கள் மனிதக் குரங்குகள்.

6. தினந்தோறும் முழுகிக் குளிக்காதவர்கள் மனிதக் குரங்குகள்.

7. அவரவர்களுக்குப் பசுவானால் ஏற்படுத்தப்பட்ட கட்டளைகளைச் சரிவரச் செய்யாதவர்கள் மனிதக் குரங்குகள்.

8. அந்த அந்த ஜாதிக்கு ஏற்பட்டபடி கல்யாணம் (திருமணம்) செய்து கொள்ளாமல் இஷ்டம் போலிருக்கிற பெண்கள் மனிதக் குரங்குகள்.

9. ஹிந்து மதத்தை விட்டு மதாந்தரங்களில் சேர்ந்து கல்யாணம் செய்து கொள்ளுகிற ஸகல ப்ராஹ்மண புருஷர்களும் ப்ராஹ்மண ஸ்த்ரீகளும் பெரிய மனிதக் குரங்குகள்.

10. பெரியோர்களுக்கு அடங்காத ஆண் பெண்கள் மனிதக் குரங்குகள்.

11. பக்தர்களை வேஷதாரிகள் என்று தூஷிக்கிற ஆண் பெண்கள் மனிதக் குரங்குகள்.

12. கல்யாணம் செய்து கொண்ட மனைவிக்குச் சோறு போடாமல் விரட்டி அடிக்கிறவர்கள் மனிதக் குரங்குகள்.

13. பர்த்தாவுக்குச் சரியானபடி அடங்காமல் வீட்டு வேலைகளையும் சரிவரச் செய்யாத பெண்கள் மனிதக் குரங்குகள்.

14. மாமனார், மாமியார் குலங்களையும் குணங்களையும் செய்கைகளையும் இழிவாகப் பேசிப் புண் படுத்துகிறவர்கள் மனிதக் குரங்குகள்.

15. வீட்டில் செய்யப்பட்ட பக்ஷணங்களை வீட்டில் உள்ளவர்களுக்குத் தெரியாமல் திருடித் தின்னுகிற நாட்டுப் பெண்களும் மனிதக் குரங்குகள்.

16. வயிற்றில் பிறந்த பெண்களைப் போல் நினைக்காமல் நாட்டுப் பெண்களை ஹிம்ஸிக்கிற மாமியார்களும் மனிதக் குரங்குகள்.

17. வாங்கின கடன்களைச் சரியாகக் கொடுக்காமல் ஏமாற்றுகிற ஸகல பேரும் மனிதக் குரங்குகள்.

18. ஒத்தாசை செய்கிறேன் செய்கிறேன் என்று சொல்லி ஆசை காட்டி ஏமாற்றுகிறவர்களும் மனிதக் குரங்குகள்.

19. நிச்சயதார்த்தம் ஆனபிறகு அதிக வரதக்ஷிணைக்கு ஆசைப்பட்டுக் கல்யாணத்தை நிறுத்துகிறவர்களும் மனிதக் குரங்குகள்.

20. தப்புக் கணக்குகளை எழுதி வைத்துப் பணத்தைக் கொள்ளையடித்த முதலாளியைக் கொடுக்கிறவர்களும் மனிதக் குரங்குகள்.

21. ஸாதுக்கள் போல் வேஷம் போட்டு ஊரை ஏமாற்றுகிறவர்களும் மனிதக் குரங்குகள்.

22. பெண்டாட்டியின் கலக வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டு தாய் தகப்பனுக்குச் சோறு போடாமல் தின்னுகிறவர்கள் மனிதக் குரங்குகள்.

23. மலஜலம் கழித்து மண்ணைப் போட்டுக் கழுவாதவர்கள் மனிதக் குரங்குகள்.

24. வெற்றிலை பாக்கை மென்றுகொண்டே மலஜலம் கழிப்பவர்கள் மனிதக் குரங்குகள்.

25. அக்கம் பக்கத்து வீடுகளில் பூசணிக்காய் வாழைக்காய் முதலியவற்றைத் திருடித் தின்னுகிறவர்கள் நாட்டுப்புற மனிதக் குரங்குகள்.

26. தீபாவளி தவிர வேறு தினங்களில் உதயமாகி ஆறு நாழிகைக்கு முன் எண்ணெய் தேய்த்துக் கொள்ளுகிறவர்கள் மனிதக் குரங்குகள்.

27. எவர் தாங்கள் செய்ய வேண்டிய திவஸத்தை அங்கே செய்துவிட்டேன், இங்கே செய்துவிட்டேன் என்று ஏமாற்றுகிறார்களோ அவர்கள் மிகப்பெரிய மனிதக் குரங்குகள்.

28. தகப்பன் இல்லாதவன் அமாவாஸ்யைத் தர்ப்பணத்தைச் செய்யாமல் விட்டுவிட்டால் அவனும் மனிதக் குரங்கு.

29. எவர்கள் ஸந்த்யாவந்தனங்களில் வருகிற வேத வாக்யங்களைக் கூட மனப்பாடம் செய்வதில்லையோ அவர்களும் மனிதக் குரங்குகளே.

30. எவர்கள் அண்ணன் தம்பி, தங்கை, தமக்கை, ஸ்நேகிதன் முதலியோருக்குத் துரோஹம் செய்கிறார்களோ அவர்களும் மனிதக் குரங்குகள்.

31. மனைவி முரடாக இருந்தாலும் ஸமாதானம் செய்யத் தெரியாமல் எவன் அவளை அடித்து ஹிம்ஸை செய்கிறானோ அவனும் பெரிய மனிதக் குரங்கு.

32. எவர்கள் பத்துப் பேர்கள் புழங்குகிற இடங்களில் மலஜலம் கழித்து ஆபாஸம் செய்கிறார்களோ அவர்களும் மனிதக் குரங்குகள்.

33. எவர்கள் ஆடம்பரத்துக்கு ஆசைப்பட்டு வீண் செலவுகளைச் செய்துவிட்டுத் திண்டாடுகிறார்களோ அவர்களும் மனிதக் குரங்குகள்.

34. குடும்ப வரவு செலவு தெரியாமல் புடவை, நகை முதலியவற்றுக்காகக் கணவனை எப்பொழுதும் ஏசி வருத்தப்படும்படி செய்கிற பெண்களும் மனிதக் குரங்குகள்.

35. கணவனை வீட்டில் சமையல் செய்யச் செய்தும் பாத்திரங்களைத் தேய்க்கச் சொல்லியும் வேலை வாங்கி ஸுகமாக இருக்கிற நாஸுக் பெண்களும் மனிதக் குரங்குகள்.

36. வேலை செய்கிறவர்களுக்குக் கூலி கொடுத்துக் கொடுத்ததைவிட அதிகமாக எழுதி வாங்குகிறவர்களும் மனிதக் குரங்குகள்.

37. படித்தவர்களுக்கும் படிக்காதவர்களுக்கும் உள்ள வித்தியாஸம் அறியாமல் மூடத்தனமாக நடக்கிறவனும் மனிதக் குரங்கு.

38. ஆசார்ய த்ரோஹம் செய்கிற சிஷ்யர்களும் சிஷ்ய த்ரோஹம் செய்கிற ஆசார்யர்களும் மனிதக் குரங்குகள்.

39. கோயிலில் தெய்வத்துக்கு விளக்கேற்றக் கொடுத்த நெய், எண்ணெய் முதலியவற்றை மீத்தி வீட்டுக்குக் கபடமாக எடுத்துப் போகிறவர்களும் மனிதக் குரங்குகள்.

40. பகவானுக்கு நிவேதனம் செய்யாமல் தின்னுகிறவர்களும் மனிதக் குரங்குகள்.

41. கோவணம் கட்டிக்கொள்ளாமல் வேஷ்டி கட்டிக்கொள்ளும் ஆண்கள் அனைவரும் மனிதக் குரங்குகள்.

42. கல்யாணமான ஒரு பெண்ணை மறுபடி வேறு ஒருவனுக்குக் கல்யாணம் செய்து வைத்தால் அதற்கு ஸம்மதித்த அந்தப் பெண், தகப்பன், கல்யாணம் செய்து கொள்ளுகிற நாஸ்திகன் எல்லாருமே மனிதக் குரங்குகள்.

43. தூர ஸ்திரீ தூரத்தீட்டை வீட்டிலுள்ள எல்லாருக்கும் தெரியாமல் கலந்தாளேயானால் அவளும் மனிதக் குரங்கு.

44. குளம், குட்டை, கிணறு, புஷ்கரிணி, ஆறு முதலிய ஜலங்களில் மலஜலம் கழிக்கிற ஆண்களும் பெண்களும் மனிதக் குரங்குகள்.

45. வாய் கொப்பளித்து ஜலத்தில் உமிழ்கிறவர்களும், காறிக் காறி ஜலத்தில் எச்சில் உமிழ்கிறவர்களும் மனிதக் குரங்குகள்.

46. இடுப்பில் துணியில்லாமல் குளிக்கிற ஆண்கள் அனைவரும் மனிதக் குரங்குகள்.

47. காமத்தினாலோ, கோபத்தினாலோ வீடுகளைக் கொளுத்துகிற ஆண்பெண்கள் அனைவரும் மனிதக் குரங்குகளே.

48. ரெயில் தண்டவாளங்கள் முதலியவற்றைப் பெயர்த்து ஜனங்களுக்கு ஆபத்தை உண்டுபண்ணுகிறவர்கள் பெரிய மனிதக் குரங்குகள்.

49. சோறு பால் தயிர் சாப்பிடக்கூடிய வஸ்துக்களில் விஷத்தைக் கலந்து கொடுக்கிறவர்கள் பெரிய காட்டுமிராண்டி மனிதக் குரங்குகள்.

50. கணவனுக்கு மருந்து வைத்துத் தனக்கு அடிமையாக்கிக் கொள்ள நினைக்கிற பெண்மணிகள் பெண் மனிதக் குரங்குகள்.

51. பொடி, புகையிலை போடுகிற ப்ராஹ்மண ஆண் பெண்கள் அனைவரும் மனிதக் குரங்குகள்.

52. ஏகாதசி தினத்தில் சோறு தின்னுகிற புருஷர்களும் ஸ்த்ரீகளும் குழந்தைகளும் எல்லாரும் மனிதக் குரங்குகள்.

53. உபவாஸம் இருக்கச் சக்தி இல்லாமல் பலகாரம் செய்கிறவர்களாக இருந்தாலும் டஜன் கணக்கில் தோசை முதலியவற்றை அடிக்கடி சாப்பிடுகிறவர்களும் மனிதக் குரங்குகளே.

54. உட்காராமல் நின்றுகொண்டே ஒன்றுக்குப் போகிறவர்கள் மனிதக் குரங்குகள்.

55. குழந்தைகளுக்கென்றே பகவானால் ஏற்படுத்தப் பட்டதும் ஸ்ரீதேஶிகனால் ஆஹார நியமத்தில் நிஷேதிக்கப்பட்டதுமான மாதர்கள் பாலைத் தமாஷுக்காகச் சாப்பிடுகிறவர்களும் மனிதக் குரங்குகளே.

56. ஆஹார நியமத்தில் நிஷேதிக்கப்பட்ட பசுக்கள் பாலைச் சாப்பிடுகிறவர்கள் மனிதக் குரங்குகள்.

57. காபி குடித்துவிட்டும், சோறு தின்று விட்டும், பலகாரம் சாப்பிட்டு விட்டும் வீடுகளிலோ, மடங்களிலோ, கோயில்களிலோ பூஜை செய்கிறவர்கள் துராசார மனிதக் குரங்குகள்

58. கணவன் சாப்பிட்ட எச்சில் இலையில் மனைவி சாப்பிடுகிறாளே என்று நினைத்து, மனைவி சாப்பிட்ட எச்சில் இலையில் சாப்பிடுகிற கணவன் மனிதக் குரங்கு.

59. தூரமானவர்களுக்குச் சோறு, பக்ஷயம் முதலியவற்றைப் போட்டுவிட்டு, பிறகு மமீதியைச் சாப்பிறடுகிறவர்கள் மனிதக் குரங்குகள்.

60. காபி சாப்பிட்டுவிட்டுத் திவஸம், தர்ப்பணம் முதலியவை செய்கிறவர்கள் மனிதக் குரங்குகள்.

61. தினந்தோறும் ப்ராஹ்மணார்த்தம் சாப்பிடுகிறவர்கள் துராசை மனிதக் குரங்குகள்.

62. ஒரு தினத்தில் இரண்டு தடவை ப்ராஹ்மணார்த்தம் சாப்பிடுகிறவர்கள் யமலோக மனிதக் குரங்குகள்.

63. உத்யோகம் போன பிறகும் கிழத்தனம் வந்த பிறகுங்கூடத் தலைமயிலை, அமெரிக்காகாரர், லண்டன்காரர்களைப் போல வெட்டிக்கொள்ளுகிறவர்கள் பெரிய கிழ மனிதக் குரங்குகள்.

64. ஸ்ரீவைஷ்ணவர்கள் ஸ்ரீமந் நாராயணனைத் தவிர இதர தேவதைகளைத் தாக்ஷிண்யத்துக்காகவோ வயிற்றுப் பிழைப்புக்காகவோ கும்பிட்டார்களேயானால் அவர்களும் மனிதக் குரங்குகள்.

65. ஸ்ரீவைஷ்ணவனான ப்ராஹ்மணன் தான் இட்டுக் கொள்ளவேண்டிய திருமண்காப்பை விட்டு விபூதியையோ, சாந்துப்பொட்டையோ வேறு எதையோ நெற்றியில் போட்டுக் கொண்டானேயானால் அவனும் மனிதக் குரங்கு.

66. குளங்களிலோ, ஏரிகளிலோ, ஆறுகளிலோ, வாயாலேயே தண்ணீர் குடித்தாலும், இரண்டு கைளால் தண்ணீர் கொடுத்தாலும் அவர்களும் மனிதக் குரங்குகள்.

67. ஒரு கையால் தண்ணீரை எடுத்துச் சாப்பிடும் போதும் பகவந்நாமத்தைச் சொல்லாமல் சாப்பிட்டால் அவர்களும் மனிதக் குரங்குகள்.

68. வீட்டிலுள்ள ஸாளக்ராமத்தை (பெருமாளை), விலைக்கு விற்கிறவர்கள் மூட மனிதக் குரங்குகள்.

69. சாப்பிட்ட பிறகு மத்யாஹ்ந வேளையிலும், ஸாயங்காலத்திலும் ராத்ரியிலும் பெருமாள் ஆராதனத்துக்குத் துளசி கிள்ளுகிறவர்கள் (எழுந்தருளப் பண்ணுகிறவர்கள்) மனிதக் குரங்குகள்.

70. கோயிலுக்கு உள்ளேயும், மதிலுக்கு ஸமீபத்திலும், கோபுரத்தைப் பார்த்துக் கொண்டும் குளக்கரைகளிலும் மலமூத்ரங்களால் ஆபாஸம் செய்கிறவர்கள் திவ்யதேச மனிதக் குரங்குகள்.

71. பெருமாள் நகைகளைத் திருடுபவர்களும், கோயில் கலசங்களைத் திருடுகிறவர்களும் பிடிபட்டு ஹிம்ஸைப்படக் கூடிய மனிதக் குரங்குகள்.

72. கோயில் சொத்துக்களை அடகு வைத்துத் தின்னுகிறவர்கள் துரோகி மனிதக் குரங்குகள்.

73. கோயிலில் பெருமாளுக்கு உடைக்கக் கொடுத்த தேங்காய்கள் எல்லாவற்றையும் உடைக்காமல் ஒரு தேங்காயை உடைத்து இரண்டு பேருக்குக் கொடுத்துவிட்டு முழுக் காய்களாக வீட்டுக்குக் கொண்டு போகிறவர்களும், கடைகளில் விற்கிறவர்களும் மனிதக் குரங்குகள்.

74. பட்டினியால் வருந்திச் சாப்பிட வருகிறவர்களுக்கு ஒருவிதமாகவும் அதாவது குறைவாகவும் தங்களுக்கு ஒருவிதமாகவும் சமையல் செய்து போடுகிறவர்கள் பாபி மனிதக் குரங்குகள்.

75. தங்கள் தங்களுக்குப் பொருந்தாத - அர்த்தமில்லாத முடியாத காரியங்களைச் செய்ய யத்தனம் செய்கிறவர்களும் மனிதக் குரங்குகள்.

76. இந்த ஆசார்யன் ப்ரயோஜனமில்லை; அந்த ஆசார்யன் ப்ரயோஜனமில்லை என்று சொல்லிக்கொண்டு ஒரு ஆசார்யனிடத்திலும் ஸமாச்ரயணம் பரந்யாஸம் முதலியன செய்து கொள்ளாமல் காலம் கழிக்கிறவன் வீண்பேச்சு மனிதக் குரங்கு.

77. ப்ராஹ்மணன் வீட்டில் விலை கொடுத்துப் பால் வாங்கிச் சாப்பிடுகிறவர்கள் மனிதக் குரங்குகள்.

78. கையில் எடுத்த சோற்றைப் பாதி வாயில் போட்டுச் சாப்பிட்டு மறுபாதியை இலையிலுள்ள சோற்றோடு கலந்து மறுபடி எடுத்துச் சாப்பிடுகிறவர்கள் மனிதக் குரங்குகள்.

79. ஊறுகாய் முதலியவற்றைக் கடித்து மிச்சம் வைத்துச் சாப்பிடுகிறவர்கள் மனிதக் குரங்குகள்.

80. வாய் கொப்பளிக்கும்போது தண்ணீரை விழுங்குகிறவனும் மனிதக் குரங்கு.

81. கோள் சொல்லிக் கலகம் உண்டு பண்ணுகிற ஆண் பெண்கள் அனைவரும் மனிதக் குரங்குகள்.

82. எல்லாப் பிள்ளைகளையும் சமமாக எண்ணாமல் வஞ்சனை செய்கிற தாய்தந்தையரும் மனிதக் குரங்குகள்.

83. வீட்டுக்கு வாங்கின அரிசி முதலிய சாமான்களைத் தெரியாமல் விற்றுப் பணம் சேர்த்து நகைகள் பண்ணிக்கொண்டு, பிறந்தகத்தில் நகை பண்ணினமாகப் பெருமை அடித்துக்கொள்ளும் பெண்மணிகள் மனிதக் குரங்குகள்.

84. பதவிக்காகப் பணத்தைக் கொடுத்து வசீகரிப்பவர்கள் பித்துப்பிடித்த மனிதக் குரங்குகள்.

85. பணத்துக்காக மனஸ்ஸாக்ஷிக்கு விருத்தமாக ஸஹாயம் செய்பவர்கள் மனிதக் குரங்குகள்.

86. லஞ்சத்துக்காகத் தீர்ப்பு எழுதினார்களேயானால் அவர்கள் அசல் மனிதக் குரங்குகள்.

87. ஜாதி பேதங்களை நினைத்து, யோக்யதைக்குத் தக்கபடி வேலை கொடுக்காமல் இருந்தார்களேயானால் அவர்களும் மனிதக் குரங்குகளே.

88. பகவத் பக்தர்கள் எந்த ஜாதியராக இருந்தாலும் மரியாதை கொடுக்காமல் அவமதிப்பார்களேயானால் அவர்கள் மதம் பிடித்த மனிதக் குரங்குகள்.

89. சாஸ்த்ரங்களுக்குத் தம் இஷ்டப்படி அர்த்தம் சொல்ல ஆரம்பிப்பார்களேயானால் அவர்களும் முரட்டு மனிதக் குரங்குகள்.

90. முன்னோர்கள் சொல்வதெல்லாம் தப்பு என்று தூஷிப்பார்களேயானால் அவர்களும் மனிதக் குரங்குகளே.

91. தாம் செய்த பாபங்களை நினைக்காமல் தம்மைத் தண்டிக்கிற தெய்வத்தையோ அதிகாரிகளையோ நிந்திப்பார்களேயானால் அவர்களும் மனிதக் குரங்குகளே.

92. குற்றம் செய்தவர்கள் இனிமேல் செய்கிறதில்லை என்று மனப்பூர்வமான மன்னிப்புக் கேட்டுக்கொண்ட பிறகும் அவர்களை ரக்ஷிக்காதவர்கள் மனிதக் குரங்குகள்.

93. தர்ம காரியங்களை அழிக்கிறவர்கள் மனிதக் குரங்குகள்.

94. தர்ம கார்யங்களைத் தடுக்கிறவர்களும் மனிதக் குரங்குகள்.

95. தர்மம் செய்கிறவர்களை நிந்திக்கிறவர்களும் மனிதக் குரங்குகள்.

96. தாமே சமையல் செய்து சாப்பிடும் ஸந்யாஸிகளும் மனிதக் குரங்குகள்.

97. அவரவர்களுக்கு அநாதியாக ஏற்பட்ட தென்கலை வடகலை புண்ட்ரங்களை தரித்துக் கொள்ளுகிற மஹான்களைக் கேவல நாமத்துக்காகத் தூஷிக்கிறவர்களும் வித்வந் மனிதக் குரங்குகள்.

98. அந்த அந்த ஆசார்யர்களுக்கு ஏற்பட்ட ப்ரஸித்தமான நாமங்களை மாற்றி வேறு நாமங்கள் போட்டால் தான் பெருமாளை ஸேவிக்கலாம் என்று தடை செய்கிறவர்களும் மனிதக் குரங்குகள்.

99. ஆத்மா நல்ல கதியை அடையத் தடையான இதைப்போல இன்னும் அநேக -

கெட்ட கார்யங்களைச் செய்கிறவர்களும் மனிதக் குரங்குகளே.

100. தன் ஜீவரத்னத்தைப் பகவானுக்கு அர்ப்பணம் செய்யாமல் கடித்து உமிழ்ந்து வ்யர்த்தமாக்குகிறவர்களும் மூட மனிதக் குரங்குகளே.



இவற்றைத் தவிர இன்னும் அநேக ஆயிர விதங்களான பாபங்களைப் புத்தியின் கெடுதலால் பண்ணுகிறவர்களும் இருக்கிறார்கள். அவர்களும் மனிதக் குரங்குகள்தாம். ஆனாலும் இங்கு உதாஹரணத்துக்காக ஒரு நூறு விஷயங்கள் எழுதப்பட்டன.

குரங்கு போல் சஞ்சலமானது மனஸ். அப்படிப்பட்ட மனஸ் எவனுக்கு இருக்கிறதோ அவனை மனிதக் குரங்கு என்று சொல்லுகிறார்கள். இனிமேல் என்ன செய்ய முடியும்? நாம் மனிதக் குரங்குகளாக ஆகிவிட்டோமே! ஆகையால் மேலே செய்ய வேண்டியதை யோசிப்போம்.

ஸ்ரீமந் நாராயணன் என்று ஒரு பரதெய்வம் இருக்கிறதென்றும், அந்தத் தெய்வத்தின் கட்டளைதான் வேதம் என்றும், அந்த வேதத்துக்கு நம் ஆசார்யர்கள் சொல்லுகிற அர்த்தந்தான் சரி என்றும், அதன்படி நாம் நடந்து வந்தால் ஸகல க்ஷேமங்களையும் அடையலாம் என்றும் நம்பி, மநஸ்ஸை நல்ல விஷயங்களில் பழக்கி வந்தோமேயானால் மநஸ்ஸின் குரங்குத்தனம் போய், நல்ல மார்க்கத்தில் திரும்பி நம்மை ஆஞ்ஜநேயராக ஆக்கிவிடும். நமக்கும் ராமபக்தி நிறைந்து விடும். ஸகல ஜயமும் கிடைத்துவிடும். நாஸ்திகர்களை விரட்டும் சக்தி வந்துவிடும். நமக்கும் கோயில் கட்டுவார்கள். ப்ரதக்ஷிணம் செய்வார்கள். வடைமாலை போடுவார்கள். நம்முடைய அநுக்ரஹமும் அவர்களுக்குப் பலிக்கும். எல்லாருக்கும் க்ஷேமம் உண்டாகும்.

## முக்ய அறிவிப்பு

சந்தாதாரர்களுக்கு ப்ரதிமாதமும் 22ந் தேதிக்குள் தமிழ் புத்தகம் வந்து சேராவிட்டால் அருகில் உள்ள அஞ்சல் அலுவலகத்தை தொடர்புகொள்ள வேண்டுகிறோம். அதன் பின்னரே நம் அலுவலகத்திற்கு தெரியப்படுத்த வேண்டுகிறோம்.

**நிர்வாஹி**

# உகப்பும் - கசப்பும்

*புரிசை நடாதூர் ஸ்ரீபாஷ்யஸிம்ஹாஸனம் ஸ்ரீ உ.வே. க்ருஷ்ணமாசார்யர் ஸ்வாமி*

## உகப்பு


பகவானுக்குக் கைங்கர்யம் பண்ணுவது போல் பாகவத கைங்கர்யமும் விசேஷமாகப் பண்ண வேண்டும். இதை பகவானே சொல்லுகிறான்.

எனக்கு என்னை ஆராதிப்பவர்களிடத்தில் ப்ரீதி உண்டு. என்னுடைய பக்தர் விஷயத்தில் அதிகமான ப்ரீதியுள்ளது. என்னுடைய பக்தனுடைய பக்தனிடத்தில் அளவு கடந்த ப்ரீதியுள்ளவனாக இருக்கிறேன். ஆகையால் என்னுடைய பக்தபக்தர்களே விசேஷமாகப் பூஜிக்கக் கடவர்.

எவர்கள் பகவத் பக்தர்கள் எனில் -

தேவதாந்தரங்கள் இடத்தில் பக்தியில்லாதவர்களும், என்னுடைய பக்த ஜனங்களிடத்தில் ப்ரீதியுடையவர்களும், என்னையே ஶரணமாக அடைந்தவர்களும் எவர்களோ அவர்கள் என்னுடைய பக்தர்கள் எனப்படுகிறார்கள். அதாவது தேவதாந்தரங்களிடத்தில் பக்தியுடையவர்களும், என்னுடைய பக்த ஜனங்களிடத்தில் பக்தியில்லாதவர்களும் என்னுடைய பக்தர்களாக மாட்டார்கள் என்று பகவானே சொல்லுகிறான்.

பகவத் பக்தனை ஆச்ரயிப்பதாலும் அவனுக்கு பக்தன், அவனுக்கு பக்தன், அவனுக்கு பக்தன், என்று கடைசி எல்லையுள்ளவனுக்குக் கைங்கர்யம் செய்வதாலும் எல்லா பாபங்களிலிருந்தும் விடுபடுகின்றனர்.



இவ்விதமான ப்ரமாணங்களை ஆராய்ந்து பார்த்தால் ராஜாவிற்கு ராஜகுமாரனைக் கொண்டாடி மகிழ்வித்தால் ராஜாவிற்கு அபிமதமாயிருக்குமாப்போல் பாகவத கைங்கர்யம் பகவானுக்கு அபிமதமாயிருக்கையால் சேஷ பூதனானவன் சேஷிக்குச் செய்யும் கைங்கர்யத்தில் பாகவதருக்கும் கைங்கர்யம் ப்ரதாநமாய் இருக்கும்.

## கசப்பு

பாகவத அபசாரப்படக் கூடாது. பாகவதரின் வெறுப்புக்கு இலக்கானால்

அவரிடம் க்ஷமிக்கும்படி ப்ரார்த்திக்க வேணும். நாம் இந்த ஜந்மத்தில் அவர்கள் திறத்தில் செய்த அபராதத்திற்கப் பலனாகவோ, ஜந்மாந்தரத்தில் செய்த குற்றத்திற்குப் பலனாகவோ ஒரு பாகவதன் தன்னிடம் கோபம் கொண்டு கடும் சொற்களைச் சொன்னால் அவற்றைக் கேட்டுக்கொண்டிருந்து பிறகு அந்த பாகவதனை வணங்கி அவரிடம் மன்னிப்புக் கேட்பவனே உண்மையான பாகவதன்.

இப்போது நாம் அபராதம் பண்ணாமலிருக்க, ஜந்மாந்தரத்தில் நாம் செய்த பாபத்தாலே ஒரு பாகவதர் வெறுக்கில் அது பாகவத அபசார மூலமாக ஏற்பட்ட சீற்றமில்லாமையால் (அந்த பாகவதர் எதையோ தவறாக நினைத்து நம்மிடம் த்வேஷப்படுகிறார் என்று எண்ணி) அதற்கு க்ஷமாபணம் (மன்னிப்பு) கேட்க வேண்டுமோ என்று எண்ண வேன்டாம். இங்ஙனம் செய்யாவிட்டால் நமக்கு வரும் அநிஷ்டத்தைக் கேண்மின்.

எவர்கள் ப்ரஹ்ம வித்துக்களான பாகவதர்களோ அவர்களை என்னுடைய அந்தராத்மாவாக நினைத்திருக்கிறேன். இதில் எனக்கு ஸம்ஶயமில்லை. அவர்கள் பூஜிக்கப்பட்டால், என்னை விதிப்படி பூஜித்தவனாக ஆவேன். அவர்கள் ஸந்தோஷப்பட்டால் நான் ஸந்தோஷமடைவேன். அந்த ப்ராஹ்மணர்களை விரோதியாக நினைப்பவனை நான் எனது விரோதியாக நினைப்பேன்.

ஒரு ப்ராஹ்மணன் தன்னை அடித்தும், ஶபித்தும், கடுஞ் சொற்களைக் கூறினாலும் அந்த ப்ராஹ்மணனை, 'ஸாத்விக தேவதை எது என்று பரீக்ஷிப்பதற்காக வந்து தன் காலாலே லக்ஷ்மீ வாஸஸ்தாநமான எனது மார்பிலே உதைத்து துர்பாஷணைகளைச் சொன்ன ப்ருகு மஹர்ஷியை நான் எப்படி ஸேவித்தேனோ அவ்விதம் வணங்க வேணும்' அப்படி வணங்கவில்லையே யாகில் அவன் மூடன். ஸர்வபாபத்தையும் பண்ணியவனாவான். ப்ராஹ்மணனுடைய கோபமாகிற காட்டுத்தீயால் எரிக்கப்பட்டவன். அதனாலேயே கொல்லத்தகுந்தவன். தண்டனைக்கு உரியவன். என்னைச் சேர்ந்தவனாகான் என்று பகவான் அருளிச் செய்கிறான்.

அர்த்த காமங்களடியாக ஸ்ரீ வைஷ்ணவர்களை அநாதரித்திருக்குமாகில் ஸார்வபௌமனான ராஜாவினுடைய புத்ரனை ராஜ ஸந்நிதியில் உதாஸீநம் செய்தால் ராஜா வெறுக்குமாப்போலே எம்பெருமான் திருவுள்ளம் சீறும். அநுகூலரை அநாதரிக்கலாகாது.

வீட்டின் தலைவன் தன் குழந்தையை அநாதரித்துத் தன்னிடம் உதவியை வேண்டி வருபவனிடம் அன்பு கொள்வதில்லை. அவ்விதமே பகவான் தன் ஸந்நிதியில் உள்ள பாகவதனை அநாதரித்தவனை உகக்க மாட்டார்.

ஸ மஹாத்மா ஸுதுர்லப: என்று பகவானால் கொண்டாடப்பட்ட மஹாத்மாவான பாகவதனை எவன் த்வேஷிக்கிறானோ, எவன் கேஶவனை ஸ்மரிப்பதில்லையோ அவர்களோடு ஸ்நேகமுடையவர்களுக்கும் கங்காதி புண்ய தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்தாலும் பாபம் போகாது. ✹

மருளொழி நீ மடநெஞ்சே - 29

# பெரியாழ்வாரின் ஸ்ரீக்ருஷ்ணாநுபவம்

திருப்புல்லாணி ஸ்ரீஸ்ரீநிவாஸன், சென்னை 91

முன்னுரை

இது ஆவணி மாதம். எம்பெருமானின் அவதாரங்களுள் உத்க்ருஷ்டமான க்ருஷ்ணவதாரத்தின் நாயகனான ஸ்ரீக்ருஷ்ணர் அவதரித்த மாதமிது. நெறியெல்லாம் எடுத்துரைத்த நிறை ஞானத்தொரு மூர்த்தியான ஸ்ரீக்ருஷ்ண பகவானின் மேன்மையையும், எளிமையையும் எவ்வளவு கூறினும் பேசினும் அது அமுதமாகவே தித்திக்கும். அப்பொழுதைக்கப்பொழுது என் ஆராவமுதமே என்றபடி நமக்கு திருப்தி ஏற்படுவதில்லை. ஆழ்வார்கள் அனைவரும் மற்றும் ஆசார்யர்கள் எல்லோரும் ஒருசேர நின்று ஸ்ரீக்ருஷ்ணனின் அருமை - பெருமைகளைப் பேசிப் போந்தனர். இதனால் ஸ்ரீக்ருஷ்ணவதாரத்திற்கான சிறப்பு மேலும் மெருகேறியது.

இந்த வகையில், எம்பெருமான் மீது பொங்கும் பரிவு கொண்ட பெரியாழ்வார், இன்றைய இலக்கியஉலகில் ப்ரஸித்தி பெற்று விளங்கும் பிள்ளைத் தமிழில் அக் கண்ணனின் சேஷ்டிதங்களை தாயான யசோதைப் பிராட்டியாகத் தம்மைப் பாவித்துக்கொண்டு அழகான பைந்தமிழ் பாசுரங்களை அருளிச் செய்தார். பெரியாழ்வார் அருளிச் செய்த திருப்பல்லாண்டு தொடக்கமாக நம்மால் ஸேவிக்கப்படும் அவர் திருமொழிகளுக்கு ‘பெரியாழ்வார் திருமொழி’ என்று பெயர். (திருமொழி என்றால் வேதம் என்று பொருள். திருமொழியாய் நின்ற திருமாலே என்று பூதத்தாழ்வாரின் இரண்டாம் திருவந்தாதி - பாசுரம் 64ஐ நோக்குக.)

பெரியாழ்வார் திருமொழி ஸ்வாமி ஸ்ரீதேசிகனின் திருவுள்ளப்படி - ஏரணி பல்லாண்டு முதல் பாட்டு நானூற்று எழுபத்தொன்றிரண்டு (473) ஆகும். அநேக பதிகங்கள், கண்ணனின் ப்ரபாவங்களே பேசப்படுகின்றன. எம்பெருமானின் அவதாரச் சிறப்பு, திருமேனி ஸௌந்தர்யம், தாலாட்டு, அம்புலி, செங்கீரைப் பருவம், சப்பாணி, தளர்நடை, புறம்புல்குதல், அப்பூச்சி காட்டல், அம்மம் உண்ணல், காதுக் கடிப்பிடுதல், நீராட்டம், குழல்வாரல், பூச்சூட்டல், காப்பிடல் போன்ற பல்வேறு பிள்ளைப் பருவங்களை ரஸித்து அநுபவிக்கிறார், ஆழ்வார். மூன்றாம்பத்து 6ம் திருமொழியுடன் ஆழ்வாரின் ஸ்ரீக்ருஷ்ணநுபவம் நிறைவு பெறுகின்றது. தேனைய்த் தித்திக்கின்ற இப்பாசுரங்களிலிருந்து ஒன்றிரண்டை ரஸித்து அநுபவிக்கலாம்.

கண்ணனின் அவதாரச் சிறப்பு

பாண்டிய நாட்டுத் திருப்பதிகள் பதினெட்டில் (18) உள்ள விசேஷ ஸ்தலம் திருக்கோஷ்டியூர். இந்த ஊரில் தான் பாண்டிய தேசத்து அரசனான ஸ்ரீவல்லபதேவ பாண்டியனின் புரோஹிதராகவும், அரசனுடைய அமைச்சரவையில் அங்கம் வஹித்தவரும், எப்பொழுதும் தான் எம்பெருமானுக்கு அடியவன் என்ற சேஷத்வ ஜ்ஞாநமும், ஸ்ரீவைஷ்ணவர்கள் பால் நிறைந்த அபிமாநமும் கொண்டிருந்த செல்வ நம்பி என்பவர் வாழ்ந்து வந்தார். இவர் பெரியாழ்வாரின் நெருங்கிய நண்பர். ஒரு ஸமயம் செல்வநம்பியைப் பார்ப்பதற்காக பெரியாழ்வார் திருக்கோஷ்டியூர் சென்றார். அன்றைய தினம் ஸ்ரீஜயந்தி - ஸ்ரீகண்ணனின் அவதார தினம். திவ்யதேச எம்பெருமானான ஸ்ரீஸௌம்யநாராயணப் பெருமாளை அநுபவித்து ஸேவித்து மகிழ்ந்தார். உரக மெல்லணையான் உறைந்து, நித்யவாஸம் செய்தருளும் இந்த திவ்யஸ்தலம் மனதிற்கு திருப்தியையும் ஸந்தோஷத்தையும் தந்தது.



அந்தத் திருக்கோவிலே நந்தகோபரின் திருமாளிகை போலவும், நீர்வளம் நிலவளம் நிரம்பிய திருக்கோஷ்டியூரே 'திருவாய்ப்பாடி' யாகவும் அவருக்குத் தோன்றிற்று. உடனே இந்த பாவநா ப்ரகர்ஷத்தாலே, கோபர்களின் ஜந்மத்தை ஆஸ்த்தாநம் பண்ணி யசோதா பிராட்டி பாவத்தை ஏறிட்டுக் கொண்டு அவர்கள் கூறும் வார்த்தைகளாகப் பாசுரங்களை அநுபவித்து க்ருஷ்ணாவதார ரஸத்தைப் பேசுகிறார். ஸ்வாபாவிகமாவே, இவருக்கு ஸ்ரீக்ருஷ்ணுவதாரத்தில் ப்ராவண்யம் அதிகம். அது இவருடைய பாசுரங்களிஞலேயே விளங்கும்.

**விட்டுசித்தன் மனத்தே கோவில் கொண்ட கோவலன் என்றல்லவோ பாசுரப்போக்கு.**

இங்கோர் விசேஷமும் உண்டு. நாலாயிர திவ்ய ப்ரபந்தத்தில் - முதலாயிரம் முதலில் - பின்பு இரண்டு, மூன்று, நான்காயிரம் எனப் பிரிவுகள். இந்த முதலாயிரத்தில், முதல் முதலாக மங்களஶாஸநம் செய்யப் பெற்ற திவ்யதேஶம் திருக்கோஷ்டியூர் ஆகும். இதற்குப் பின்னரே, ஏனைய திவ்யதேஶங்களின் மங்களாஶாஸநம் என்று பெரியோர் பணிப்பர். இனிப் பாசுரத்தைப் பார்ப்போம்.

**வண்ணமாடங்கள்சூழ் திருக்கோட்டியூர்**
**கண்ணன்கேசவன் நம்பிபிறந்தினில்**
**எண்ணெய் சுண்ணம் எதிரெதிர்தூவிட**
**கண்ணன் முற்றம் கலந்து அளறுயிற்றே.**

பாசுரப் பொருள்

**வண்ணமாடங்கள்** - அழகுமிக்க மாடங்களாலே

**சூழ்** - சூழப்பட்ட

**திருக்கோட்டியூர்** - திருக்கோட்டியூரில்

**கேசவன்** - கேசவன் என்கிற திருநாமத்தை உடையவனுய்

**நம்பி** - ஸகல கல்யாணகுண பூர்ணனான

**கண்ணன்** - ஸ்ரீக்ருஷ்ணன்

**இன் இல்** - இனிய திருமாளிகையிலே (ஸ்ரீநந்தகோபருடைய)

**பிறந்து** - திருவவதரித்த அளவிலே

**எண்ணெய்** - எண்ணையையும்

**சுண்ணம்** - மங்சள் பொடியையும்

**எதிரெதிர் தூவிட** - ஸந்தோஷம் மிகுதியாலே ஒருவருக்கொருவர் எதிர்த்துத் தூவ

**கண் நல் முற்றம்** - விசாலமாய தர்ஶநீயமான முற்றமானது (வீட்டின் முன்புற பாகம்)

*கலந்து - (எண்ணெயும், மஞ்சள் பொடியும்) துகையுண்டு (ஒன்று சேர்ந்து) தன்னிலே சேர்ந்து*

*அளறு ஆயிற்று* - சேறாகி - சேறு மயமாகி விட்டது.

*பாசுர விளக்கம்*

*வண்ணமாடங்கள் சூழ் திருக்கோட்டியூர்* - *வண்ண நன்மணியும் மரகதமும் அழுத்தி நிழலெழும் திண்ணைசூழ் திருக்கோட்டியூர்* என்கிறபடியே நாநாவிதமான நல்ரத்நங்களைக் கொண்டு நல்ல அழகுடன் பொருந்திய மாடங்களாலே சூழப்பட்டு இருக்கின்ற திருக்கோட்டியூரில்

*கண்ணன் கேசவன் நம்பி* - அழகிய சுருண்ட கேசங்களைக் கொண்டவனும் பரிபூர்ண நற்குணங்களையுடையவனுமான க்ருஷ்ணன். ப்ரஹ்மா, ருத்ரன் ஆகிய இருவரும் இவனிடமிருந்து உண்டானவர்கள். க-ப்ரஹ்மா, ஈஶ:-சிவன் - கேசவன் என்று பொருள் - அல்லது கேசி என்ற அசுரனைக் கொன்றவன் கேசவன் ஆவான்.

*பிறந்தினில்* - பிறந்தவளவில் என்று பொருளுரைக்கலாம். அல்லது பிறந்து + இன் + இல் என்று பிரித்தும் பொருள் கூறலாம். அப்போது ஸ்ரீமதுரையில் சிறைக்கூடம் போல பிறந்தவிடம் தோன்றாமல் இனிய இல்லத்தில் ஸ்ரீநந்தகோபருடைய திருமாளிகையில் பிறந்ததாகச் சொன்னது - ப்ரஹ்ம ருத்ராதிகளுக்குக் காரண பூதனாய் பரிபூர்ண குணங்களை உடையவன் ஸ்ரீக்ருஷ்ணனாய் வந்தவதரித்த வளவிலே.

*எண்ணெய் சுண்ணம் எதிரெதிர் தூவிட* -

எள் + நெய் = எண்ணெய், சூர்ணம் என்னும் வடமொழிச் சொல் சுண்ணம் எனத் திரிந்தாயிற்று. எண்ணெயையும் மஞ்சள் பொடியையும் ஹர்ஷத்தாலே களித்து ஒவ்வொருவர் எதிர்த்துத் தூவ

*கண்ணன் முற்றம்*

க்ருஷ்ணன் அவதரித்த பொழுதே அவனே க்ரஹ நிர்வாஹகன் பிள்ளையாக ஸ்ரீநந்தகோபன் நினைத்திருக்கையாலே கண்ணனுடைய முற்றம் என்று கூறுகிறார். கண் + நல் + முற்றம் என்று பிரித்துப் பொருள் கூறினால் விசாலமாய், விலக்ஷணமாய் காணப்படும் முற்றம் என்பதாகும்.

*கலந்தளறாயிற்றே* -

இவை இரண்டும் - எண்ணெயும் மஞ்சள் பொடியும் ஒன்றாய்ச் சேர்ந்து அந்த இடமானது சேறு போலே ஆயிற்றாம்.

*கவனத்துக்குரியன* -

ஒரு ஸமயம் தேவர்கள் அனைவரும் கூட்டமாய்க் கூடியிருந்து ஹிரண்ய ஸம்ஹாரம் செய்வதற்கான ஆலோசனைகளை இந்த இடத்தில் மேற்கொண்ட காரணத்தினால் இந்த ஸ்தலம் திருக்கோஷ்டியூர் என்ற திருநாமத்துடன் விளங்குகின்றது. இப்பெயரே தமிழில் திருக்கோட்டியூர் என்றாயிற்று.

இனி அடுத்த பாசுரத்தைப் பார்ப்போம்.

*ஆயர் புத்திரனல்லன்* -

*வாயுள்வையகம்கண்ட மடநல்லார்*
*ஆயர்புத்திரனல்லன் அருந்தெய்வம்*
*பாயசீருடைய் பண்புடைப்பாலகன்*
*மாயனென்று மகிழ்ந்தனர்மாதரே. (7)*

*பொருள்* -

இப்படித் திருப்பவளத்தினுள்ளே ஸகல லோகங்களையும் கண்ட யசோதையானவள் ஆனந்தத்தாலே அருகில் நின்றவர்களுக்கும் காட்ட, கண்ணபிரானும் தயை மேலிட்டு அவர்களும் தன் அநுபவத்தைப் பெறட்டுமே என்று திவ்ய சக்ஷுஸ்ஸைக் கொடுத்து அருள அவர்களும் ஆச்சர்யப் பட்டு இவன் நந்தகோபர் மகன் அல்லன்; இவன் ஸாக்ஷாத் ஸர்வேஶ்வரன். அரும் பெரும் தெய்வம். குணங்களனைத்தையும், நீர்மையையும் (எளிமை) உடையவனுமான சிறுபிள்ளை என்று

கூறி மகிழ்ந்தனர். இவன் மாயன். ஆச்சர்யமான சக்தியுடையவன் என்று மிகவும் ப்ரீதைகளானுர்கள் ஸ்த்ரீ ஜநங்கள் என்கிருர்.

திருமேனி வர்ணனம்

மேற்கொண்டு இனி இருபத்தொரு பாசுரங்களால் ஸ்ரீகண்ணபிரான் திருமேனியின் ஸௌந்தர்யத்தை யசோதா பிராட்டியினுடைய பாவத்தில் நின்று பாதாதி கேசாந்தமாக கண்டு அநுபவித்து சீதக்கடலில் என்றாரம்பித்துப் பாடுகிறார்.

பேதைக் குழலி பிடித்து சுவைத்துண்டும் என்று தன்னுடைய திருக்கைகளால் தாமரைப் பூப்போன்ற தன்னுடைய திருவடித் தாமரைகளை தன் திருப்பவளத்திலே வைத்துச் சுவைக்கும் அழகைக் காணுங்கள்! என்கிறார்.

இது போல திருவடிகளில் உள்ள விரல்கள், வெள்ளித் தண்டையுடன் கூடிய கணைக்கால்கள், யசோதைக்குப் பயந்து முழங்கால்களால் தவழ்ந்து ஓடும் நிலை, திருத்தொடையின் அழகு, திருக்கடிகை ப்ரதேஶத்தின் அழகு ஆகியவற்றை விவரிக்கிறார். அத்தத்தின் பத்தாம் நாள் தோன்றிய அச்சுதன் என்கிறார். இவ்வாழ்வார் மங்களாஶாஸநபரர் ஆகையாலே திருவவதரித்த நாளை விரோதிகள் யாரும் அறிந்து கொள்ளா வண்ணம் இருக்க, சூசகமாகத் தெரிவிக்கிறார்.

பின்னர் திருமருங்கு, திருவுந்தி, திருவுதரத்தின் அழகு திருமார்வின் அழகு, திருத்தோள்கள், திருக்கைத்தலங்கள் நெய்த்தலை நேமியும் சங்கும் நிலாவிய கண்ணபிரானின் திருக்கைகளில் சங்கு சக்ர ரேகைகள் அமைந்துள்ளன. இதனைக் காணீரே என்று அழைக்கிறாள்.

இனி திருக்கழுத்தின் வர்ணனை, திருப்பவளத்தின் அழகு, திருமுக மண்டலத்தின் ஸமுதாய சோபை, மறுபடியும் திருக்கண்களின் பிச்சேற்றும் அழகு, திருப்புருவங்கள், திருமகரக்குழையின் அழகு, திருநெற்றியின் அழகு, திருக்குழல்களின் சோபை என்று அனைத்து அவயவங்களையும் அழகாக வர்ணித்து பின் பதிகப்பயன் கூறுகிருர்.

சுருப்பார்குழலி யசோதைமுன்சொன்ன
திருப்பாதகேசத்தைத்
தென்புதுவைப்பட்டன்
விருப்பாலுரைத்த இருபதோடொன்றும்
உரைப்பார்போய் வைகுந்தத்
தொன்றுவர்தாமே!

யசோதையினுடைய பாவத்தை ஏறிட்டுக் கொண்டு பெரியாழ்வாரால் ஸ்ரீகண்ண பிரானின் வடிவழகை இந்த இருபத்தொரு பாசுரங்களையிட்டுப் பாடிய பாடல்களை விருப்பத்தொடு அநுஸந்திப்பவர்கள் இவ் விஷயங்களை பரிபூர்ணுநுபவம் பண்ணலாம் படியான, ஸ்ரீவைகுண்டத்திலே போய் சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே என்கிறபடியே எம்பெருமானை அநுபவித்து மங்களாஶாஸநம் பண்ணிக்கொண்டு ஒரு காலமும் பிரிவின்றி இருக்கப் பெறுவர் என்று தலைக்கட்டுகிறார். ❋



# நைமிசாரணியத்துள் எந்தாய் (23)

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியாவில் வெளிவந்த ஸஞ்சாரச் செய்திகளின் தொகுப்பு

*அந்நாளில் ஸ்ரீஸந்நிதியின் க்ரமங்கள்*

*காலை 6 அல்லது 6.30 மணிக்கு விஶ்வரூபம். விஶ்வரூபகாலத்தில் ஸுப்ரபாதம் ஸேவித்தவுடன் ஆராதகர் ஸ்ரீ அழகியசிங்கரின் தனியனை அனுஸந்திப்பார். அதன் பிறகு பாடத்தெரிந்தவர்கள் பகவத்விஷயமான பாட்டுக்களைப் பாடுவார்கள். விஶ்வரூப ஆரத்தி ஆனதும் ஆராதகர் பஞ்சாங்கத்தில் அன்றும் மறு நாளுமுள்ள திதி வார நக்ஷத்ர யோக கரணங்களை ஸேவிப்பார். அதன் பிறகு ஸ்ரீ அழகியசிங்கர் திருப்பல்லாண்டு துடங்கியாகும். பிறகு திருப்பள்ளியெழுச்சி, திருப்பாவை, அங்கண்ஞாலமஞ்ச, முதலிய திருமொழிப்பாசுரங்கள், தேசிகப்ரபந்தம், ஸ்ரீ ஸந்நிதி ப்ரபந்தம், தஶாவதார ஸ்தோத்ரம், பகவத்யான ஸோபானம், அபீதிஸ்தவம், ஸஹஸ்ரநாமம், ஸ்ரீ ந்ருஸிம்ஹ அஷ்டோத்ரம் ஆகிய ஸேவை நடக்கும். 7.30 அல்லது 8 மணிக்கு அபிகமன ஆராதனம் முடிந்து மங்களஹாரத்தியாகி, ஸேவிக்கப்பட்ட ப்ரபந்தங்கள் சாற்றுமுறை நடந்து கோஷ்டிக்கு தீர்த்தம் ஸ்ரீஶடாரியாகி கோஷ்டி வினியோகமும் நடைபெறும்.*

*பிறகு வேதபாராயணம் ஒரு ப்ரஶ்நம் நடைபெறும். பெரியபெருமாளுக்கு திருமஞ்சனம் நடக்கும் தினங்களில் சுமார் 9 மணிக்கு அபிகமன மங்களஹாரத்தியும் தொடர்ந்து சாற்றுமுறையும் நடக்கும். வெள்ளி மண்டபத்தில் எழுந்தருளியிருக்கும் எல்லா எம்பெருமான்களுக்கும் திருமஞ்சனம் பண்ணும் காலங்களில் சாற்றுமுறை சுமார் 10 மணிக்கு நடக்கும். 8.30 மணியிலிருந்து 9.30 அல்லது 10 மணி வரை ஸமாஶ்ரயணம் பரந்யாஸங்கள் நடைபெறும். 10 மணியிலிருந்து 11 மணி வரை ஸ்ரீ அழகியசிங்கர் காலக்ஷேபம் ஸாதித்தாகும். பிறகு மாத்யாஹ்நிக நீராட்டத்திற்கு எழுந்தருளியாகும். அது ஸமயம் ஸ்ரீ ஸந்நிதியில் இஜ்யாகால ஆராதனம் துடங்கி நடக்கும்.*



*12 மணிக்கு மேல் ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீஸந்நிதிக்கு எழுந்தருளி இஜ்யாராதன மங்களஹாரத்தியை செய்தாகும். கோஷ்டிக்கு தீர்த்தம் எடுக்கப்படும். பிறகு ததீயாராதனம். 1.30 அல்லது 2 மணிக்கு ஸ்ரீ அழகியசிங்கர் ஆஶ்ரமத்தில் கோஷ்டிக்கு வேத கோஷத்துடன் சந்தன தாம்பூல வினியோகம் நடைபெறும். அதுமுதல் 4 மணிவரை புதிதாக ஸேவிக்க*

ஸ்ரீ உ.வே. ஸாரநாதாசார்யர் ஸ்வாமி, மும்பை

வந்தவர்களும், ஸ்ரீ ஸந்நிதி நிர்வாஹ விஷயமாக ஸ்ரீ ஸந்நிதி நியமனம் பெறவேண்டியவர்களும் தண்டம் ஸமர்பிப்பார்கள். பிறகு 5.30 மணிவரை காலக்ஷேபம் ஸாதித்தாகும். காலக்ஷேபம் முடிந்ததும் ஸாயம் அனுஷ்டானத்திற்கு எழுந்தருளியாகும். அனுஷ்டானம் முடிந்ததும் 7 மணி சுமாருக்கு பானக ஆராதனத்திற்கு பெருமாள் ஸந்நிதிக்கு எழுந்தருளியாகும்.

ஸந்நிதியில் ஸஹஸ்ரநாம பாராயணம் முடிந்தவுடன் நித்யானுஸந்தானம் துடங்கி ஸேவை பண்ணுவார்கள். அவ்வமயம் பானக ஆராதனம் நடக்கும். அதன் பின் 1 அனுவாகம் அல்லது 10 பஞ்சாஶத்கள் பாராயணம் நடைபெறும். பிறகு மங்களஹாரத்தியாகி கோஷ்டிக்கு பானகம் வினியோகமாகும். இரவு 8 மணியிலிருந்து ஆராதனம் துடங்கி 9 மணிக்கு மங்களஹாரத்தி நடைபெறும். பின்பு தீர்த்த வினியோகாதிகள் நடைபெறும். இந்த க்ரமங்கள் இருப்பிடத்தில் நடப்பது போல் ஸஞ்சாரகாலங்களிலும் நடந்து வந்தது.

ஸ்ரீ ஸந்நிதி செலவினங்கள், ததீயாராதனை விஷயமாயும், சிப்பந்திகள் சம்பளம், நடைமுறை ரிப்பேர் விஷயங்களும் ஸ்ரீகார்யம் ஹஸ்தாந்த்ரம் மூலமாயும், மற்றபடி வெளியூர் ரிப்பேர்கள், ஸன்மானங்கள், ஶ்ரமதக்ஷிணைகள் ஸ்ரீ ஸந்நிதியில் ஸ்ரீ கார்யம் மூலமாகவும், கார்யஸ்தர்கள் செலவுகளும், கோர்ட் வ்யவஹார செலவுகளும் ஜெனரல் மேனேஜர் மூலமாயும் நடைபெற்று வந்தது. அதில் முதலிரண்டு செலவுகள் தினந்தோறும் நடப்பவைகள். பானக ஆராதனம் நடந்ததும் பெருமாள் முன்னிலையில் ஸ்ரீ அழகியசிங்கர் திருவோலக்கத்தில் ஸ்ரீகார்யம் ஸ்வாமி பெருமாள் தனியன், ஸேனை முதலியார் தனியன் ஸ்ரீ அழகியசிங்கர் தனியன் இவைகளை ஸேவித்துவிட்டு அச்செலவினங்களையும் அமுந்திரி செலவையும் வாசித்து இருப்பையும் விண்ணப்பிப்பார். பிறகுதான் அந்த கணக்குகள் ஏட்டில் பதியப் போகும்.

மேற்கொண்டு ஸஞ்சாரம்

அய்யம்பேட்டைச்சாவடியிலிருந்து கபிஸ்தலம் எழுந்தருளவேணுமென்று அவ்வூர் ப்ரமுகர்கள் ப்ரார்த்தித்ததின் பேரில் அங்கு எழுந்தருளியாயிற்று. மறு நாள் அங்கிருந்து புறப்பட்டு நரஸிம்ஹபுரம் எழுந்தருளியாயிற்று. அங்கு ரொம்ப காலத்திற்கு முன்னால் பெருமாள் எழுந்தருளி இருந்ததாக சொல்லப்பட்ட கர்ப்பக்ருஹத்தைப் பரிஷ்கரித்து நாலாபுறமும் மதிளும் ஏற்படுத்தி நன்றாக பரிஷ்கரிக்கப்பட்ட ஸந்நிதியில் பெருமாளுடைய விசேஷ நியமனத்தின் பேரில் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனை ஸ்ரீ அஹோபிலத்தில் மாலோலன் எழுந்தருளியிருப்பதுபோல் எழுந்தருளப்பண்ணி ப்ரதிஷ்டை நடத்தப்பட்டது. இதையும் தக்ஷிண அஹோபிலம் என்ற பெயருக்கேற்ப பெருமாள் ஸந்நிதியில் எழுந்தருளியிருப்பது ரொம்பவும் பொருத்தமென்று திருவுள்ளம் பற்றி பெருமாளை அந்த ஸந்நிதியில் எழுந்தருளப்பண்ணியாயிற்று.

கிழக்கில் ஆதனூர் திவ்ய தேசமும் மேற்கில் புள்ளம்பூதங்குடியும் மத்தியில் சிங்கவேழ்குன்றத்து எம்பெருமானும் எழுந்தருளியிருந்தது அன்று த்ரிதாமாவாக ஸேவை ஸாதித்தார். அவ்விடமுள்ள ப்ருந்தாவநத்தில் உள்ள எல்லா அழகியசிங்கர்களையும் மங்களாஶாஸனம் செய்து கொண்டு திருக்குடந்தைவாசிகளின் ப்ரார்த்தனையின் பேரில் 8.10.1955 ஸயங்காலம் திருக்குடந்தை எழுந்தருளினார். அங்கிருந்து நெடுங்கொல்லைசத்திரம் எழுந்தருளி 11.10.1955 கஞ்சங்கொல்லைக்கு எழுந்தருளினார். அங்கு 41ம் பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் வார்ஷிக ஆராதனத்தை முன்னிட்டு வேத, திவ்யப்ரபந்த, க்ரந்த சதுஷ்டய பாராயணங்கள் உபக்ரமிக்கப் பட்டன. அன்று இரவு ஜெயங்கொண்டம் எழுந்தருளினார். அங்கிருந்து 14.10.1955 அன்று ஸ்ரீமுஷ்ணம் எழுந்தருளினார்.

ஸ்ரீ ஹரி: ஓம் நமோ பகவதே ப்ரேமிகேந்த்ராய!

**ஸ்ரீ ஸாந்திபனி குருகுலம் ஸ்ரீரங்கம் டிரஸ்ட்**

**ஸ்ரீப்ரேமிக வேதாஸ்ரமம்,**
**127, வடக்கு உத்திரவீதி,**
**ஸ்ரீரங்கம் – 620 006.**



**போன்: 0431 – 4542299**
**செல்: 94444 60079/984199 2022**
**மின்னஞ்சல்:**
**srirangampadasalai@gmail.com**

அன்புடையீர்,
பூலோக வைகுண்டமான ஸ்ரீரங்கத்தில் "ஸ்ரீ ப்ரேமிக வேதாஸ்ரமம்" 127, வடக்கு உத்திர வீதி என்ற இடத்தில் ரிக், யஜூர் வேத பாடசாலை, மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு, ஸ்ரீ ஸாந்தீபனி குருகுலம் ஸ்ரீரங்கம் அறக்கட்டளையின் சார்பில் நடந்து வருகின்றது. இந்த வேத கைங்கர்யத்தை உங்களைப் போன்ற நல்ல உள்ளங்களின் ஆதரவுடன்தான் தொடர்ந்து நடத்த முடியும். அதனால் தாங்கள் முடிந்த அளவில் பொருளுதவி செய்து வேத நாராயணனின் பரிபூரண அருளுக்குப் பாத்திரர்கள் ஆகும்படிக் கேட்டுக்கொள்கிறோம்.

| | |
|---|---|
| வேத பாடசாலையின் ஒரு நாள் செலவு | ரூ.7,500 |
| ஒரு மாத பராமரிப்பு செலவு | ரூ.2,00,000 |

பாடசாலை வங்கி கணக்கு விவரம்: கரூர் வைஸ்யா பேங்க், ஸ்ரீரங்கம். SREE SANTHEEPANI GURUKULAM, A/C.NO.1276155000016800, IFS.CODE. KVBL0001276. மேலே கொடுக்கப்பட்டுள்ள செலவு விவரம் தகவலுக்காக மட்டுமே. அன்பர்கள் அவரவர் விருப்பிய/இயன்ற தொகையினை செலுத்தி இந்தக் கைங்கர்யத்தில் பங்கு கொள்ளலாம்.

நன்கொடைகளை காசோலையாகவோ, மணி ஆர்டர் மூலமாகவோ, மின்னணுப் பணப் பரிமாற்றம் மூலமோ செலுத்தலாம். தங்கள் பெயர், நக்ஷத்திரம், முகவரி, தொலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரியை மேற்கண்ட விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

நன்கொடையாளரின் குடும்பத்திற்காக சிறப்பு ப்ரார்த்தனை செய்து அதன் ப்ரஸாதம் மற்றும் இரசீது அனுப்பி வைக்கப்படும்.

குறிப்பு: நன்கொடைகளுக்கு வருமான வரி சட்டம் பிரிவு 80G ன் படி வரிச்சலுகை உண்டு.

- நிர்வாகிகள்


### *ஸ்ரீமுஷ்ணத்தில் மங்களாஶாஸனம்*

*பாத்மபுராணத்தில் சொல்லப்பட்ட 8 ஸ்வயம்வ்யக்த க்ஷேத்ரங்களில் 2-வது ஸ்வயம்வ்யக்த க்ஷேத்ரமான ஸ்ரீமுஷ்ணத்தில் ஸ்ரீ பூவராஹனை மங்களாசாஸனம் செய்தருளியாயிற்று. வழக்கம்போல் எல்லா மரியாதைகளும் நடந்தன. அவ்வூரில் எழுந்தருளியிருந்த இரண்டு நாளிலும் நித்ய புஷ்கரிணியில் காலை நீராட்டம் கண்டருளி அனுஷ்டானத்தை முடிக்கும்படியாயிருந்தது. அங்கிருந்து காவனூர் எழுந்தருளினார். அங்கிருந்து 16.10.1955 விருத்தாசலம் எழுந்தருளினார். அங்கு இரவு டோலை நடந்தது. அங்கிருந்து கம்மாபுரம், உடையூர், எழுந்தருளி 18.10.1955 சிதம்பரம் எழுந்தருளினார்.*

### *தில்லை திருசித்ரகூடம் மங்களாசாஸனம்*

*ஸ்ரீ அழகியசிங்கரிடத்தில் அவ்வூர் ப்ரமுகர்களும் கோயில்துறையார்களும் சித்திரகூடத்தெம்பெருமானை மங்களாஶாஸனம் பண்ணியருள வேணுமென்று விஜ்ஞாபித்தபடியால் அதன்பேரில் எழுந்தருளி மங்களாஶாஸனம் செய்தருளியாயிற்று. வழக்கம்போல் எல்லா மரியாதைகளும் நடந்தன. பெருமாளுடன் ஸ்ரீ அழகியசிங்கர் சித்திரகூட வீதியார வரவேணுமென்று அவ்வூர்வாஸிகள் ரொம்பவும் ப்ரார்த்தித்ததின் பேரில் பெருமாளுடன் தந்த பல்லக்கில் அவ்வூர் வீதிவழியாக விசேஷ வாத்யத்துடன் வாணங்களுடனும் எழுந்தருளினார். அங்கு 41-ம் பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் வார்ஷிக ஆராதனம் முன்னிட்டு முன்பு தொடங்கிய*

திவ்ய ப்ரபந்த வேத க்ரந்த பாராயணங்கள் சாற்றுமுறை பண்ணப்பட்டு நடந்தது. அங்கிருந்து 21.10.1955 கடலூர் புதுப்பாளையம் எழுந்தருளினார். அங்கு பெருமாளுக்கு திருமஞ்சனம் டோலைகள் நடந்தது. அங்கிருந்து 24.10.1955 திருவஹீந்திரபுரம் எழுந்தருளினார்.

### திருவஹீந்திரபுரத்தில் ஸ்ரீ அழகியசிங்கர்

திருவஹீந்த்ரபுரத்தில் ஊர் எல்லையிலிருந்து ஊராரெல்லோரும் வாண வேடிக்கைகளுடனும் வேத கோஷங்களுடனும் எதிர் கொண்டழைத்து ஸ்ரீதேசிகன் திருமாளிகையில் பெருமாளை எழுந்தருளப்பண்ணினார்கள். ஸ்ரீதேவனாதனையும் ஸ்ரீ தேசிகனையும் பூர்ண மன உகப்புடன் மங்களாஶாஸனம் செய்ய வேணுமென்று ப்ரார்த்தித்தபடியாலும் அன்று ஸ்ரீ தேசிகன் திருநக்ஷத்ரமானபடியாலும் ஸ்ரீ தேசிகன் திருமாளிகையிலிருந்து ஸந்நிதிக்கு எழுந்தருளி பெருமாளையும் ஸ்ரீ தேசிகனையும் மங்களாஶாஸனம் செய்துவிட்டு மலையேறி ஸ்ரீ ஹயக்ரீவனையும் மங்களாஶாஸனம் செய்துவிட்டு எழுந்தருளினார். யதாக்ரமம் எல்லாமரியாதைகளும் நடந்தன.

மாத்யாஹ்னிக ஸ்நானத்தை ஸ்ரீ தேசிகன் கிணற்றில் செய்தருளியாயிற்று. திருவஹீந்த்ரபுரத்தில் ஸ்ரீ மடத்தில் செய்யவேண்டிய ரிப்பேர்கள் பூர்த்தியானதை பார்வையிட்டு மடத்திற்கு எழுந்தருளினார். அங்கு எழுந்தருளியிருந்த நாள்களில் முதலாழ்வார்கள் திருநக்ஷத்ரம் வந்தபடியால் பெருமாள் புறப்பாடு கோஷ்டியில் அன்வயித்தாயிற்று. ஸ்ரீ மடத்தில் ஸ்ரீ ஆதிவண்ஶடகோப யதீந்த்ர மஹாதேசிகன் மூலவர் உத்ஸவர் விக்ரஹங்களின் ப்ரதிஷ்டை 2.11.1955 அன்று செய்யவேணுமென்று நியமித்து ஏற்பாடு செய்தாயிற்று. மறுபடியும் ஸ்ரீ தேசிகன் திருமாளிகைக்கு எழுந்தருளி அங்கு டோலோத்ஸவம் வெகு விமர்சையாக நடந்ததைக் கண்டு களித்து. 29.10.1955ல் அங்கிருந்து புறப்பட்டு பண்ருட்டி எழுந்தருளினார். திருவஹீந்த்ரபுரம் எழுந்தருளும்போது ஸ்ரீ தேசிகன் திருமாளிகையில் முதலில் எழுந்தருளி, அவ்விடமிருந்து புறப்படும்போதும் ஸ்ரீ தேசிகன் திருமாளிகையிலிருந்து புறப்படும்படி அமைந்ததைப்பற்றி எல்லோரும் ஶ்லாகித்தார்கள். பண்ருட்டியிலிருந்து வீரப்பெருமாநல்லூர் எழுந்தருளியாயிற்று. அங்கிருந்து 1.11.1955 திருவெண்ணைநல்லூர் எழுந்தருளினார்.

### திருவெண்ணை நல்லூர் மங்களாஶாஸனம்

ப்ரயாணத்தில் பஞ்சக்ருஷ்ணாரண்ய க்ஷேத்ரத்தில் ஒன்றானதாயும் ஸ்ரீ ஸந்நிதியின் ஆதீனத்தைச் சேர்ந்ததுமான திருவெண்ணைநல்லூர் ஸ்ரீவைகுண்டவாஸன் என்கிற ஸ்ரீ வைகுண்டநாதன் ஸந்நிதிக்கு 1.11.1955 இரவு எழுந்தருளினார். அந்த ஸந்நிதியில் பெருமாள் திருவாராதனம் நடந்தது. ஸ்ரீ வைகுண்டநாதனை ஸ்ரீ அழகியசிங்கர் மங்களாஶாஸனம் செய்தருளினார். கோபுரம், மதிள் முதலானவற்றை கடாக்ஷித்து கூடிய சீக்கிரம் ஜீர்ணோத்தாரணம் செய்ய வேண்டுமென்று திருவுள்ளம் பற்றியாயிற்று. 2.11.1955 அன்று இரவு ஆவியூர் எழுந்தருளினார். பிறகு 3.11.1955 அன்று திருக்கோவலூர் எழுந்தருளினார்.

### திருக்கோவலூரில் ஸ்ரீ அழகியசிங்கர்

ஸ்ரீ அழகியசிங்கரை வேத கோஷங்களுடன் வரவேற்று ஸ்ரீ வானமாமலை மடத்தில் எழுந்தருளப்பண்ணினார்கள். அவ்வூர்வாஸிகள் டோலோத்ஸவம் பண்ணி வைத்தார்கள். ஸ்ரீ அழகியசிங்கர் பெண்ணையாற்றில் நீராட்டம் செய்தார். 'திருக்கோவலூரதனுள் கண்டேன்' என்பதை 'திருக்கோவலூரதனுள் மாலோலனைக் கண்டேன்' என்று மாற்றி அனுஸந்தித்துக் கொண்டிருந்தபடி. 5.11.1955 இரவு புறப்பட்டு ஸ்ரீ ஸந்நிதி வீதி வழியாக மதிள் கோபுரம் முதலியவைகளை கை தொழுது பெண்ணலம் எழுந்தருளியாயிற்று. அங்கிருந்து மறுநாள் திருவெண்ணைநல்லூருக்கு எழுந்தருளி, ஸ்ரீ

வைகுந்த நாதனை ‘என்றைக்கும் என்னை’ என்ற திருவாய்மொழியை ஸமர்ப்பித்து வந்தித்து வாயார வாழ்த்தி கோஷ்டியாக அனுஸந்தித்தாயிற்று. ‘இன்கவி பாடும் பரம் கவிகளால்’ என்ற பாசுரத்தின் இறுதியில் ‘என் வைகுந்த நாதனே’ என்றிருப்பதையும் அனுஸந்தித்து திருக்கோவலூரில் தான் பெறாத பேற்றை இவ்விடத்தில் பெற்றதாகவுகந்து அனுஸந்தித்தாயிற்று. 6.11.1955 இரவு ஏமப்பூர் எழுந்தருளினார். அங்கிருந்து பேரங்கியூர் எழுந்தருளினார். பிறகு வெங்கடாத்ரி அகரம் எழுந்தருளி அங்கிருந்து பெரும்பாக்கம் எழுந்தருளினார்.

தீபாவளி

13.11.1955 பின்மாலை 4 மணிக்கு நரக சதுர்தசியை உத்தேசித்து (தீபாவளி) ஆராதனம் நடந்தது. அன்று ஸ்வாதியாகையால் பெரிய பெருமாளுக்கும், கண்ணனுக்கும் புண்யமான நரகசதுர்தசி ஸ்நான காலத்தில் எண்ணைகாப்பு திருமஞ்சனம் விசேஷமாக நடந்தது. கோஷ்டிக்கு எண்ணை வினியோகம் நடந்தது. காலை 6 மணிக்குள் நரகசதுர்தசி ஆராதனம் முடிந்த பிறகு 6.30 மணிக்கு வழக்கம் போல் விஶ்வரூபம் அபிகமனம் நடந்தது. ஊரார்களின் ப்ரார்த்தனையின் பேரில் அங்குள்ள ஸ்ரீ தேசிகன் ஸந்நிதிக்கு பெருமாள் எழுந்தருளினார். 15.11.1955 இரவு புறப்பட்டு கப்பூர் எழுந்தருளினார். அங்கு 34ம் பட்டம் ஸ்ரீ அத்திப்பட்டு அழகியசிங்கர் திருநக்ஷத்திர மஹோத்ஸவத்தை முன்னிட்டு வேத ப்ரபந்த க்ரந்த பாராயணங்கள் துடங்கப்பட்டன. 16.11.1955 இரவு புறப்பட்டு விழுப்புரம் எழுந்தருளினார். மறு நாள் பாதூருக்கு எழுந்தருளினார்.

பாதூரில் ஸ்ரீ அழகியசிங்கர் திருநக்ஷத்ரம்

பாதூர்வாஸிகள் பூர்ணகும்ப புரஸ்ஸரமாக எதிர்கொண்டழைத்தார்கள். பெருமாளும் ஸ்ரீ அழகியசிங்கரும் இரண்டு க்ருஹங்களில் எழுந்தருளியிருந்தார்கள். நெடுந்தெருவில் ரிப்பேருக்கு கொடுக்கப்பட்ட ஸ்ரீ ஸ்வர்ண அழகியசிங்கரின் டோலை சரிசெய்யப்பட்டு பாதூரில் அதை ஸமர்பித்தனர். அன்று ஸாயங்காலம் அந்த ஸ்வர்ண மண்டபத்தை யானையின் மேல் வைத்து வீதிவலம் செய்து பெருமாள் ஸந்நிதிக்கு கொண்டுபோகப்பட்டு ஸமர்ப்பிக்கப்பட்டது. அந்த மண்டபமானது வெண்கலத்தில் வார்த்து மேல் வெள்ளி தகடு போட்டு அதன் மேல் தங்க ரேக் தகடு இழைக்கப்பட்டிருக்கிறது. மறு நாள் ஸ்ரீ அழகியசிங்கர் திருநக்ஷத்திரத்தன்று ஸமர்ப்பிக்க வேணுமென்று அபிப்ராயம் இருந்தாலும் அன்று வெள்ளிக்கிழமையானபடியாலும் அன்றே பூராட நக்ஷத்திரம் வந்து விட்டபடியாலும் ஸ்ரீ அழகியசிங்கர் பானக ஆராதனத்தில் ஸ்வர்ண அழகியசிங்கருக்கு அந்த மண்டபத்தை ஸமர்ப்பித்தாயிற்று. எல்லோரும் ஸேவித்து ஆனந்த பரவசமடைந்தார்கள்.

மறுநாள் அங்கு ப்ருந்தாவநத்தில் எழுந்தருளியிருக்கும் 36ம் பட்ட ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ யதீந்த்ர மஹாதேசிகனை எழுந்தருளப்பண்ணி மங்களாஶாஸனம் செய்வித்து மாலை மரியாதையாகி ஸ்ரீ அழகியசிங்கரின் திரு நக்ஷத்ர வேத ப்ரபந்த க்ரந்த சாற்றுமுறை நடந்தது. ஸ்ரீ அழகியசிங்கரும் பூர்வாசார்யர்களுடைய பாதுகைகளை ஆராதித்து பாதுகாதீர்த்தம் ஸ்வீகரித்தாயிற்று. எல்லாருடைய ப்ரார்த்தனையின்படி ஸ்ரீ அழகியசிங்கருடைய ஸ்ரீபாத தீர்த்தமும் ஸ்ரீ அழகியசிங்கரால் கோஷ்டிக்கு ஸாதிக்கப்பட்டது.

ஸ்ரீ அழகியசிங்கர் கீழ்கண்டபடி ஸாதித்தார். ‘‘புராணாதிகளில் ஒவ்வொன்றுக்கும் சில காலம் வரையில் ஶாபம் முதலியதுகளால் ப்ரதிபந்தகம் இருந்து பின் ஒரு காலத்தில் அவை நீங்கி பழைய ரீதி வருவது வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அம்மாதிரியேதான் ஒவ்வொரு நிமித்தங்களை அனுஸரித்து நல்ல காரியங்கள் நடந்து வருகின்றன. ஆகவே, பகவத் ஸங்கல்பம் எந்தெந்த காலத்தில் யாரை வ்யாஜமாக கொண்டு எது நடைபெற

வேணுமோ அப்படி நடத்தி வைக்கிறது. நம்மால் ஒன்றுமில்லை. இது அனுபவத்தில் நன்றாக தெரிந்த விஷயம் என்று ஸாதித்துவிட்டு இரண்டொரு உதாஹரணமும் ஸாதிக்கும்படி இருந்தது.

நரஸிம்ஹபுரத்தில் வெகு நாளாக ஒன்றுமில்லாமலிருந்த கோயில் இப்பொழுதுதான் ப்ரதிஷ்டை நடைபெறும்படி ஸங்கல்பமிருந்தது என்றும், அதேமாதிரி தங்க மண்டபம் திருக்குடந்தையிலேயே ஸமர்பிக்கவேணுமென்று நினைத்திருந்தும் ஸ்வர்ண அழகியசிங்கரையே ப்ரதானமாக ஆராத்யமாக வைத்துக்கொண்டு பாதூரில் தன்னடிச்சோதிக்கெழுந்தருளின ஸ்ரீ ஸ்ரீநிவாஸ யதீந்த்ர மஹாதேசிகன் (36ம் பட்டம்) மங்களாஶாஸனம் செய்யும்படி பூராடத்தன்று ஸமர்பித்துக் கொண்டதை எடுத்துக் காட்டி மேற்படி ஸ்ரீ ஸ்ரீநிவாஸ யதீந்த்ர மஹாதேசிகனுக்கும் பூர்வாஶ்ரமத்தில் தன்னுடைய பூர்வாஶ்ரமத்தாருக்குள்ளவர்கட்கும் இருக்கும் பாந்தவ்யத்தை ஸாதிக்கும்படியாயிருந்தது. அதனாலேயேதான் தன் ஜன்ம நக்ஷத்ரத்தன்று அந்த அழகியசிங்கர் உகக்கும்படி ஸ்வர்ண அழகியசிங்கர் திருவுள்ளம் பற்றினார் என்றும் ஸாதிக்கும்படியிருந்தது.'' அன்று இரவு டோலோத்ஸவமும் விசேஷமாக நடந்தது. மேலும் ஸஞ்சாரவிஷயங்களை அடுத்த இதழில் பார்க்கலாம்.

**நைமிஶாரண்யத்தில் நவ நரஸிம்ஹர் ஸந்நிதி.**

இந்த உயர்ந்த க்ஷேத்ரத்தில் இதானீம் ஸ்ரீமத் அழகியசிங்கரின் நியமனப்படி நம் ஸ்ரீமடத்தில் மிக அற்புதமான அழகியதான பிங்க் மார்பிளில் நவ நரஸிம்ஹர் கோவில் வளாகம் கட்டும் பணி வெகு வேகமாக நடைபெற்றது. தற்பொழுது கொரோனா தாக்குதலால் வேலைகள் நின்றிருக்கின்றன. சீக்கிரத்தில் வேலைகள் தொடங்கி 9 கோவில்களின் ஸந்நிதிகளும் பூர்த்தியடைய ஸ்ரீ மாலோலன் அனுக்ரஹிக்க வேண்டும். ஸ்ரீ அழகியசிங்கரின் நியமனப்படி ஸ்ரீ ந்ருஸிம்ஹனுக்கு ஹால் மற்றும் ஆஶ்ரமம் கட்டும் வேலையும் தொடர்ந்து நடக்க எம்பெருமான் க்ருபை பண்ணவேணும். இந்த பணியில் எல்லாரும் பங்கு கொண்டு ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் அனுக்ரஹத்திற்கும், ஸ்ரீமத் அழகியசிங்கர்களின் க்ருபைக்கும் பாத்திரர்களாகி இந்த கைங்கர்யத்தை பூர்த்தி செய்ய உதவுங்கள். நீங்கள் அளிக்கும் நன்கொடைக்கு வருமானவரி சட்டதின் கீழ் 80 G சலுகை உண்டு. ✵

**ஸ்ரீ கோபால விம்ஶதி:**



ஹர்தும் கும்பே விநிஹித கர: ஸ்வாது ஹையங்கவீனம்
த்ருஷ்ட்வா தாம க்ரஹண சடுலாம் மாதரம் ஜாத ரோஷாம் ।
பாயாதீஷத்ப்ரசலித பதோ நாபகச்சந் ந திஷ்டந்
மித்யாகோப: ஸபதி நயநே மீலயந் விஶ்வகோப்தா ।। (4)

மதுரமான வெண்ணெயை அபஹரிக்க தாழியில் ஆழம் வரை கையைச் செலுத்தியவனாய் ரோஷம் கொண்டு கயிறு எடுத்து அலைகின்ற தாயைக் கண்டு சிறிது நகர்ந்தவனாய் செல்லாமலும், நிற்காமலும் உடனே இரண்டு கண்களையும் மூடிக்கொண்டவனுமான - பொய்யான இடையனும் ஸர்வ ஜகத்தையும் காப்பாற்றுகின்றவனான அந்த ஸ்ரீ கண்ணபிரான் எல்லோரையும் காப்பாற்றட்டும்.

தேஜஸ்வி

நைமிசாரண்யத்தில் ஸ்ரீமதஹோபிலமடத்தின்

# உத்தர அஹோபிலம் நவநரசிம்மர் கோவில் வளாகத்திட்டம்




## இத்திட்டத்தில் பங்கு கொள்ள அனைவரையும் அழைக்கிறோம்!

**நைமிசாரண்யம் க்ஷேத்திரத்தின் பெருமை**

108 ஸ்ரீவைஷ்ணவ திவ்ய தேசங்களில் ஒரு முக்கியஸ்தலம். இங்கு ஸ்ரீமன் நாராயணன் ஆரண்யரூபமாய் எழுந்தருளியுள்ளார். புராணகாலத்தில் இங்கு மகரிஷிகள் அனைவரும் பல யாகங்கள் செய்துள்ளனர். கோமதி நதி தீரத்திலுள்ள இந்த புண்ணிய க்ஷேத்திரத்தில் முனிவர் வேதவியாசர் ஸ்ரீமத் பாகவதம் மற்றும் மஹாபாரதம் எழுதி அருளினார். நைமிசாரண்யம் க்ஷேத்திரத்தில்தான் 43ம் பட்டம் தேவனார்விளாகம் ஸ்ரீமதழகியசிங்கரின் திருந்தாவனம் அமைந்துள்ளது.

**கோவில் திட்டத்தின் தனித்தன்மை**



இந்த புண்ணிய க்ஷேத்திரத்தில் ஸ்ரீமதஹோபில உத்திர அஹோபிலம் நவநரசிம்மர் கோவில் வளாகத்திட்டம் ஒன்று 45ம் பட்டம் வில்லிவலம் ஸ்ரீமதழகியசிங்கரால் நியமிக்கப்பட்டு, ப்ரக்ருதம் 46ம் பட்டம் ஸ்ரீமதழகியசிங்கரால் திட்டமிடப்பட்டு அவர்கள் அனுக்ரஹத்துடன் இத்திருப்பணி தொடங்கியிருக்கிறது.

இத்திட்டத்தின் அம்சங்கள்: நவநரசிம்மன் சன்னதிகள் (Area 12000 sft). அஹோபில க்ஷேத்திரம்போல் ஒன்பது வடிவங்களில் உள்ள நரசிம்மருக்கு ஒன்பது சன்னதிகள் இங்கு அமைக்கப்படும். மாலோல மண்டபம் (1500 Sft) (ஸ்ரீ மாலோலனை ஆராதிக்கும் வசதியுடன்). ஸ்ரீமதழகியசிங்கர் ஆஸ்ரமம். யாத்ரி நிவாஸ் (12 ரூம்களும் ஒரு ஹாலும் கொண்டது). கைங்கர்யம் செய்பவர்கள் தங்கும் வசதி (Staff quarters) ஸ்ரீமத் தேவனார்விளாகம் அழகியசிங்கர் திருந்தாவனமும் புனருத்தாரணம் செய்யப்படும்.

### இத்திருப்பணியில் பங்கு கொள்ள

**இக்கைங்கர்யத்தில் அனைவரும் பங்கு கொள்ளும் சில முறைகள்:**

குருசேவா: இக்கட்டடம் கட்டும் செலவு சுமார் ரூபாய் 12 கோடி ஆகிறது. ஒவ்வொரு சதுர அடி கட்டும் செலவு ரூபாய் 10,000/-. ஆகையால் ஒரு சதுர அடியின் தொகையோ அல்லது அதன் பல மடங்குகளையோ (Multiples of 10,000) குருசேவாஸ்கீமின்படி கட்டலாம். இதன்படி நன்கொடை அளிப்பவர்கள் பெயர் display செய்யப்படும்.

மஹா சேவா: இந்த ஸ்கீமின்படி நன்கொடை அளிப்பவர்களுக்கு யாத்ரி நிவாஸில் தங்கும் ரூம் வருடத்திற்கு மூன்று நாட்கள் என்று ஐந்து வருடங்களுக்கு வழங்கப்படும். ஒரு லட்சத்திற்கு மேல் அளிப்பவர்களுக்கு இலவச ரூம் வசதி ஐந்து வருடங்களுக்குமேல் வழங்கப்படும். Donations are exempted under 80G of Income Tax Act.

இந்த க்ஷேத்திர கைங்கர்யத்தில் பங்கு கொள்ள ஸ்ரீமடம் சிஷ்யர்களையும் மற்றும் ஆஸ்திகர்கள் அனைவரையும் அழைக்கிறோம். இத்திருப்பணியில் பங்கு கொண்டு ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் அனுக்ரஹத்திற்கும் ஸ்ரீமதழகியசிங்கரின் க்ருபைக்கும் பாத்திரமாக வேண்டுகிறோம்.

நன்கொடை பணம் காசோலையாக **Nymisaranyam Azhagiyasingar Charitable Trust** என்ற பெயரில் ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா அலுவலகத்தில் நேரிடையாகவோ அல்லது நைமிசாரண்யம் அழகியசிங்கர் சாரிடபிள் ட்ரஸ்ட், C/o. ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா, 30, வெங்கடேச அக்ரஹாரம், மைலாப்பூர், சென்னை - 600 004 அனுப்பவும்.

பாங்க் ட்ரான்ஸ்பர் செய்ய வேண்டிய விவரம்: A/c name: **Nymisaranyam Azhagiyasingar Charitable Trust;** Bank: **State Bank of India, Alwarpet Branch, Chennai A/c No. 36706751438 (Current a/c) IFSC Code: SBIN0002190.** Please mail transfer details (Name of Donor, Full address, Phone Nos., Email ID, Amount sent)to mail ID: **nymisaranyamtrust@gmail.com**

# முக்கூர் ஸ்ரீமதழகியசிங்கரின் ஸௌலப்யம்

நம் ஸம்ப்ரதாய குருபரம்பரையானது விஸ்தாரமானதாகவும் விஶேஷமானதாகவும் விளங்குகிறது. இதில் பல ஆசார்ய ஸார்வபௌமர்கள் அவதரித்திருக்கிறார்கள். அதில்

ஸ்ரீவண்ஶடகோப ஸ்ரீ வேதாந்த தேஶிக யதீந்த்ர மஹாதேஶிகன் என்ற நம் அஹோபில மடத்தின் 44 ஆம் பட்டத்தை அலங்கரித்த ஸ்ரீமதழகியசிங்கரிடம் காலக்ஷேபம் செய்து அவரது கல்யாண குணங்களை அனுபவிக்கும் பாக்கியத்தை அடியேனுடைய திருத்தகப்பனாரான ஸ்ரீ மடத்தின் ஆஸ்தான வித்வான் வைகுண்டவாஸீ தையார் ஸ்ரீ உ.வே லக்ஷ்மீ நரஸிம்ஹாச்சார் ஸ்வாமியும், அனேக காலமாக பெங்களூர் ஸ்ரீமதஹோபில மடத்தின் ஆராதகராயிருக்கும் அடியேனுடைய சிறுதகப்பனார் ஸ்ரீ உ.வே. அனந்தாச்சார் ஸ்வாமியும் பெற்றிருந்தனர்.

அவர்கள் மூலமாகவும் மேலும் மாலோலனின் அனுக்ரஹவிஶேஷத்தினால் நம் ஸ்ரீ ஸந்நிதியில் ஏழு தலைமுறைகளாக கைங்கர்யம் செய்துவரும் அடியேனுடைய பிதாமஹர் வித்வான் வைகுண்டவாஸீ ஸ்ரீ.உ.வே. ராமபத்ராச்சார் ஸ்வாமி, அடியேனின் சின்ன தாத்தா வித்வான் வைகுண்டவாஸீ ஸ்ரீ.உ.வே. தையார் வங்கீபுரம் ரங்கராஜாச்சார் ஸ்வாமி மற்றும் அடியேனுடைய மாமா தாத்தாவான ஸலக்ஷன கனபாடி வித்வான் வைகுண்டவாஸீ ஸ்ரீஉ.வே. பழவேரி சக்ரவர்த்தியாச்சார் ஸ்வாமி போன்ற எங்கள் பரம்பரையைச் சேர்ந்த பெரியோர்கள் ஸ்ரீமதழகியசிங்கரின் ப்ரபாவங்களும் அவரது பகவத் பாகவத பக்திக்கும் உதார குணத்திற்கும் சான்றாகும்படியான பல நிகழ்ச்சிகளை அடிக்கடிக் கூறுவதுண்டு. அப்படிப்பட்ட ஒரு நிகழ்வை பகிர்வதில் அடியேன் பெருமை கொள்கிறேன்.



ஒரு சமயம் நம் மடத்தில் ஸ்ரீமதழகியசிங்கரின் அத்யக்ஷத்தில் நிகழ்ந்த ஸதஸில் ஒரு ஸ்வாமி விஷயங்கள் ஸாதிப்பதற்காக எழுந்தருளியிருந்தார். அவர் தன்னோடு மற்றுமொரு ஸ்வாமியையும் அழைத்து

வந்திருந்தார். முதலில் அந்த ஸ்வாமி ஸதஸில் விஷயங்களை ஸாதித்தாயிற்று. அவருக்கு ஸ்ரீமதழகியசிங்கர் ஸம்பாவனையும் அருளியாயிற்று. பிறகு ஸ்வாமியுடன் வந்த மற்றொரு ஸ்வாமியிடம், ஸ்ரீமதழகியசிங்கர், அவர் ஸாதிக்கவிருக்கும் விஷயமென்ன என்பதை கேட்க, அவர், தான் திவ்ய ப்ரபந்த அத்யாயீ என்று கூறினார். பிரபந்தத்திலிருந்து ஸ்ரீமதழகியசிங்கர் சில கேள்விகள் கேட்டாயிற்று. அவற்றிற்கு இந்த ஸ்வாமி, உகக்கும்படி பதிலளிக்கவில்லை. ஆயினும் ஸ்ரீமதழகியசிங்கர் அந்த ஸ்வாமிக்கு ஸம்பாவனை அனுக்ரஹிக்க உத்தரவிட்டாயிற்று.

ஏகாந்தத்தில் கைங்கர்யபரர்கள், விஷயமறியாத அந்த ஸ்வாமிக்கும் ஸம்பாவனை அருளியதற்கு காரணம் வினவ, ஸ்ரீமதழகியசிங்கர் கீழ்வரும்படி ஸாதித்தாயிற்று, 'விஷயம் சொன்ன ஸ்வாமி ஒரு பண்டிதர், பரமபாகவதர். அவர் மற்றொருவரை அழைத்து வரும்பொழுது ஸம்பாவனை பெற்றுத் தருவதாக கூறியே அழைத்து வந்திருப்பார். அப்படிப்பட்ட பாகவதரின் வாக்கை பொய்பிக்கல் ஆகாது. ஆகவே தான், அவருக்கும் ஸம்பாவனை செய்யச் சொன்னேன்' எனக் கூறினாராம். இதிலிருந்து ஸ்ரீமதழகியசிங்கரின் பாகவதப்ரீதி நன்கு புலனாகிறது.

இப்பேர்ப்பட்ட மஹானின் தரிசனம் கிட்டாத என்னைப் போன்ற எளியோர்க்கு அவ்வழகியசிங்கரின் பரிபூரண அனுக்ரஹம் பெற்றிருந்த நம் ஸந்நிதியின் நாற்பத்தைந்தாம் பட்டம் ஸ்ரீமதே ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்ய பாதுகா ஸேவக ஸ்ரீவண்ஶடகோப ஸ்ரீ நாராயண யதீந்த்ர மஹாதேஶிகன் ஸ்வாமியிடம் ஸமாஶ்ரயணமும் க்ரந்தசதுஷ்ட்டய ப்ராரம்பமும் அடியேனுக்கு கிட்டியதன் பலனாகவே அடியேன் இன்று காலக்ஷேபாதிகளில் கலந்துகொள்கிறேன்.

இது போன்ற ஆசார்யர்கள் காட்டிய ஸன்மார்க்கத்தில் நம்மை வழிநடத்த அந்த ஆளரியின் ஸிம்மாசனத்தை தற்போது அலங்கரிக்கும் ப்ரக்ருதம் ஸ்ரீமதழகியசிங்கர் ஸ்ரீ ரங்கநாத யதீந்த்ர மஹாதேஶிகன் போன்ற மஹான்கள் நம் ஸம்ப்ரதாயத்தில் தோன்றி நம்மை ஆசீர்வதிப்பது நாம் செய்த பாக்கியமென்றே நினைக்கத் தோன்றுகிறது. ஆசார்யன் திருவடிகளே சரணம்.

தையார் வங்கீபுரம் ராமபத்ரதாஸன்

## வருந்துகிறோம்

திருமதி வஸந்தா சேஷாத்ரி அவர்கள் 17.7.2020 அன்று பரமபதித்ததைக் கேட்டு வருத்தமடைந்தோம். சிறந்த குணவதியாகவும், நல்ல சங்கீத ஜ்ஞானமும், சமஸ்க்ருத ஜ்ஞானமும் உள்ள இந்த அம்மாள் தனது 75 வயது பூர்த்தியானவுடன் ஆசார்யன் திருவடியை அடைந்தார் என்னும் செய்தியைக் கேட்டு மிகவும் வருந்துகிறோம்.

முக்கூர் ஸ்ரீமத் அழகியசிங்கர் காலம் தொட்டு மற்றும் வில்லிவலம் ஸ்ரீமதழகியசிங்கர் காலத்திலும் ஸ்ரீமடத்திற்காக பல முக்ய கோர்ட்டு கேஸ்களில் சீனியர் அட்வொகேட்டான ஸ்ரீமான் B.T. சேஷாத்ரி ஸ்வாமியின் தர்மபத்நி ஆவார் இவர். வில்லிவலம் ஸ்ரீமதழகியசிங்கரின் நியமனத்தின் பேரில் ஸ்ரீமான் B.T. சேஷாத்ரி ஸ்வாமி சென்ட்ரல் கமிட்டியின் தலைவராக இருந்த போழ்து பல நற்கார்யங்கள் செய்யும் தன் பர்த்தாவிற்கு மிகுந்த உறுதுணையாய் இருந்து அனைத்து ஸ்ரீவைஷ்ணவ கைங்கர்யங்களில் பங்கேற்றவர். அவரது குமாரத்தி ஸௌ. ஜெயஸ்ரீ தென் ஆப்பிரிக்காவிலிருந்தும், அவரது குமாரர் மெக்ஸிகோவிலிருந்தும் உரிய நேரித்தில் வந்து சரம கைங்கர்யங்களைச் செய்தனர். ஸ்ரீ B.T. சேஷாத்ரி ஸ்ரீஸ்ரீநாத் மற்றும் அவர்களது குடும்பத்தினர் அனைவருக்கும் ஸ்ரீப்ரியாவின் சார்பில் எங்களது ஆழ்ந்த அநுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஸ்ரீரங்கநாதன்

# முக்கூர் ஸ்ரீமதழகியசிங்கர் வைபவம்

அந்திமாலைப் பொழுது சூரியன் சற்று தனியும் நேரம் அந்த மாநகரம் முழுவதும் பரபரப்புடன் காணப்பட்டது.

அந்த பெரியவீதியில் அங்கும் இங்குமாக வாகனங்கள் சென்று கொண்டிருந்தன. ஒரு பெரிய கோபுரம் கட்டுமானப் பணிகளுடன் வேலை மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. மணல், ஜல்லி, சிமெண்ட், என பல புழுதி பறந்த தருணம் - ஒரு பெரியவர் - மஹான் அங்கு வந்தார். வேலையாட்கள் வணக்கம் சொல்லிவிட்டு வேலையை தொடர்ந்தனர். நடுத்தர வயதுடைய ஒருவன் அவரின் எதிரே வந்தான். கையில் எதையோ வைத்து ஆட்டி விளையாட்டாய் வந்தவனிடம், "தம்பி நலமா?" என விசாரித்தார். அவன் புரியாவிட்டாலும் சற்றென உணர்ந்து "சௌக்கியம் சாமி" என்றான். "ஆமாம் எங்க போயிட்டுவர!" என்று கேட்டார். "வேலையாட்களுக்கு டீ கொடுத்துட்டு வாரேன்" என்றான். "அனைவருக்கும் கொடுத்தாச்சா?" என்று கேட்டார். "முடிஞ்சுது சாமி" என்றான்.

"சரி மொத்தம் எத்தனை டீ கொடுத்தாய்" என்றார், அவன் பாக்கெட்டில் இருந்த சிறு நோட்டை பார்த்து 245 என்று சொன்னான். "சரி போ" என்றார். அவன் விடைபெற்றான். மஹான் மற்ற பணிகளை பார்வையிட்டார், சிறிது நேரத்தில் வேலை பொறுப்பேற்றிருக்கும் காண்ட்ராக்டர் வந்தார். நலம் விசாரித்தார். பணிகளைப்பற்றி ஆய்வு செய்தார். அவரிடம் மஹான் இன்று எத்தனை ஆட்கள் வேலை செய்கிறார்கள் என கேட்டார். காண்ட்ராக்டர் 270 என்று பதில் தந்தார். "சரி, ஆனால் 245 பெயர்கள்தான் நான் கணக்கிட்டேன்" என்கிறார். காண்ட்ராக்டர் தலை சொரிந்து "ஆமாம் சாமி. ஞாபக மறதி" என்று சொல்லிவிட்டு பணியை தொடர்ந்தார். மஹான் காண்ட்ராக்டரிடம் "கவனமாக இருங்கள். பலருடைய காணிக்கைகள். அதிக கவனம் தேவை." என்று சொல்லிவிட்டு கடந்தார்.

அந்த மஹான் வேறு யாருமல்ல. நமது ஸ்ரீமதஹோபில மடத்தின் 44வது பீடாதிபதி நம் ஸ்வாமி முக்கூர் ஸ்ரீமதழகியசிங்கர் தான். உலகையே நிமிர்ந்து பார்க்க வைத்த ஸ்ரீரங்கம் ராஜகோபுர திருப்பணியில் ஒரு நாள் நடந்த சம்பவம்தான் இது. அப்படி பார்த்து பார்த்து



அனுபவித்து அளவிட்டு தந்தது தான் நம் ராஜ கோபுரம்.



ஆம் முக்கூர், மூன்று கூறுகளை உடையது என்றால் மிகையாகுமோ. அதென்ன மூன்று கூர்? 1. திரு அஷ்டாக்ஷரம் 2. த்வயம் 3. சரமச்லோகம். மோக்ஷத்தை விரும்புகிறவன் மூன்று விஷயங்களை (ரஹஸ்யங்களை), அதனால் ஏற்படும் பலன்களை அறிய வேண்டும் அல்லவா? அந்த மூன்று கூறுகளை கொண்ட ஊர் முக்கூர் என்றால் மிகையாகுமோ!!!.

அந்த மோக்ஷபலனை நமக்கு பெற்று தரவல்ல நம் ஆசார்யன் நமது முக்கூர் ஸ்ரீமதழகியசிங்கர் முக்கூரில் எழுந்தருளியதால் தானே இந்த பெருமை பெற்றது முக்கூர். முக்கூர் மட்டுமல்ல நமக்கும் உயர்ந்த தத்வ ஹித புருஷார்த்தங்களை உணர்த்துவதற்காகவே மூன்று கோல்களை கொண்ட முக்கோலை ஏந்தி இங்கு அவதரித்தார் நமது ஸ்ரீமதழகியசிங்கர் முக்கோல் முனியாக.

''மத்தக்களிற்று வசுதேவர்தம்முடை
சித்தம்பிரியாத தேவகிதன்வயிற்றில்
அத்தத்தின்பத்தாம்நாள் தோன்றிய அச்சுதன்
முத்தம் இருந்தவா காணீரே
முகிழ்நகையீர்! வந்து காணீரே''

'அத்தத்தின் பத்தாம் நாள் தோன்றிய அச்சுதன்' பெரியாழ்வார் திருமொழி 1-3-6

முக்கூர் ஸ்ரீமதழகியசிங்கரின் திருநக்ஷத்திரம் ஹஸ்தம் அன்றோ! ஹஸ்தத்தின் பின் பத்தாம் நாள் திருவோணம் அன்றோ! ஆம் திருவோணம்! மலையப்பனின் அவதாரமாய் அவதரித்த நம் ஸ்வாமி தேசிகனின் நக்ஷத்திரமன்றோ! அந்த திருவோணத் திருநாளில் நம் அழகியசிங்கர் ஆஸ்ரம ஸ்வீகாரம் ஏற்றார் (ஹேமலம்ப - கார்த்திகை 12-திருவோணம்) 27-11-1957.

இப்படி ஒரு ஆசார்யன் எழுந்தருளி நமக்கு அருள் பாலிக்க இருப்பதை உணர்ந்துதான் பெரியாழ்வார் பாசுரம் உணர்த்துகிறதோ. ஹஸ்தத்தின் பத்தாம் நாள் தோன்றிய அச்சுதன், அந்த முக்கூர் ஸ்வாமியே. அச்சுதன் அமலன் அடியார்க்கு இனியன் நம் முக்கூர் அழகியசிங்கர்.

'மாரிமலைமுழைஞ்சில்' திருப்பாவை 23:

பாசுரம் விளக்கத்தில் நாம் ந்ருஸிம்ஹ அவதார மஹிமையை உணர்கிறோம். காட்டில் இருந்து புறப்பட்ட சிங்கம் நம்மை ரக்ஷிக்க ஸ்ரீ ந்ருஸிம்ஹனாய் அவதரித்த மஹிமையை உணர்த்தும்படியாக அமையும் பாசுரம். அப்படித்தானே நைமிசாரண்யம் எனும் காட்டில் இருந்து புறப்பட்டு நமது ஸ்ரீ மடத்தின் சீர்மை சிறக்க அவதரித்தவர் முக்கூர் ஸ்வாமி. நம் மாலோலனை ஆராதிக்க சிம்மமாய் வந்து நம் மடத்தின் ஆஸ்தானம் ஏற்றார். அப்படிப்பட்ட சீரிய சிம்மமான நம் ஸ்வாமி. சீரிய சிம்ஹாசனத்தில் அமர்ந்து நாம் வந்த கார்யம் தெரிந்து ஆராய்ந்து அருள்

பாவித்தவர்தான் நம் முக்கூர் அழகியசிங்கர். அவரது சாம்ராஜ்யத்தில் மட்டுமல்ல, ஏன் இன்றுவரை நமது மடத்தில் ஆசார்யனை தரிசிக்க வந்தவர்கள் பசியாறிவிட்டு தான் செல்கிறார்கள். ஸ்ரீமாலோலன் க்ருபா ஆசார்யன் அனுகிரஹம் என ரீங்காரம் ஒலித்துகொண்டுதான் இருக்கிறது.

44வது பட்டம் ஏற்றம்.

4 + 4 =8 திருஅஷ்டாக்ஷரம். திரு அஷ்டாக்ஷர மந்திரத்தின் திரு அவதாரமே நம் முக்கூர் அழகியசிங்கர்.

ஆம் 'வேதாந்த தேசிகன்' எட்டெழுத்துடைய திருநாமம் தானே.

4, 4 என இரண்டு நான்காக கணக்கிட்டால் இரண்டு அதாவது த்வயம். த்வய மந்திரத்தின் பெருமை.

உபாயம் பலம் இரண்டு விஷயங்களையும் வெளியிடுவதே த்வய மந்திரம். வேறு பலனிலும் வேறு உபாயத்திலும் பற்று இல்லாமல் மாலோலனை ஆராதிப்பதிலும் சிஷ்யர்களை ரக்ஷிப்பது என்பதை மட்டும் பூரணமாக செய்துகாட்டியவர் நம் முக்கூர் அழகியசிங்கர்.

4/4=1 ஏகம். ஏகம் என்றால் ஒன்று அல்ல ஒன்றேயொன்றுதான் (only one). உலகமே வியக்கும் அளவிற்கு பெரிய பெருமாள் ஸ்ரீ ரங்கநாதனுக்கு 13 நிலைகளை கொண்ட உயர்ந்த ராஜகோபுரத்தை உருவாக்கிய ராஜசிம்ஹம் அவர் ஒருவர் தானே.

4 X 4=16. பதினாறு ஆயுதங்களை உடைய நம் சுதர்சன ஆழ்வாரின் திரு அவதாரமாக சித்திரைக்கு முன் ஹஸ்தத்தில் உதித்த நம் மஹான் முக்கூர் அழகியசிங்கர். சிஷ்யர்களின் குறைகளை குறையின்றி களைந்தவர். 1. உடலில் நோயின்மை, 2. நல்ல கல்வி, 3. தீதற்ற செல்வம், 4. நிறைந்த தானியம், 5. ஒப்பற்ற அழகு, 6. அழியாப் புகழ், 7. சிறந்த பெருமை, 8. சீரான இளமை, 9. நுண்ணிய அறிவு, 10. குழந்தைச் செல்வம், 11. நல்ல வலிமை, 12. மனத்தில் துணிவு, 13. நீண்ட வாழ்நாள் (ஆயுள்), 14. எடுத்தக் காரியத்தில் வெற்றி, 15. நல்ல ஊழ் (விதி), 16. இன்ப நுகர்ச்சி. இப்படி 16 செல்வங்களை குறையின்றி பெற அனுகிரஹித்தவர் நம் முக்கூர் ஸ்ரீமதழகியசிங்கர் தானே.

4^4=256. இருநூற்றி ஐம்பத்தாறு. இதற்கு நமது முக்கூர் ஸ்வாமியின் கலை நுட்பத்தையும் உவமையாக கொள்ளலாம். அதாவது 236 அடிகளை கொண்ட ராஜகோபுரத்தை நிர்மாணித்து, அதை 13 நிலைகளை கொண்டதாக உருவாக்கி அதனுள் பிரவேசித்து பெரிய பெருமாளை சேவித்து ஆசார்யனை ப்ரார்த்தித்தால் மீதமுள்ள 9 என்பதாவது என்னவென்றால் 9 படிகளை கொண்ட ஸ்ரீவைகுண்டத்தில் நித்யஸூரியாக கைங்கர்யம் செய்ய ஹேதுவாகும். 256=236+13+9. பரமபதத்தின் பெருமையை உணர்த்தியதாக இதை அனுபவிப்போம்.

முக்கூர் ஸ்ரீமதழகியசிங்கர் நமது ஸ்ரீமதஹோபில மடத்தை நிர்வஹித்த காலம் 35 வருடங்கள். இங்கேயும் ஒரு கணக்கை பார்ப்போம். 3+5=8 திருஅஷ்டாக்ஷரம் தானே.

கணக்கை மிகவும் ரசிப்பவர் நம் முக்கூர் ஸ்ரீமதழகியசிங்கர். சிறு பிள்ளைகளிடம் பலகையை கொடுத்து கணக்கு போடச் சொல்லி சரியான விடைக்கு குழந்தைக்கு ஏற்ற பகுமானத்தையும் அள்ளி வழங்கியவர். அப்படி சிறுவயதில் அடியேனும் ஆசார்யனிடம் பகுமானம் பெற்றவன். நான் மட்டுமா, இதை வாசிக்கும் பலருக்கும் இந்த அனுபவம் ஏற்பட்டிருக்க கூடும். ஆசார்யன் அருள் அனைவருக்கும் கிடைக்க ப்ரார்த்திக்கும் அடியார்களில் அடியேனும் ஒருவனாய்.

ஆசார்யன் திவ்ய திருவடிகளே சரணம்
பனமுகை வீரவல்லி வீரராகவதாசன்

# வேகவாந்

திருப்புட்குழி ஸ்ரீ உ.வே. ஸ்ரீக்ருஷ்ண தாதாசாரியர் ஸ்வாமி, சென்னை 600 020

'தஸ்மாத் குரும் ப்ராப்த்யேத ஜிஜ்ஞாஸு: ச்ரேய உத்தமம்' என்ற பாகவத வாக்யம் கூறுவது யாதெனில் பரம ஸத்யத்தைப் பற்றி அறிய வேண்டியவன் ஸதாசார்யனை அணுக வேண்டும் என்பதே. உலக வழக்கத்திலும் நாம் பார்ப்பது அரசாங்கத்தின் அங்கீகாரம் பெறாத கலாசாலையில் பயின்றால் அவர்கள் அளிக்கும் சான்றிதழ் எவ்வாறு செல்லாது என்று கூறப்படுமோ அவ்வாறே குருமுகமாக கற்காததவை வீணே. இதை இளந்தலை முறையினருக்கு உணர்த்தும் வகையில் இவ் வ்யாஸத்தை குரு-சிஷ்ய ஸம்வாதமாக (உரையாடலாக) அமைத்துள்ளோம்.

**சிஷ்யன்** - ஸ்வாமி, அடியேனுடைய தண்டவத் ப்ரணாமங்களை ஏற்றுக் கொள்ளும்படி ப்ரார்த்திக்கிறேன். ஸ்வாமியின் இன்றைய உபதேசத்தைக் கேட்க ஆவலுடன் காத்திருக்கிறேன்.

**ஆசார்யர்** - பாலகா! உனக்கு ஸகல ஸௌபாக்யங்களும் உண்டாகட்டும். 'வேகவாந்' என்று யாரைப் புகழ்கிறோம் என்று அறிவாயா?

**சிஷ்யன்** - சிறிய ஞானத்தனான அடியேனுக்குத் தெரியவில்லை ஸ்வாமி.

**ஆசார்யர்** - நன்று. உண்மையை விளம்பினாய். முதலில் வேகத்திற்குப் பெயர் பெற்றது எது? என்று கூறுவாயாக.

**சிஷ்யன்** - ஸ்வாமி, ஒருவன் ஒரு கார்யத்தை மிகுந்த வேகத்துடன் செய்தால் அஸுர வேகத்தில் என்றும் அதைவிட வேகமாகச் செய்தால் வாயு வேகத்தில் செய்தான் என்றும் அதைவிட வேகமாக இருந்தால் மனோவேகம் என்றும் கூறுவோம்.

**ஆசார்யர்** - மகனே, இந்த வாயுவேகம் மனோவேகம் இவற்றை மிஞ்சும் வேகம் ஒன்று உள்ளது. அதுதான் நீ ஸந்த்யாவந்தனம் செய்யும் வேகம் (புன் சிரிப்புடன்) இதைப் பல நாட்களாகக் கவனித்து வருகிறேன்.

**சிஷ்யன்** - க்ஷமிக்க வேண்டும் ஸ்வாமி. இனி ஸந்த்யாவந்தனாதிகளை நிதானமாகச் செய்கிறேன்.



**ஆசார்யர்** - உன் தவற்றைப் புரிந்து கொண்டாய் அல்லவா? உன் க்ஷேமத்திற்காகவே சுட்டிக் காட்டினேன். இனி விஷயத்திற்கு வருவோம். வாயு வேகத்தையும் மனோ வேகத்தையும் மிஞ்சும் வேகம் ஒருவரிடம் உள்ளது.

**சிஷ்யன்** - அவர் யார்? என்பதை அறிய ஆவலாக உள்ளேன் அடியேன்.

**ஆசார்யர்** - என் அருமைச் சீடனே. அதற்கு முன் முதலையின் வாயில் அகப்பட்ட கஜேந்திரன் என்னும் யானையின் இடரை எம்பெருமான் எவ்வாறு தீர்த்தான் என்பதைக் கூறுகிறேன் கேள்.

**சிஷ்யன்** - அடியேன் பாக்யம் ஸ்வாமி. ஹரி கதையைக் கேட்டால் நமது பாபங்கள் அழியும் என்று முன்னமே உபதேசித்துள்ளீர்.

**ஆசார்யர்** - இந்த்ரத்யும்னன் என்னும் பாண்டிய மன்னன் பூஜை செய்து கொண்டிருந்த போது அங்கு வந்த அகஸ்த்ய முனிவரை உபசரிக்காததால் அகஸ்த்யர் அவனை யானையாகப் பிறக்கும்படிச் சபித்தார். அதன்படி இந்த்ரத்யும்னன் கஜேந்திரன்

என்னும் யானையாகப் பிறந்தான். ஆனாலும் பூர்வஜன்ம வாசனையால் எம்பெருமானிடம் பக்தி பூண்டு ‘சுனைநன் மலரிட்டு நினைமின் நெடியானே’ என்ற ஆழ்வாரின் வாக்கின்படி, அநுதினமும் தாமரைக் குளத்திற்குச் சென்று மலர் பறித்து **‘அமரர்க்கு அரியானை தமர்கட்கு எளியானை’** தொழுது வந்தான். ஒருநாள் அவ்வாறு குளத்தில் இறங்கி மலரைப் பறிக்கும்போது, தண்ணீருக்குள் இருந்த முதலை கஜேந்திரனின் காலைக் கதுவியது. எவ்வளவு போராடியும் கஜேந்திரனால் தன் காலை முதலையிடமிருந்து விடுவித்துக் கொள்ள முடியவில்லை. அப்போது தான் தம்முடைய பலத்தால் நம்மைக் காப்பாற்றிக் கொள்ள முடியாது என்ற ஜ்ஞானம் பிறந்தது கஜேந்திரனுக்கு. உடனே **‘நாராயணாவோ! மணிவண்ணா! நாகணையாய்! வாராய் என் ஆரிடரை நீக்காய்’** என்று அலறி எம்பெருமானைச் சரணமடைந்தான். அவன் கூக்குரலைக் கேட்ட அடுத்த க்ஷணமே எம்பெருமான் முதலை மேல் சீறி வந்து **‘ஆனையின் துயரம் தீரப்புள்ளூர்ந்து சென்று நின்று ஆழி தொட்டான்’** சக்ராயுதத்தால் முதலையை இருகூறாக்கி கஜேந்த்ராழ்வானை விடுவித்தான். முதலையாக இருந்த கந்தர்வனும் சாப விமோசனம் பெற்றான்.

**சிஷ்யன்** - மிகுந்த ரஸனையுடன் விளக்கினீர் ஸ்வாமி.

**ஆசார்யர்** - ரஸனை இன்னும் முடியவில்லை மகனே. இந்த வ்ருத்தாந்தத்தை ஸ்ரீரங்க திவ்ய தம்பதிகளின் லீலைகளில் ஆழங்கால் பட்டவரான ஸ்ரீபராசர பட்டர் ஸ்ரீரங்கராஜ ஸ்தவத்தில் அநுபவித்த பாங்கை விளக்கினால்தான் ரஸனை முடிவு பெறும்.

**சிஷ்யன்** - ஸ்வாமி, மந்தபுத்தியுள்ள அடியேனுக்கு பட்டரின் அனுபவத்தை விளக்க வேண்டும்.

**ஆசார்யர்** - குழந்தாய்! ஸ்ரீரங்கராஜ ஸ்தவத்தின் மேன்மையை முதலில் கேள். இந்த ஸ்தவம் இரண்டு சதகங்களைக் கொண்டது. பூர்வ சதகம் 127 ச்லோகங்களையும், உத்தர சதகம் 105 ச்லோகங்களையும் கொண்டது. பூர்வ சதகம் என்பது த்வய மந்த்ரத்தின் பூர்வ வாக்யத்தின் பொருள் என்றும் உத்தர சதகம் த்வய மந்த்ரத்தின் உத்தர வாக்யத்தின் விளக்கம் என்றும் அறிவாயாக.

**சிஷ்யன்** - அரிய விளக்கம் ஸ்வாமி. எந்த சதகத்தில் பட்டரின் அநுபவம் பொதிந்துள்ளது அடியேன்.

**ஆசார்யர்** - அன்பிற்குரிய சீடனே. உத்தர சதகத்தில்

**அதந்த்ரித சமுபதி ப்ரஹித ஹஸ்தம் அஸ்வீக்ருத ப்ரணீத மணிபாதுகம் கிம் இதிச ஆகுல அந்த:புரம்**
**அவாஹந பரிஷ்க்ரியம் பதகராஜம் ஆரோஹத: ।**
**கரிப்ரவர ப்ரும்ஹிதே பகவத: த்வராயை நம:**

கஜேந்திரனுடைய அபயக்குரல் எம்பெருமானின் திருச்செவியில் விழுந்தவுடன், தன் நிலைகுலைந்து, திருவடியைப் பிடித்துக் கொண்டிருந்த தேவிமார்களின் கைகளைத் தட்டிவிட்டு சடக்கென எழுந்து பரிவட்டம், மாலை இவற்றை முறையாகத் தரித்துக் கொள்ளாமல், பெருமாள் புறப்பாட்டிற்கு முன்னே செல்லும் சேனை முதலியாருக்கும் காத்திராமல் மணிபாதுகைகளையும் சாற்றிக் கொள்ளாமல், கருடன் மேல் ஆரோஹணித்து வேகமாகச் செல்லும்படி உத்தரவிட்டானாம். இவ் அவசரத்தில் ஸ்ரீகருடனையும் தானே இழுத்துக்கொண்டு மிக வேகமாகச் சென்று தடாகத்தை அடைந்து ஆனையின் இடரைக் களைந்தான் என்று வர்ணிக்கிறார்.

இச் ச்லோகத்தில் கஜேந்த்ரனைக் காப்பாற்ற ஓடிய அவனுடைய கல்யாண குணங்களுக்கு நமஸ்காரம் செய்யாமல், எம்பெருமான் தலைதெறிக்க ஓடிய வேகத்திற்கு நமஸ்காரம் **‘கரிப்ரவர ப்ரும்ஹிதே பகவத: த்வராயை நம:** அந்த (வேகத்திற்கு) த்வரைக்குப் ப்ரணாமம் என்று அநுஸந்தித்து, அவன் அடியார்களைக் காக்கச் செல்லும் வேகத்தை நமக்கு உணர்த்துகிறார்.

**சிஷ்யன்** - அற்புதம் ஸ்வாமி. வாயுவேகம் மனோவேகத்தைவிட எம்பெருமான் ஆச்ரிதனைக் காக்கும் வேகமே உயர்ந்தது என்பது விளங்குகிறது.

**ஆசார்யர்** - இத்தகைய மிகுந்த வேகம் உடையவனான எம்பெருமானையே ‘வேகவாந்’ என்று விஷ்ணு ஸஹஸ்ரநாமம் புகழ்கிறது.

*விக்ஷரோ ரோஹிதோ மார்கோ*
*ஹேதுர் தாமோதரஸ்ஸஹ: ।*
*மஹீதரோ மஹாபாகோ வேகவாந் அமிதாசந: ।।*

*சிஷ்யன்* - ஆசார்யரே! ஆச்ரிதர்களைக் காப்பாற்றுவதில் எம்பெருமான் காட்டும் வேகத்தை அடியேனுக்குப் புல்லரிக்கும் வகையில் எடுத்துக் கூறினீர்கள்.

*ஆசார்யர்* - அப்பனே! கஜேந்த்ரனின் கதையில், கதையை மட்டும் பார்க்காமல் அதில் பொதிந்துள்ள தத்தவத்தைக் கூர்ந்து கவனித்தால் நாம் உஜ்ஜீவிக்கும் வகையும் கூறப்பட்டுள்ளது என்றறிவாய்.

*சிஷ்யன்* - அந்த தத்துவம் அடியேனுடைய சிற்றறிவிற்கு எட்டவில்லை ஸ்வாமி.

*ஆசார்யர்* - கஜேந்த்ரன் முதலையின் வாயில் அகப்பட்டதைப்போல் நாம் ஐம்புலன்களின் பிடியில் சிக்கி பாபங்களைச் செய்து வருகிறோம். கஜேந்த்ரன் இருந்தது தடாகத்தில். நாம் இருப்பது ஸம்ஸார ஸாகரத்தில். கஜேந்த்ரனை ஆயிரம் ஆண்டுகள் முதலையின் பிடியில் சிக்கிக் கொண்டிருந்தான். நாமும் ஆயிரமாயிர ஜன்மங்களாக ஐம்புலன்களின் பிடியில் சிக்குண்டுள்ளோம். கஜேந்த்ரன் எவ்வாறு விடுபட்டான் என்று சிந்தித்தால் நாமும் ஸம்ஸாரத்திலிருந்து விடுபட்டு வீடுபேறு அடையலாம். கஜேந்த்ரன் என்ன செய்தான்? அயோநிஜரான பொய்கையாழ்வார்

*'நாவாயிலுண்டே நமோ நாரணா' என்று*
*ஓவாதுரைக்கும் உரையுண்டே மூவாத*
*மாக்கதிக்கண் செல்லும்வகையுண்டே*
*என்னொருவர்*
*தீக்கதிக்கண் செல்லும் திறம்?*

என்ற பாசுரத்தில் உபதேசிப்பதைப் பின்பற்றினான் கஜேந்த்ரன். தன் துன்பம் நீங்கி எம்பெருமானின் தர்சநத்தையும் பெற்றான்.

*சிஷ்யன்* - அடியேனுக்கு ஆழ்வாரின் திருவுள்ளத்தை (இப்பாசுரக் கருத்தை) விளக்க வேண்டும் ஸ்வாமி.

*ஆசார்யர்* - ஆழ்வார் கூறுவதாவது. இந்தப் பூமியில் உள்ள அனைவரும் நற்கதி அடைய முடியும். நம்மால் எளிதில் கூறக்கூடிய திருமந்திரமாகிய நமோ நராயணா என்ற திருவஷ்டாக்ஷர மந்த்ரம் உள்ளது. அதைக் கூறுவதற்குத் தேவையான கருவியாகிய நாக்கு எம்பெருமானால் நமக்குக் கிடைத்து உள்ளது. இந்த நாக்கினால் திருவஷ்டாக்ஷரத்தைக் கூறுவதால் மாக்கதி - பரம ப்ராப்யமான மோக்ஷமும் கிடைக்கும். சில மந்த்ரங்கள் உச்சரிப்பதற்கு ச்ரமமாக இருக்கும். திருமந்த்ரமோ ஸுலபமாகச் சொல்லக்கூடியது. இவ்வாறிருக்க பலர் இந்த நாக்கினால் உபயோகமற்ற விஷயங்களைப் பற்றி பேசி துக்கத்தை அநுபவிப்பது ஏன்? என்று வியக்கிறார்.

*சிஷ்யன்* - மிக நன்றாக விளக்கிவிட்டீர் ஸ்வாமி. கஜேந்த்ரன் நாராயணா என்று கூவிச் சரணடைந்ததும் எம்பெருமான் ஓடோடி வந்து காப்பாற்றினான். அதைப் போல நாமும் 'நாராயணா' என்று ஜபிப்பதே நமது நாக்கின் பயன் என்று உணர்ந்து இத் திருமந்த்ரத்தை உச்சரித்துக் கொண்டிருந்தால் ஆனைக்கு அருளை ஈந்தவன் நமக்கும் அருள் புரிவான் என்பதைப் புரிய வைத்துவிட்டீர்கள்.

*ஆசார்யர்* - நமது ஆழ்வார்களும் ஆசார்யர்களும் பரம க்ருபையுடன் திருமந்த்ரத்தின் அர்த்தத்தைத் தமது ஸ்ரீஸூக்திகளில் உபதேசித்துள்ளார்கள். அவற்றையும் அறிந்து கொண்டு ஜபிக்க வேண்டும். திருமந்த்ரமானது எல்லா மூர்த்திகளுக்கும் பொதுவானது. (சில மந்த்ரங்கள் குறிப்பிட்ட சில பகவன் மூர்த்திகளுக்கே உரியனவாய் இருக்கும்) திருமந்த்ரம் சிறந்த ஜ்ஞானத்தை அளிக்கவல்லது ஏனென்றால் '*ஸர்வம் அஷ்டாஹராந்தஸ்தம்*' என்ற வாக்கின்படி திருமந்த்ரத்தின் எட்டு அக்ஷரங்களில் அனைத்து வேதங்களும், வேதாந்தங்களும், இதிஹாஸங்களும், புராணங்களும் அடங்கியுள்ளன. தீமைகள் யாவற்றையும் விலக்கும். எல்லாப் பயன்களையும் அளிக்க வல்லது, என்று அறிவாயாக.

*சிஷ்யன்* - 'வேகவாந்' என்ற ஒரு சொல்லை விளக்கும் பாங்கில் ஸம்ஸாரத்தைக் கடக்கும் வழியையும் உபதேசித்தமைக்கு அடியேனின் க்ருதஜ்ஞதையை ப்ரணாமங்களுடன் தெரிவித்துக் கொள்கிறேன் ஸ்வாமி. ✵

# தத்வமுக்தாகலாபம்

ஸ்ரீ உ.வே. காணியம்பாக்கம் தேவநாதாசார்யர் ஸ்வாமி, திருப்பதி

விபாகத்தை ஸம்யோக நாசத்தைக் காட்டிலும் வேறாக ஒப்புக்கொண்டால் இந்தக் கேள்வி வராது. அப்போது 'விபாகம்' இல்லையே! எனவே 'இவை விபக்தங்கள்' என்னும் கேள்விக்கு இடம் இல்லை.

இதற்கு விடை - விபாகம் என்னும் தனியாக ஒரு அத்த்ரவ்யத்தை ஒப்புக்கொள்ளும் பக்ஷத்திலும் ஒரு விபாகத்தின் நாசம் வந்த பின்பு வேறு ஒரு ஸம்யோகம் ஏற்பட்ட ஸமயத்தில் 'இவைகள் விபக்தங்கள்' என்னும் அறிவு எப்படி ஏற்படும்? அங்கு வேறு ஒரு ஸம்யோகம் ஏற்பட்டு விட்டதே என்னும் கேள்வி எழுந்தால் அங்கு ஏற்படும் விபாகத்தின் அறிவு முன்பு அழிந்த விபாகத்தினை விட வேறு ஒரு விபாகத்தையே விஷயீகரிக்கிறது என்று விடை கூறவேண்டும்.

அவ்வாறே ஒரு ஸம்யோகத்திற்கு நாசம் வந்தபடியால் ஏற்படும் விபாகத்தின் அறிவு மீண்டும் ஸம்யோகம் ஏற்பட்ட பின்பு வராது. முந்தைய ஸம்யோகத்தின் நாசமான விபாகம் இப்போது இல்லையே. எனவே ஸம்யோக நாசம் தான் விபாகம். அது தனியாக அத்த்ரவ்யம் அல்ல.

**कोऽसौ संयोगनाश तव मत इति चेत्**
**सोऽयमन्यत्र योगः**
**तस्य प्राचाविरोधात् स तु मिषति तथोऽऽलोचितः**
**तस्य नाशः ।**
**अज्ञातप्राच्ययोगः परममभिमनुते स्वेन रूपेण चैनम्**
**सर्वोऽप्येवं ह्यभावः स्फुटमिह न पुनः**
**कन्चिदन्योऽसित दृष्टः ॥ ५७ ॥**

முன் ஶ்லோகத்தில் ஸம்யோக நாசத்தைக் காட்டிலும் வேறான விபாகம் இல்லை என்று கூறப்பட்டது. இந்த ஶ்லோகத்தில்



ஸம்யோக நாசம் என்னும் சொல்லுக்கு விளக்கம் கூறப்படுகிறது.

அன்வயம் - **तव मते** - உன்னுடைய மதத்தில் **असौ संयोगनाशः** - அந்த ஸம்யோக நாசம் **कः** - எது? **इति चेत्** - எனில் **सोऽयं** - அப்படிப்பட்ட இந்த ஸம்யோக நாசம் **अन्यत्र योगः** - வேறு இடத்தில் ஏற்படும் புதிய ஸம்யோகமே. **तस्य** - புதிய ஸம்யோகத்திற்கு **प्राचा** - முந்தைய ஸம்யோகத்துடன் **विरोधात्** - விரோதம் உள்ளபடியால் **तथा आलोचितः** - முந்தைய ஸம்யோகத்துடன் விருத்தமாக அறியப்படும் **सः** - புதிய ஸம்யோகமே **तस्य विनाशः** - முந்தைய ஸம்யோகத்தின் அழிவாக **मिषति** - தோன்றுகிறது. **अज्ञात प्राच्ययोगः**- முந்தைய ஸம்யோகத்தை அறியாதவன் **परं** - மட்டும் **एनं** - இந்தப் புதிய ஸம்யோகத்தை **स्वेन रूपेण** - புதிய ஸம்யோகமாகவே **अभिमनुते** -

நினைக்கிறான். इह - இந்த உலகில் सर्वोऽपि अभावः - அனைத்து அபாவங்களும் एवं - அவற்றின் எதிர்பொருளுக்கு (प्रतियोगि) ஸ்மரணம் உள்ள போது ஒரு வஸ்துவின் அபாவமாகவே இருக்கும். स्फुटम् - இது ஸ்பஷ்டமானது. अत्र - இவ் விஷயத்தில் अन्यः कश्चित् - ஸித்தமான ஒரு பாவ வஸ்துவைக் காட்டிலும் வேறான ஒரு न पुनः दृष्टः अस्ति - அநுபவஸித்தமாக இல்லை.

அபாவம் என்பது ஒருவித பாவமே என்பது ஸித்தாந்தம். அதனை விவரிக்கிறார். விபாகம் என்பது தனியாக ஒரு வஸ்து கிடையாது என்று கூறப்பட்டது. அவ்வாறெனில் அது ஸம்யோகத்தின் அழிவுதான் (संयोग नाशः) என்றும் கூறப்பட்டது.

இப்போது நமது ஸித்தாந்தத்தில் संयोगनाशம் என்பது என்ன என்று ஸ்வாமி கூறுகிறார். முன்பு இணைந்து இருந்த இரண்டு பொருள்களின் இணைப்பு தான் (उत्तरदेश संयोगः) அதாவது முன்பு இரண்டு பொருட்களின் ஸம்யோகம் இருந்தது. அது அழிந்தது எனில் மற்ற இரண்டு பொருட்களின் ஸம்யோகம் இருந்தது. அது அழிந்தது எனில் மற்ற இரண்டு பொருட்களின் ஸம்யோகம் உண்டானது என்று பொருள். அந்த இரண்டாவது ஸம்யோகம் முதல் ஸம்யோகத்திற்கு விருத்தமாக அறியப்பட்டால் அதனையே முந்தய ஸம்யோக நாசம் (पूर्वसंयोग नाशः) என்று கூறுகிறோம்.

எனவே முந்தைய ஸம்யோக நாசம் என்பது அடுத்த ஸம்யோகம் தான். எவன் ஒருவனுக்கு பழைய ஸம்யோகம் தெரியவில்லையோ, அவன் இந்தப் புதிய ஸம்யோகத்தை பூர்வ ஸம்யோக நாசமாக அறிய மாட்டான். அவன் இந்த ஸம்யோகத்தை ஸம்யோகம் என்றே அறிவான். அனைத்து அபாவங்களும் பாவ ரூபங்களே. அபாவம் என்பது ஒரு விதமான பாவ (postive) வஸ்துவே. அபாவத்தின் எதிர்நிலை (प्रतियोगि) ஸ்மரிக்கப்படின் அபாவங்கள் அபாவங்களாகவும் ஸ்மரிக்கப்படாவிடின் பாவங்களாகவும் அறியப்படுகின்றன.

स्यन्दावृत्त्यादिभेदात् परमपरम् इति प्रत्ययौ तत्तदर्थे
कालाधिक्यादिमानात् न खलु समधिकं
शक्नुयातां विधातुम् ।
दृष्टि र्नान्यस्य क्लृप्ति भवति गुरुतराऽतिप्रसङ्गोऽन्यथा
स्यात्
किं न स्यातां गुणाद्यैः परतदितरते,
पूर्व मावादि चान्यत् ॥ ५८ ॥

முன் ப்லோகத்தில் संयोगनाशம் என்பது उत्तर संयोग ரூபம் என்று அருளிச் செய்தார் ஸ்வாமி. இந்த ப்லோகத்தில் परत्वं, अपरत्वं என்னும் குணங்கள் (அத்த்ரவ்யங்கள்) தனியாக இல்லை என்று நிரூபணம் செய்கிறார்.

அன்வயம் - तत्तदर्थे - அந்தந்தப் பொருளில் स्यन्दावृत्त्यादिभेदात् - ஸூர்ய க்ரியைகளின் வரிசையின் வைலக்ஷண்யத்தால் परं अपरं इति - பெரியது, சிறியது என்னும் प्रत्ययौ - அறிவுகள் மற்றும் அதன் வாயிலாக வ்யவஹாரங்கள் कालाधिक्यादि मात्रात् - காலத்தின் ஏற்றம் மற்றும் அதன் குறைவு ஆகிய இவற்றை விட समाधिकं - வேறான ஒன்றை विधातुं - புதிதாகக் கல்பிப்பதற்கு न शक्नुयाताम् - முடியாது. अन्यस्य - வேறு ஒன்றுக்கு न दृष्टिः - அறிவு இல்லை. गुरुतरा क्लृप्तिः भवति - மேலும் கடினமான கல்பனை ஏற்படும். अन्यथा - இவ்வாறு இல்லையெனில் अति प्रसङ्गः स्यात् - மற்ற விஷயங்களிலும் பரத்வாதிகளின் ப்ரஸங்கிக்கும்.

**पर-तदितरते** - பரத்வம் மற்றும் அபரத்வம் **गुणाद्यैः** - குணம் முதலானவற்றாலும் **किं न स्याताम्** - ஏன் இருக்கக்கூடாது? இவ்வாறு **अन्यत्** - வேறு விதமாக **पूर्वभावादि च** - பூர்வஸத்யம் முதலானவை இருக்கட்டுமே.

கருத்து - வைஶேஷிகர்கள் பரத்வம், மற்றும் அபரத்வம் என்று இரண்டு தனிக் குணங்களைக் கூறுகின்றனர். வயதில் பெரியவனிடம் காலத்தினால் பரத்வம். வயதில் குறைந்தவனுக்கு காலத்தினால் அவனைக் குறித்து அபரத்வம். இவ்வாறு தூரத்தில் இருக்கும் வஸ்துவிற்கு தேஶத்தினால் பரத்வம். ஸமீபத்தில் இருக்கும் வஸ்துக்கும் அந்த வஸ்துவினைக் காட்டிலும் அபரத்வம் என்பது அவர்களுடைய கொள்கை. இந்த ஶ்லோகத்தில் ஸ்வாமி காலத்தினால் ஏற்படும் **परत्वं** மற்றும் **अपरत्वं** என்னும் குணங்கள் தனியாக வேண்டாம் என்று விவரிக்கிறார். ஸூர்யனின் க்ரியைகள் எவனிடத்தில் அதிகமாக ஸம்பந்தப்பட்டுள்ளனவோ அவன் **पर**ன். எவனிடத்தில் ஸூர்யனின் பரிஸ்பந்தங்கள் எனப்படும் க்ரியைகள் எவனிடத்தில் முன்பு கூறியவனைக் காட்டிலும் குறைவாக இருக்கின்றனவோ அவன் முந்தைய வ்யக்தியைக் காட்டிலும் **अपर**ன். இங்கு பரன், அபரன் என்னும் அறிவுகள், மற்றும் வ்யவஹாரங்கள் காலத்தின் ஏற்றம் மற்றும் குறைவு என்னும் காரணங்களால் தான் ஏற்படுகின்றன. நமது ஸித்தாந்தத்தில் காலத்திற்குப் பலவிதமான பரிணாமங்கள் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளன.

எனவே பெரியவன் அதிகமான காலத்தின் ஸம்பந்தத்தைக் கொண்டவன். சிறியவன் அவனைக் காட்டிலும் குறைவான காலத்தின் ஸம்பந்தத்தைக் கொண்டவன் என்று கூறினால் போதும். இவ்வாறு தனியாக குணங்களைக் கல்பிக்க வேண்டாம். கால ஸம்பந்தத்தைக் காட்டிலும் வேறான பரத்வ - அபரத்வங்கள் அறியப்படவில்லை. எனவே கால ஸம்பந்தம் தான் பரத்வம் மற்றும் அபரத்வம். வைசேஷிகர்கள் கூறும் அநுமானங்கள் புத்திக்கு பளுவை சேர்ப்பவை. இப்படி தனியாக பரத்வாதிகளை ஒப்புக்கொண்டால் ஜ்ஞானம், சக்தி முதலானவற்றால் ஏற்படும் **परः, अपरः** என்னும் வ்யஹாரங்களும் தனியாக **परत्वादि** தன்மைகளைக் கல்பிக்கலாமே. முன்பு இருத்தல், முன்பு அறியப்படுதல் முதலான தன்மைகளைக் கொண்டும் இவ்வாறான புதிய குணங்களைக் கல்பிக்கலாமே. முன்பு இருந்தபடியால் தசரதர் **पर**ர். இப்போது இருக்கிறபடியால் இப்போதுள்ள அரசர் **अपर**ர் என்று கூறலாமே. எனவே **परत्वं, अपरत्वं** என்று தனியாக குணங்கள் கிடையாது. கால ஸம்பந்தங்களின் ஏற்றக்குறைவே அவை. இவ்வாறே தேஶத்தினால் கூறப்படும் **परत्वं** மற்றும் **अपरत्वं** என்னும் குணங்களும் தனியாக வேண்டாம். ❋




கர்க்க கோத்ரத்தில் பாலாகி என்று ஒருவர் இருந்தார். அங்கங்களுடன் கூட முழுமையாக வேதத்தை அறிந்து புகழ் பெற்றவர். பல ஊர்களுக்குச் சென்று அங்கங்கே தங்கிக் கொண்டிருப்பார்.

ஒரு சமயம் காசிக்குச் சென்றார். காசி அரசன் அஜாதசத்ரு என்பவரைப் போய்ப் பார்த்தார். 'உனக்கு நான் பரப்ரஹ்மத்தைப் பற்றிச் சொல்கிறேன்' என்றார்.

அஜாதசத்ரு சொன்னார், 'இந்த வார்த்தை சொன்னதுக்கு ஆயிரம் பசுக்களை உமக்குக்

# ஜகத்வாசித்வாதிகரணம்

*(1-3-5)*




கொடுக்கிறேன். எல்லாரும் ஜனகர் ஜனகர் என்று அவரிடமே ஓடிக் கொண்டிருக்கிறுர்கள்' என்றார். ஜனகர் தாம் பெரிய ஜ்ஞானி என்றும் வள்ளல் என்றும் நினைத்து எல்லாரும் ஜனகரிடமே போய்க் கொண்டிருந்தனர். அஜாதசத்ரு அரசரிடம் அதிகம் பேர் வரவில்லை. அதனால், ப்ரஹ்மஜ்ஞானியாக தம்மிடம் வந்த அவரைக் கொண்டாடினார்.

பாலாகி நேரிடையாகவே விஷயத்துக் வந்தார். ப்ரஹ்மம் பற்றி சொல்ல ஆரம்பித்தார். 'ஸூர்யமண்டலத்தில் இருக்கும் புருஷனையே நான் உபாஸநம் செய்கிறேன்' என்றார்.

அஜாதசத்ரு சொன்னார். 'அந்த ஸூர்யமண்டல புருஷன் பற்றி எனக்கு நன்கு தெரியும். இந்த விஷயத்தில் நீர் சொல்வதை நான் ஏற்று சொல்ல வேண்டியது இல்லை' என்றார்.

அடுத்து பாலாகி, சந்த்ரனில் இருக்கும் புருஷனை நான் உபாஸநம் செய்கிறேன்' என்றார். அதற்கும் அஜாதசத்ரு சொன்னார். 'சந்த்ரனில் உள்ள புருஷன் பற்றி எனக்குத் தெரியும். இந்த விஷயத்தில் நீர் சொல்வதை ஏற்று நான் சொல்ல வேண்டியது இல்லை' என்றார்.

ஸூர்யமண்டல புருஷன், சந்த்ரபுருஷன் போல அடுத்தடுத்து பாலாகி ஆனவர் பல விஷயங்களை ஒன்றன் பின் ஒன்றாகச் சொல்லி வந்தார். மின்னல், மேகம், ஆகாசம், வாயு, அக்னி, ஜலம், கண்ணாடி, எதிரொலி முதலியவற்றில் இருக்கும் புருஷனை உபாஸநம் செய்வதாகச் சொன்னார்.

ஸ்ரீ உ.வே. நாவல்பாக்கம் வாஸுதேவாசார்யர் ஸ்வாமி, திருவநந்தபுரம்

எல்லாவற்றையும் கேட்ட அஜாதசத்ரு ஒரே பதிலையே திரும்பத் திரும்பச் சொன்னார். 'இவரைப்பற்றி எனக்குத் தெரியும்'. இந்த விஷயத்தில் நீர் சொல்வதை ஏற்று நான் சொல்ல வேண்டியது எதுவும் இல்லை' என்று.

கடைசியில் இவற்றைச் சொல்லிக் கொண்டு வந்த பாலாகி ஓய்ந்துவிட்டார்.

அஜாதசத்ரு கேட்டார். 'பாலாகியே, இவ்வளவுதானா? இன்னும் உளதா'?

'இவ்வளவுதான்' என்றார் பாலாகி.

அப்போது அஜாதசத்ரு சொன்னார். 'ப்ரஹ்மம் பற்றிச் சொல்கிறேன் என்று ஆரம்பித்து, பொய்யாக எதையோ சொல்லி, என் சம்மதியையும் எதிர்பார்க்கிறீர்' என்று. பாலாகி சொன்ன ஸூர்யன், சந்த்ரன் முதலிய யாரும் ப்ரஹ்மம் இல்லை என்பதை இதன் மூலம் உணர்த்தினார்.

பிறகு சொன்னார். 'பாலாகியே, நீர் சொன்ன இந்த புருஷர்களை எல்லாம் படைத்தவர் யாரோ, படைக்கப்படும் இந்த உலகம் முழுவதும் யாருடைய படைப்போ, அவர்தான் உபாஸநம் செய்யப்பட வேண்டியவர்' என்று.

இதனையே ஆழ்வார் 'நாடி நீர் வணங்கும் தெய்வமும் உம்மையும் முன் படைத்தான்' என்று அருளினார்.

உடன் பாலாகி ஆனவர், தம் கர்வத்தை விட்டு, தம்மை சிஷ்யனாக பாவித்து, அஜாதசத்ருவை ஆசார்யனாக வரித்தார். ஆனால், அரசரான அஜாதசத்ரு மஹர்ஷியான பாலாகியை சாஸ்த்ரப்படி மதித்தார். அவரை, முழு சிஷ்யனாக ஏற்க ஒப்பவில்லை. ப்ரஹ்மவித்யைக்கான உபநயனத்தைச் செய்யவில்லை. விஷயத்தை மட்டும் சொல்லித் தருகிறேன்' என்றார்.

அவரைக் கையில் பிடித்துக்கொண்டு, அரண்மனைக்குள் போனார். அங்கே ஒருவன் படுத்துக் கொண்டிருந்தான். அவனிடம் போய் 'உயர்ந்தவனே, வெண்மை உடையனே' என்றெல்லாம் எழுப்பினார். ஆனால் அவன் எழுந்திருக்கவில்லை.

இதெல்லாம் ப்ராண வாயுவின் பெயர்கள். ப்ராணவாயுவானது எல்லா இந்த்ரியங்களை விட உயர்ந்தது என்றும் அதற்கு வெளுத்ததான ஜலம் உடையாகும் என்றும் வேதம் சொல்கிறது. பொதுவாக காற்றுக்கு ஆங்காங்கே கலந்திருக்கும் நீர்த்துளிகள் உடை போன்றவை. ப்ராணவாயுவுக்குக் கூட ஜலம் உடையாக இருப்பதால் தான் நாம் உணவு உண்பதற்கு முன்பும் பின்பும் ஆசமனம் செய்ய வேண்டும் என்றும் ஒரு விளக்கம் உபநிஷத்தில் உள்ளது.

ப்ராணவாயுவை எழுப்பினாலும், மனிதன் எழவில்லை; பின்னர் அவனைக் குச்சியால் தட்டி எழுப்ப; அவன் எழுந்தான். இதனால், உறங்கும் ஜீவன் என்பவன் ப்ராண வாயுவை விட வேறானவன் என்று உணர்த்தினார்.

உறங்கும் போது எல்லா இந்த்ரியங்களும் ஓய்ந்தாலும், ப்ராண வாயு ஓயாமல் இயங்கிக் கொண்டிருப்பதால், ப்ராணன்தான் ஜீவன் என பலர் நினைப்பர். அது தவறு என்பது கருத்து.

பிறகு அஜாதசத்ரு பாலாகியிடம் மூன்று கேள்விகள் கேட்டார்.

1. ஸ்வப்னம் காணும்போது, ஜீவன் எங்கே இருக்கிறான்?
2. ஸ்வப்னம் இல்லாமல் நன்கு உறங்கும் போது எங்கே இருந்தான்?
3. பின் எங்கிருந்து வெளிவருகிறான்?

பாலாகிக்கு பதில் தெரியவில்லை. அதனால் அஜாதசத்ருவே சொன்னார்.

1. ஸ்வப்னம் காணும்போது ஜீவன் ஹிதா என்னும் நாடிகளில் இருக்கிறான். இது ஹ்ருதயத்திலிருந்து புரீதத் எனும் மாம்ஸ-துண்டுக்குச் செல்லும் நாடியாகும்.


2. உறங்கும்போது பரமாத்மாவினிடம் தான் இருக்கிறான்.

*3. உறக்கத்தின் பின் எழும்போது, பரமாத்மாவிடமிருந்து ஜீவன் எழுந்து வருகிறான். ஜீவனிடமிருந்து எல்லா இந்த்ரியங்களும் எழுந்து வருகின்றன. இந்த்ரியங்களிடமிருந்து ஜ்ஞானங்கள் வருகின்றன.*

*நம்மையெல்லாம் படைப்பவனான ப்ரஹ்மம்தான் நாம் உறங்கும்போதும் நம்மைத் தன்னிடம் வைத்துக் காப்பாற்றுகிறான் என்று கருத்து. இந்த விஷயம் பற்றி விரிவான விசாரம் ஸ்ரீபாஷ்யத்தில் உள்ளது.* ❋

*கார்க்யோ ஹ வை -கௌஷீதகி உபநிஷத் 4*


*ஸ்ரீபாஷ்யம் ஜகத்வாசித்வாதிகரணம் 1-3-5.*



# வரப்பெற்றோம்

## *ஸ்ரீராமாநுஜருக்கும் யஜ்ஞமூர்த்திக்கும் நடந்த 18 நாள் வாதப்போர்*

*ஸ்ரீபாஷ்ய ஸிம்ஹாஸனம் ஸ்ரீ உ.வே. கருணாகரார்ய மஹாதேசிகனின் சிஷ்யரான திருக்குடந்தை Dr. ஸ்ரீ உ.வே. வெங்கடேஷ் அவர்கள் மிகுந்த கவனத்துடன் பரிஶ்ரமப்பட்டு இரண்டு எம்பெருமானார்கள் என்ற புஸ்தகத்தைப் பதிப்பித்து அதில் பகவத் இராமாநுஜருக்கும் அத்வைத ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த ஸ்ரீயஜ்ஞமூர்த்தி என்பவருக்கும் நடந்த பதினெட்டு நாள் வாதப்போர் பற்றிய விபரங்களையும், அதில் கடைசியில் ஸ்ரீஇராமாநுஜர் வென்றதைப் பற்றியும் தொகுத்து அளித்திருந்தார். இப்புஸ்தகத்தையே தற்போது ஆங்கிலம் மட்டுமே அறிந்தவர்களும் படித்துப் பயன்பெற வேண்டும் என்கிற நோக்கத்துடன் வெளியிட்டு இருக்கிறார். புஸ்தகத்தைப் படிப்பவர்களுக்கு நிச்சயமான, சரியான ஜ்ஞாநம் ஏற்படும் என்பதில் ஐயமேதுமில்லை. புஸ்தகத்தின் விலை Rs.150/- (ஆங்கிலம்) கிடைக்குமிடம் -*




Dr. N. Venkatesh, MBBS, CCEBDM, MBA

42, Raghavendra Nagar, Chekkankanni,

Kumbakonam 612001.

Ph: 9488207667. E.mail: uppilimathur6@gmail.com

*திருப்புல்லாணி ஸ்ரீநிவாஸன்*

# திருவாய்மொழி அமுதம்

ஸ்ரீ உ.வே. வ.ந. கோபாலதேசிகாசார்யர் ஸ்வாமி, ஒப்பிலியப்பன் ஸந்நிதி



(4.9.10)

கண்டு கேட்டு உற்று மோந்து உண்டு
உழலும் ஐங்கருவி
கண்ட இன்பம் தெரிவரிய
அளவில்லாச் சிற்றின்பம்
ஒண் தொடியாள் திருமகளும்
நீயுமே நிலா நிற்பக்
கண்ட சதிர் கண்டு ஒழிந்தேன்
அடைந்தேன் உன் திருவடியே.

ஒண்தொடியாள் - அழகிய கைவளைகளை உடைய

திருமகளும் - மகாலக்ஷ்மியும்

நீயுமே -

நிலாநிற்பக் கண்ட சதிர் - அழகாகக் காட்சி தருவதை

கண்டு - மானசீகமாகக் காணப்பெற்றேன் அதனால்

கண்டு - கண்களால் உலக விஷயங்களைப் பார்த்து

கேட்டு - காதால் உலக விஷயங்களைக் கேட்டு

உற்று - உடலால் (கைகளால்) உலக சுகங்களைத் தொட்டு அனுபவித்து

மோந்து - மூக்கினால் உலக விஷயங்களை முகர்ந்து

உண்டு - நாக்கினால் தின்பண்டங்களைச் சுவைத்து

ஐங்கருவி கண்ட இன்பம் - இப்படி ஐந்து இந்த்ரியங்களாலும் அனுபவிக்கும் இளப்பமான உலக இன்பங்களில்

உழலும் - கிடந்து சுழன்று கொண்டிருப்பதையும்

தெரிவரிய - நம்மால் தெரிந்து கொள்ள முடியாத

அளவில்லா - நீண்ட காலம் இருக்கும்

சிற்றின்பம் - ஆனால் நிலையில்லாத கைங்கர்யம் ஆகிற சுகத்தையும்

ஒழிந்தேன் - விட்டு ஒழித்தேன்

உன் திருவடியே - உன் திருவடிகளை

அடைந்தேன் -

அப்பனே, வைகுண்டத்தில் உன்னை மானசீகமாகக் கண்டு, உன் பாதங்களை அடைந்தேன் என்று மகிழ்ச்சியுடன் கூறுகிறார் ஆழ்வார் -

பெண்மணிகளுக்குக் கை வளையல் மங்களத்தைக் குறிக்கும். மங்கள சொரூபி அல்லவா மகாலட்சுமி. அந்த மகாலட்சுமியும், மங்களத்தைக் குறிக்கும் வளையல்களை எப்போதும் கைகளில் அணிந்திருக்கிறாள். மங்களத்துக்குள் ஒரு மங்களம்!!

அந்த லட்சுமியும் நீயுமாக, வைகுண்டத்தில் அன்புடன் காட்சி அளிக்கிறீர்கள். அங்கே பல்லாயிரம் கோடிக் கணக்கில் நித்யசூரிகளும், மோக்ஷத்தை அடைந்த வர்களும் உங்களை வணங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனாலும், நீங்கள் இருவர் மட்டுமே என் கண்ணுக்குத் தெரிகிறீர்கள்.

ஏனென்றால், எல்லா அண்டங்களும் உலகங்களும் நித்யசூரிகள் உட்பட யாவரும் உங்களுக்குள் அடக்கம் அன்றோ? இதைத் தானே தேவர்கள், மனிதர்கள் முதலிய ஆண்கள் திருமால் ஆகும். பெண்கள் லட்சுமி ஆகும். திருமால், லட்சுமி இருவரையும் தவிர, வேறு ஒருவருமே கிடையாது என்று விஷ்ணு புராணம் சொல்கிறது. (விஷ்ணுபுராணம் 1.8.35).

இப்படி வைகுண்டத்தில் என் தாயும் தந்தையுமான உங்களை மானசீகமாகக் கண்டேன். அதனால் என்ன நடந்தது?

ஒரு மனிதனின் கண் உலகத்தில் உள்ள நல்லதையும் கெட்டதையும் பார்க்கிறது. காது நல்லதையும் கெட்டதையும் தொட்டு அனுபவிக்கிறது. மூக்கு நல்லதையும் கெட்டதையும் முகர்கிறது. நாக்கு நல்லதையும் கெட்டதையும் சுவைக்கிறது.

இப்படி மனிதனுடைய ஐந்து இந்த்ரியங்களும் உலக விஷயங்களிலேயே சுற்றிச் சுழன்று, உழன்று கொண்டிருக்கின்றன. ஒரு புழு மலத்திலேயே உழன்று கொண்டிருப்பது போல், இவை இளப்பமான உலக விஷயங்களில் உழன்று கொண்டிருக்கின்றன.

அதனால் தான், இப்படிப்பட்ட உலக சுகங்களைச் சிற்றின்பம் என்று அறிவாளிகள் கூறுகின்றனர். ஆனால், மரணம் அடைந்து, இந்த உடலை விட்டபின், புண்ணியம் செய்த மனிதன் மற்றும் ஓர் இன்பத்தை அனுபவிக்கிறான். தன்னுடைய ஆத்மாவைத் தானே அனுபவிக்கும் இந்த இன்பம் ‘கைவல்யம்’ என்று சொல்லப்படுகிறது.

இந்த உலகத்தில் இருக்கும் வரை, கைவல்யத்தை ஒரு மனிதன் கண்ணால் தெரிந்து கொள்ள முடியாது. சாஸ்த்ரங்கள் மூலமாகவே கைவல்யத்தைப் பற்றித் தெரிந்து கொள்கிறான். இந்த நிலை நீண்ட நெடுங்காலம் இருக்கும். இதனால் கிடைக்கும் இன்பமும் அளவில்லாதது என்று சாஸ்த்ரம் கூறுகிறது.


கைவல்யம் இப்படித் தெரிந்து கொள்வதற்கு அரிதாக, அளவில்லாததாக இருந்த போதிலும், இதுவும் ஒரு சிற்றின்பம் தான். உலகத்தில் நாம் அனுபவிக்கும் இன்பங்கள் அளவுடைய சிற்றின்பம். ஆனால், கைவல்யம் அளவில்லாத சிற்றின்பம். மோக்ஷம் மட்டும் தான் பேரின்பம்.


பெருமானே! இப்படி உலக சுகங்களான சிற்றின்பத்திலும், கைவல்யமான சிற்றின்பத்திலும், ஆசையையும், பற்றையும் முற்றிலுமாக விட்டு ஒழித்தேன்.

இப்படி வைகுண்டத்தில் உங்களை மானசீகமாகக் கண்டேன். அதனால் உலக சுகங்களை விட்டு ஒழித்தேன். உன் பாதங்களை அடைந்து, அடிமை செய்யும் பாக்கியத்தைப் பெற்றேன் என்று மகிழ்ச்சியுடன் கூறுகிறார் ஆழ்வார். ❋




முக்கூரில் ஒருநாள் நடுப்பகல் வேளை. பாத்திரம் விற்கும் வ்யாபாரி
ஒருவன் பாத்திரங்களை விற்கிறான். ஸ்ரீமதழகியசிங்கர் அவனை கவனித்தாகிறது.
உஸ்- அப்பா என்ன வெயில். காலலேந்து ஒரு பாத்ரம் கூட விக்கலயே அடக்கடவுளே.
கலியுக கர்ணன்
எப்பா களைச்சிருக்கயே. ஏதாவது சாப்டாயா.
எங்கசாமி, ஒன்னுகூட விக்கல. பசில மயக்கமேவருது.
உள்ளே திரும்பி ....
டேய் யாராது. இவனுக்கு சாப்ட ஏதாவது கொடுடா.


சாப்பிட்டவுடன் ...
டேய் எங்கபோற? அந்தக் கூடைய வை. எவ்வளோ ரூபா சரக்கு கூடையில இருக்கு? வித்தா என்ன கடக்கும்.
ரொம்ப சந்தோசம் சாமி. நா வரேன். மேல வாவாரம் பாக்கணுமே.
உன்னே திருப்பி.
இவன்ட 400 ரூபா கொடுடா...
சாமி 250 ரூபா சரக்கு சாமி. வித்தா மேல அம்பது ரூபா கடக்கும்.
போறுமா? இன்னம் கொஞ்சம் தரச்சொல்லட்டா...
வியாபாரி நீர்மல்க, ஆச்சர்யத்துடன் வாங்கிக்கொண்டு சேவித்துச் செல்கிறான்.


அனைவரும் அழகியசிங்கர் அதுமினிய பாத்ரங்களை வாங்கி என்ன செய்யப்போகிறார் என்று எதிர்பார்க்கின்றனர்.
டேய் யாராருக்கு என்னவேணுமோ பாத்து எடுத்துக் கோங்க. திருப்தியா.
யானைகாரன், குதிரைகாரன், வண்டிக்காரன் எல்லாரையும் கூப்பிட்டு ......
அனைவரும் ஆசார்யரின் இந்த ஆச்சர்ய குணத்தைக்கண்டு வியந்து போற்றுகின்றனர்.
கருத்து - அடியார்க்கடியவன்
படங்கள் - சாரி
ஸ்ரீ நருஸிம்ஹப்ரியா ❖ தாரண ❖ ஆவணி ❖ 2004
82

# வாசகர்களின் கவனத்திற்கு

உலகெங்கிலும் பரவலாக இருக்கும் கொரானா வைரஸ் என்கிற தொற்றுநோய் நம் பாரத தேசத்தையும் விடவில்லை. இதன் எதிரொலியாகத்தான் இந்த 2020ம் வருஷம் மார்ச் மாதம் மூன்ருவது வாரம் முதல் நிலைமையை சரிக்கொணர பல்வேறு வகையானக் கட்டுப்பாடுகள் மாநில, மத்திய அரசுகளால் கொண்டுவரப் பட்டன. இந்தக் கட்டுப்பாடுகள் அனைத்தும் மார்ச் 24ம் தேதி முதல் முதன் முறையாக தேசம் முழுவதும் முழு ஊரடங்கு போன்றவைகள் அமலுக்கு வந்தன. பின்னர், நாட்கள் செல்லச் செல்ல அவ்வப்பொழுது சிற்சில தளர்வுகளும் அறிவிக்கப்பட்டன. தமிழ்நாட்டினைப் பொறுத்தவரை அரசாங்க ஆணையின்படி இன்றும் பஸ்கள், ரெயில்கள் முதலியவை ஓடவில்லை. இதனால், பொது ஜனங்களின் போக்குவரத்து மிகவும் பாதிக்கப் பட்டுள்ளது.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஒரு ஸம்ப்ரதாய மாதாந்திரப் பத்திரிக்கை. இது மாதம் தோறும் ஆங்கிலத்திலும், தமிழிலும் வெளிவருகிறது. முழு ஊரடங்கு காலத்தில் அச்சுக்கூடம், அஞ்சல் அலுவலகங்கள், பைண்டர்ஸ் போன்ற அலுவலகங்கள் சரியாக இயங்க முடியவில்லை. ஆகையால், இந்தத் தமிழ் வருஷத்தில் (ஶார்வரி) முதல் இரண்டு மாதங்கள், அதாவது சித்திரை மற்றும் வைகாசி ஆகிய இரண்டு ஸஞ்சிகைகளையும் ஒன்றாகச் சேர்த்து தேவையான, முக்கியமான விஷயங்களை மட்டும் குறைந்த அளவில் மின் பதிப்பு வெளியீடாகக் கொணர்ந்தோம்.

ஓரளவு நிலைமை சீரடைந்தபின்பு ஆனி மற்றும் ஆடி ஸஞ்சிகைகளை வழக்கம் போல் நூறு பக்கங்களுடன் புஸ்தகமாகவே வெளியிட்டு ஸந்தாதாரர்கள் அனைவருக்கும் அஞ்சல் அலுவலகம் மூலமாக அனுப்பி விட்டோம்.

தற்போது அநேக சந்தாதாரர்கள் இன்னும் தங்களுக்குப் புஸ்தகம் வரவில்லையென்றும் மறுபடியும் அனுப்பும்படியும் கோரி வருகிறார்கள். நாங்கள் உத்தேச்யமாக இருநூறு புஸ்தகங்கள் வரைதான் அதிகப் படியாக அச்சிடுகிறோம். அதற்குமேல் அச்சிடுவதில்லை. எனவே நகல்கள் கைவசம் இருக்கும்வரை இப்படி இரண்டாவது தடவையாக புஸ்தகம் கேட்பவர்களுக்கு அனுப்புகின்றோம். ஆனால், இரண்டாவது தடவையாக புஸ்தகம் கேட்பவர்களின் எண்ணிக்கை அதிகமாகிக்கொண்டே இருக்கிறது. அஞ்சல் அலுவலகத்தில் விசாரித்தால், ''அவர்கள் நாங்கள் ஊரினுடைய ப்ரதான இடங்களுக்கு அனுப்பிவிடுகிறோம், அதற்குப்பின் அவர்கள் தான் பல்வேறு இடங்களுக்கு புஸ்தகங்களை விநியோகிக்கின்றனர்'' என்று கூறுகின்றனர்.

ஒரு ஸஞ்சிகையைக் கொண்டுவருவதில் பல்வேறு ச்ரமங்கள் இருக்கிறது என்பதனை வாசகர்கள் அனைவரும் அறிவார்கள். காகிதச்

செலவு, அச்சிடும் செலவு இவைகள் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றன. தனியாக புஸ்தகத்தை அனுப்புவதற்கான அஞ்சல் செலவுகளும் அதிகம். (ரூ.10/- ஒரு ப்ரதியை அனுப்புவதற்கு). போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதால் எங்கள் அலுவலக ஊழியர்கள் வந்து போவதிலும் பல ச்ரமங்கள் உள்ளன. இதனால் சில ஸமயங்களில் வெளி இடங்களில் கொடுத்து புஸ்தகத்தை அடிக்கவேண்டிய நிர்பந்தங்களுக்கு ஆளாகின்றோம். இதனால், செலவு மேலும் அதிகமாகிறது.

இவைபோன்ற பல்வேறு காரணங்களால், சந்தாதாரர்களுக்கு இனிவரும் காலங்களில்



மின் பதிப்பாக (E. Edition) ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாவைக் கொண்டு வரலாம் என்கிற உத்தேச்யம் உள்ளது. வாசகர்கள் இம்மாற்றத்தால் வரும் நன்மைகளைத் தெரிந்து கொள்வது நலம்.

1. ஸஞ்சிகைகளை காலதாமதமின்றி குறித்த காலத்தில் வெளிக்கொணரமுடியும்.

2. புஸ்தகம் வரவில்லை என்ற குறை அறவே நீங்கும்.

3. அஞ்சல் அலுவலக ஸம்பந்தப்பட்ட ப்ரச்னைகள் அனைத்தும் நீங்கும்.

4. சுருக்கமாக, ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா மெய்நிகர் அலுவலகமாக (VIRTUAL OFFICE) செயல்பட ஆரம்பித்தால்

a) ஊழியர்களின் போக்குவரத்து போன்ற ச்ரமங்கள் நீங்கும்.

b) செலவுகள் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும்.

5. மின்பதிப்பு என்பதால் மொத்தப் பக்கங்களின் அளவுக் கட்டுப்பாடு நிர்வாஹத்தினருக்கு ஏதும் இல்லை.

6. வாசகர்களும் வயதானவர்களும் கூட தங்கள் ஸௌகர்யப்படி இஷ்டமான நேரத்தில் எந்தவிதமான ஶ்ரமும் இல்லாமல் புஸ்தகத்தைப் படித்துப் பார்க்கலாம்.

வாசகர்கள் மேலே சொன்ன விஷயத்தை ஆராய்ந்து பார்த்து இந்த யோசனைக்கு ஸம்மதம் உண்டு (அ) இல்லை என்று அறிவித்து அத்துடன் தங்களின் மேலான அபிப்ராயங்களையும் தெரிவித்தால் நாங்கள் ஒரு உசிதமான முடிவை சீக்ரத்தில் எடுக்க முடியும். வாசகர்கள் தயை கூர்ந்து தங்களின் முடிவு / அபிப்ராயத்தை மின் அஞ்சல் மூலமாகத் தங்களின் பெயர், விலாசம், சந்தா எண், மின்னஞ்சல் முகவரி இவற்றைக் குறிப்பிட்டு இதைக் கண்காணிப்பதற்காகவே ப்ரத்யேகமாக ஏற்படுத்தப்பட்ட கீழே காணும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**injimedu42snp@gmail.com**

எங்கள் முடிவுகளையும் அதற்கான செயல்முறை மற்றும் நடைமுறைகளையும் நாங்கள் உரியவர்களுடன் நன்கு ஆலோசித்து பின்னர் பத்திரிக்கை மூலமாகவே வாசகர்களுக்குத் தெரிவிக்கிறோம்.

**SNP TRUST**

# சீதை உகந்த பரிசு

மிதிலையில் சீதா ராமர் திருமணம் இனிதே நடைபெற்று, சீதை ராமனுடன் அயோத்திக்கு வந்தாள். அப்பொழுது ராமனும் சீதையும் தங்குவதற்கு கனக பவனம், வைரம் வைடூர்யம், ரத்னம் பதித்த அணிகலன்கள் என பல பொருட்களை கௌசல்யை, சுமித்திரை மற்றும் கைகேயி சீதைக்கு அன்புடன் வழங்கினர்.

இதையெல்லாம் பார்த்த தசரதன், யாரும் அளிக்காத பரிசினை தான் அளிக்க வேண்டும் என்று யோசித்தான். 'ராமன் என்று அழைக்கப்படும் என் மகன், கலி யுகத்தில் சீதாராமன் அதாவது ஸியாராம் என்று அழைக்கப்படுவான்' என்று சீதையின் பெருமையை நாடே புகழும் படி தசரதன் சீதைக்கு வரமளித்தான். இதனால் தான் இன்று கலி யுகத்தில் ''ஜய் சீதாராம், ஜய் ஸியாராம்'' என்று மக்கள் கொண்டாடுகின்றார். கைகேயிக்கு தசரதர் கொடுத்த வரங்கள் ராவணன் மாண்டு போவதற்கு வழிவகுத்தன. ஆனால் தசரதர் சீதைக்கு அளித்த வரமோ, கலியுகத்தில் வாழ்வோரை உஜ்ஜீவிக்கிறது. ஆம் 'ஜய் சீதாராம்' என்று நாமசங்கீர்தனம் செய்வது கலியுகத்தில் உள்ளோருக்கு ஸம்ஸார கடலில் மாண்டு போகாமல் காக்கிறது.

அதுமட்டுமின்றி, தசரதன் தேவலோகம் சென்று வரும் சமயமெல்லாம், இந்திரன் அளிக்கும் தேவலோக வாசனை திரவ்யங்களை கொண்டு வந்து தன் மருமகள் சீதைக்கு பரிசாக அளிப்பாராம்.

வனவாசத்தில், சித்திரகூடத்தில் இருந்த அத்ரி அநஸூயா ஆச்ரமத்திற்கு சீதையும் ராமனும் சென்ற பொழுது, அனுசூயா தேவர்களுக்கும் கிடைக்க அரிதான ஆபரணங்களையும், துணிகளையும், வாசனை த்ரவ்யங்களையும், மாலைகளையும் சீதைக்குப் பரிசாக அளித்தாள்.

சீதையின் ஆபரணங்களே சுக்ரீவ - ராம நட்புக்கு உறுதுணையாகவும் இருந்தது.

இவையெல்லாவற்றிற்கும் மேலாக ஹனுமன் அளித்ததே சீதை உகந்த பரிசாகும். அது என்ன?


ஹனுமன் சீதையிடம், 'சுக்ரீவ மகாராஜா அனுப்பின ராம தூதன் நான். சீதையான உன்னை பிரிந்த காரணத்தினால் என் பிரபு ராமன் தூங்குவது இல்லை , ''ஹா ஸீதே! ஹா ஸீதே!'' என்று உன் நியாபகமாகவே இருக்கிறான். அப்படியே கண் அலர்ந்தாலும் உன் திருநாமத்தை சொல்லிக் கொண்டே எழுந்துக்கொள்கிறான். உன் துயரம் நீக்கும் ராமனின் மோதிரத்தை பார்.' என்று அளித்தான்.

ராமனின் திருநாமம் பொறிக்கப்பட்ட அந்த மோதிரமானது துன்பக்கடலில் தத்தளித்த பிராட்டிக்கு விசுவாசத்தை உண்டு பண்ணியது. 'ரா' 'ம' என்ற இரண்டு எழுத்து தாரக மந்திரம் கொண்ட மோதிரம், பிராட்டி மேலும் இரண்டு மாதம் உயிருடன் இருக்க உதவியாக இருந்தது. தன் தந்தையான ஜனகன் ராமனுக்கு அளித்த மோதிரத்தை பார்த்தவுடன் மிதிலையில் நடந்த தன் திருமண நாட்களின் நினைவலைகளில் மைதிலி மூழ்கினாள்.

அயோத்தியில் ப்ரணய கலகத்தின் பொழுது, ராமனையும் சீதையையும் சேர்த்து

ஸ்ரீரஞ்ஜனி ஜகந்நாதன்

வைத்த மோதிரம், இப்பொழுது ராமனிடம் தன்னை சேர்த்து வைக்க கடல் கடந்து வந்ததை எண்ணிய சீதை ராமனுடன் சேர்ந்தது போன்றே ஆனந்தம் அடைந்தாள்.




கண்ணில் கண்ணீர் மல்க ராமனின் மோதிரத்தை கண்டதும் ராமனையே கண்டது போல் சீதை நினைத்தாள். மோதிரத்தை கண்களில் ஒத்திக்கொண்டாள். கடல் கடந்து பயணித்த மோதிரத்திற்கு பயணக் களைப்பு விலகும் வண்ணம், சீதை தன் கண்ணீரினால் திருவாராதனம் செய்தாள். பின்னர் ராமனின் மோதிரத்தை தன் திருமார்பில் வைத்துக்கொண்டு, ராமனையே ஆலிங்கனம் செய்து கொண்ட பாவத்தை பிராட்டி அடைந்தாள். ராமனின் கர ஸ்பர்ஷம் ஏற்பட்டால் என்ன ஒரு ஆனந்தம் இருக்குமோ அந்த ஆனந்தம் அடைந்தாள் சீதை.

இவ்வண்ணம் ஹநுமனிடமிருந்து, பொன்னாலான, அழகிய நிறமுடைய, ராம என்னும் நல்ல எழுத்துக்களுடைய, அழகியவனான ராமனின் மோதிரத்தை சீதை பெற்று, ராமனையே கண்ட அனுபவம் அடைந்தாள். ஆகையால் ஹனுமன் எடுத்து வந்த ராமனின் கணையாழியே சீதை உகந்த ‘‘நாடு புகழும் பரிசாகும்’’. ❋

## வரப்பெற்றோம்

ஸம்ப்ரதாயத்தில் மிக்க ஊக்கம் கொண்ட தேஶிக தர்சிநி ஸபையினரால் இந்த ஶார்வரி வருஷம் வழக்கம்போல் தேஶிகன் மங்களாஶாஸன பாசுர பட காலண்டருடன் ஆனி மாதம் **ஸ்ரீலக்ஷ்மீ ஹயவதந ப்ரபாவம்** என்னும் சிறிய நூல் ஐம்பது பக்கங்களில் பல மஹான்களின் மேற்கோள்கள், ஆழ்வார்களும், ஆசார்யர்களும் இந்த அவதாரத்தில் கொண்ட ஈடுபாடு, ஸ்வாமி ஸ்ரீதேஶிகனின் ஆராதந மூர்த்தியான ஸ்ரீஹயக்ரீவனின் அருமை பெருமைகளையும் ஹயசிரோபாக்யானத்தில் இம்மூர்த்தியைப் பற்றிக் காணப்படும் விசேஷ அம்ஶங்கள் ஆகியவற்றை ஒரே இடத்தில் வாசகர்களின் ஸௌகர்யத்திற்காகத் தொகுத்து வரைந்திருக்கின்றனர். மிகவும்பயனுள்ள நூல். புஸ்தகம் கிடைக்குமிடம் - ஸ்ரீஸாமம் பார்த்தஸாரதி, 12, வடக்குச் சித்திரை வீதி, ஸ்ரீரங்கம், திருச்சி 620006. போன் 9840572451, 0431 2433941.

திருப்புல்லாணி ஸ்ரீநிவாஸன்



# Sri Malolan Educational Trust

**List of donors who contributed Rs.1,000 and above to SriAhobila Mutt**
**Sanskrit Veda Prabanda Sastra Patasala and Oriental High School, Madurantakam**
**(From 01.06.2020 to 31.07.2020)**

| Name | Amount | Name | Amount |
|---|---|---|---|
| R.Maniappan | 16000.00 | R.Varadan | 100000.00 |
| Usha Ravikumar | 2002.00 | Veda Vyasa Kainkarya Trust | 20000.00 |
| T.Janardhanan | 20000.00 | T.V.Ranganathan | 1001.00 |
| Natteri M Sudharsan | 2002.00 | Rajesh Kumar Rengachari | 1501.00 |
| P.S.Moorthy | 1000.00 | Prem Ramakrishnan | 1000.00 |
| S.Srikumar | 4000.00 | Yathivara Trust | 40000.00 |
| T.V.Ranganathan | 1001.00 | Dr.K.Srinivasan | 5000.00 |
| S.Sriram | 1000.00 | S.Venkataramanan | 10001.00 |
| A.Chandramouli | 1500.00 | A.S.Raman | 5000.00 |
| M.V.Venkatesan | 2001.00 | R.Jayasree | 1000.00 |
| R.Murali | 20000.00 | V.Narasimhan | 8000.00 |
| Dr.S.Sujatha | 5000.00 | N.Mohan | 5000.00 |
| K.R.Sarathy | 5001.00 | R.Harini | 16000.00 |
| Suresh Sarangan | 4000.00 | S.Rangamannar | 10000.00 |
| P.V.Rangamani | 1001.00 | Srinidhi Mukundan | 5000.00 |
| S.Lakshmi Narasimhan | 2000.00 | G.Ram & Vedanth | 2232.00 |
| Shyamala Narasimhan | 10000.00 | R.Sridharan | 6000.00 |
| Krishnaswsmysrinivasan | 1000.00 | Vasumathy Soundararajan | 2000.00 |
| N.R.Ravikrishnan | 1001.00 | Jayasri Raghavan | 10000.00 |
| K.Mohan | 1000.00 | R.Parthasarathy | 2000.00 |
| Indira Jagan | 1000.00 | K.Bhoovaraghavan | 5000.00 |
| Sriram Raghavan | 15000.00 | S. Krishnakumar | 3000.00 |
| R.Varadarajan | 10000.00 | R.Srinivasan | 8000.00 |
| R.Vasumathi | 2500.00 | V. Krishnakumar | 5000.00 |

மேற்படி கைங்கர்யத்தில் பங்கு கொள்ள விரும்புவோர் தங்கள் காசோலையை **Sri Malolan Educational Trust** என்ற பெயரில் 30, வெங்கடேச அக்ரஹாரம், மயிலாப்பூர், சென்னை–4, / **S.A.S. College** 53, ஸந்நிதி தெரு, மதுராந்தகம், ஸ்ரீமடத்திற்கு அனுப்புமாறு ப்ரார்த்திக்கிறோம். **Online**ல் அனுப்ப விரும்புவோர் A/c No.: **10311654844,** A/c Type: **SB,** Bank: **SBI,** Branch: **Adyar,** IFS Code: **SBIN0001115** செலுத்திவிட்டு **E-mail : acsmcas@gmail.com**லும் Phone Nos. **9677496601 /8072707469** அவசியம் தெரியப்படுத்தவும். **80G** வரிவிலக்கும் உண்டு.

# பாலர் பகுதி

கேள்விகளும் பதில்களும்

**திருப்புல்லாணி ஸ்ரீநிவாஸன்**

## கேள்விகள்

1. இம் மாதத்தில் அவதரித்த முக்கூர் ஸ்ரீமதழகியசிங்கர் செய்தருளிய கைங்கர்யங்களில் மிக உயர்ந்த கைங்கர்யம் எது?
2. பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் விஷயமாக ஸ்வாமி ஸ்ரீதேஶிகன் அருளிச் செய்த காவ்ய க்ரந்தத்தின் பெயர் என்ன?
3. கோபாலவிம்ஶதியில் தன்னுடைய அந்திம ப்ரயாணத்தில் எம்பெருமான் எவ்வாறு ஸேவை ஸாதிக்க வேண்டும் என விரும்புகிறுர் ஸ்வாமி ஸ்ரீதேஶிகன்?
4. யமனார்ஜுனர்கள் என்பவர்கள் யார்?
5. ஸ்ரீமத் பகவத்கீதை யாரால் யாருக்கு எந்த இடத்தில் உபதேஶிக்கப்பட்டது?
6. ஸ்ரீமத் பகவத்கீதையில் கூறப்படும் மூன்றுவிதமான யோகங்கள் யாவை?
7. ஸ்ரீபெரியவாச்சான் பிள்ளையின் அவதார ஸ்தலம், திருநக்ஷத்ரம், இயற்பெயர், பிருதம், அவர் அருளிச்செய்த ப்ரபலமான நூல் ஆகியவை பற்றிக் கூறுக.
8. ரிஷிகளையும் அவர்களது தர்ம பத்நிகளையும் பொருத்துக.


   வஸிஷ்டர் - ரேணுகா

   அகஸ்த்யர் - அனசூயா

   ருஷ்ய சிங்கர் - லோபாமுத்ரை

   அத்ரி - அருந்ததி,

   ஜமதக்னி - சாந்தா



9. அருஞ்சொற்பொருளைக் கூறுக.

   அதிவாதம்

   கடுக

   பவம்

   ப்ரதிபந்தகம்

   ஸததம்.

10. இந்திரன் சிறுவன் தேர்முன் நின்றுனை என்று எந்த திவ்ய தேஶத்து எம்பெருமானைக் குறித்து திருமங்கையாழ்வார் மங்களாஶாஸநம் செய்கிறுர்?

(பதில்கள் பின்பக்கம்)

பதில்கள்

1. ஸ்ரீரங்கம் ராஜகோபுரம்



2. யாதவாப்யுதயம்

3. ஸ்ரீவேணுகோபாலன்

4. குபேரனின் புத்ரர்கள் -

நளகூபரன், மணிக்ரீவன்.

நாரதரின் சாபத்தினுல் இரட்டை

மருத மரங்கள் ஆயினர்.

5. ஸ்ரீக்ருஷ்ணன், அர்ஜுனன், குருக்ஷேத்ரம்

6. கர்ம யோகம், ஜ்ஞான யோகம், பக்தியோகம்

7. சேங்கனூர், ஆவணி ரோஹிணி, ஸ்ரீக்ருஷ்ணஸூரி, வ்யாக்யானச் சக்ரவர்த்தி, தனிச் ச்லோகீ

8. அருந்ததி

லோபாமுத்ரை

சாந்தா

அனசூயா

ரேணுகா

9. மிகைப் படுத்துதல்

சீக்ரம்

ஸம்ஸாரம்

தடங்கல் / இடையூறுகள்

அடிக்கடி

10. ஸ்ரீபார்த்தஸாரதி, திருவல்லிக்கேணி.




# இந்த மாதம் உங்கள் நிலை

## ஶார்வரி ஸ்ரீ ஆவணி மாதம் (17.8.20 முதல் 16.9.20 வரை

■ ஸ்ரீ.உ.வே.கௌசிகன்
ஆஸ்தான ஜோதிடர், ஸ்ரீமதஹோபிலமடம்
Ph: 9884090017

*சிம்ம ராசியில் சூரியன் ப்ரவேசிக்கும் சமயம்* (7.11 PM on 16.8.20 as per Drik system) *கும்ப லக்னம் அமைகிறது. லக்னுதிபதி சனி 12ல் ஆட்சி. சனியின் ஸஞ்சாரம் சிரியா, பஞ்சாப் மாகாணம், ஆப்கானிஸ்தான், மெக்ஸிகோ, பெல்ஜியம் நகரங்களில் கலவரங்கள், பாதிப்புகள் ஏற்படும். செவ்வாய் மூன்றில் ஆட்சி. ரயில்வே, போக்குவரத்து, தபால் தந்தி இலாகாக்களில் சீரமைப்பு நடைபெறும். சூரியன் ஏழில். ஆட்சியில் உள்ளோருக்கு நேசக்கரங்கள் அதிகமாகும். குரு 11ல் ஆட்சி. சட்டங்கள் நிறைவேற்றப்படும். பொருளாதார நிலையில் முன்னேற்றம் தெரியும். மழைக்கு அதிக பலம் இல்லை.*

மேஷம்



***(அஸ்வினி, பரணி, க்ருத்திகை ¼)***

*ராசிநாதன் செவ்வாய் ராசியில் ஆட்சி. ராசியைக் குரு பார்ப்பதும் நன்று. பணவசதி பெருகும். தைர்யமும், ஊக்கமும் குன்றுமல் எதையும் சமாளிக்கும் திறன் ஏற்படும். சிலருக்கு ஸந்தான ப்ராப்தி உண்டு. புதிய முயற்சிகளில் நல்ல திருப்பம் ஏற்படும். புதன் நான்கு, ஐந்து, ஆறில். வித்தையில் முன்னேற்றம் உண்டு. வியாபாரிகள் ஆதாயம் அடைவர். ராணுவம், காவல்துறையில் உள்ளோருக்கு இடமாற்றம் வரும். சுக்ரன் மூன்று, நான்கில். சிலருக்குப் புதிய வீடு, வாகன சேர்க்கை உண்டு. மந்த்ரராஜபத ஸ்தோத்ரம் ஸேவிக்கவும்.* ***சந்த்ராஷ்டமம்*** *(25.8.20 காலை 8.20 முதல் 27.8.20 பகல் 12.38 வரை).* ***அனுகூலமான நாட்கள்: ஆகஸ்ட்:*** *22,23,24,30,31,* ***செப்:*** *1,2,6,7,11,12.*

ருஷபம்



***(க்ருத்திகை ¾, ரோஹிணி, ம்ருகசீர்ஷம் ½)***

*ராசிநாதன் சுக்ரன் இரண்டிலும், 31.8.20 முதல் மூன்றிலும் ஸஞ்சாரம். சிலருக்கு ஜாகை மாற்றம் செய்ய நேரும். பழகுவோருடன் உஷார் தேவை. புதன் 3,4,5ல். வித்தையில் பலிதம் சுமார். பூர்விகச் சொத்துக்களால் ஆதாயம் ஏற்படும். வியாபாரிகள் முன்னேற்றம் காண்பர். உறவினர்கள் ஆதரவு இருக்கும். குரு எட்டில். கேது ஸம்பந்தம். பணவசதி சாதாரணம். ஸந்ததிகள் பற்றிய ப்ரச்னைகள் இருக்கும். அரசு ஊழியர்களில் சிலர் கட்டாய விடுப்பில் செல்ல நேரும். சனி ஒன்பதில் ஆட்சி. புதிய முயற்சிகளில் அனுகூலம் தாமதமடையும். பிதாவகை அதிருப்தி நிலவும். சுந்தரகாண்ட பாராயணம் செய்வது நன்று.* ***சந்த்ராஷ்டமம்*** *(27.8.20 பகல் 12.38 முதல் 29.8.20 இரவு 7.15 வரை).* ***அனுகூலமான நாட்கள்: ஆகஸ்ட்:*** *17,18,24,25,26,* ***செப்:*** *1,2,3,4,5,9,10,13,14.*


மிதுனம்



***(ம்ருகசீர்ஷம் ½, திருவாதிரை, புனர்வஸு ¾)***

*ராசிநாதன் புதன் 2,3,4ல். வித்தையில் பலிதம் சுமார். ஸ்திர சொத்துக்களால் ஆதாயம் உண்டு. குரு ராசியைப் பார்ப்பது நன்று. நிதிநிலைமை நன்கு அமையும். சிலருக்கு ஸந்தான ப்ராப்தி உண்டு. சூரியன் மூன்றில். தைர்யமும் ஊக்கமும் குன்றுது. பெரியோர்கள், உயர் பதவியில் உள்ளோர் ஆதரவு கிடைக்கும். தொழிலில் கூட்டாளிகள் நன்கு செயல்படுவர். சுக்ரன் ராசியிலும் இரண்டிலும். களத்ரவகை லாபமும், சிலருக்குப் புதிய வாகன யோகமும் உண்டு. சனி எட்டில். மறைமுகமான எதிர்ப்புகள் இருக்கும். இருப்பினும் சமாளிக்கப்படும். சக்கரத்தாழ்வாரை ப்ரதக்ஷிணம் செய்யவும்.* ***சந்த்ராஷ்டமம்*** *(29.8.20 இரவு 7.15 முதல் 31.8 / 1.9 இரவு 3.48 வரை).* ***அனுகூலமான நாட்கள்: ஆகஸ்ட்:*** *19,20,26,27,28,* ***செப்:*** *4,5,6,7,11,12.*

**கடகம்** *(புனர்வஸு ¼, பூசம், ஆயில்யம்)*



*குரு 6ல் ஆட்சி. கேது ஸம்பந்தம். குரு தனஸ்தானத்தைப் பார்ப்பதால் நிதிநிலைமை சமாளிக்கப்படும். அரசு ஊழியர்களில் சிலருக்கு இடமாற்றமும், சிலர் விடுப்பில் செல்லவும் நேரும். சனி ஏழில். களத்ரவகை சுகக்குறைவு காணும். தொழிலில் கூட்டாளிகள் ஆதரவு இராது. புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நன்று. செவ்வாய் பத்தாமிடத்தில் ஆட்சி. கணினித்துறையில் உள்ள சிலருக்கு சற்றே முன்னேற்றம் தெரியும். ராணுவம், காவல் துறையில் உள்ள சிலருக்கு அனுகூலமான இடமாற்றம் வரும். புதனின் ஸஞ்சாரத்தால் வித்தையில் பலிதம் சுமார். சுக்ரனின் ஸஞ்சாரம் புதிய செலவினங்கள் தரும். ஸ்ரீஹயக்ரீவரை ஸேவிக்கவும்.* ***சந்த்ராஷ்டமம்*** *(31.8 / 1.9.20 இரவு 3.49 முதல் 3.9.20 பகல் 2.17 வரை).* ***அனுகூலமான நாட்கள்: ஆகஸ்ட்:*** *17,18,22,28,29,30,* ***செப்:*** *6,7,8,9,14.*

**ஸிம்மம்** *(மகம், பூரம், உத்திரம் ¼)*



*ராசிநாதன் சூரியன் ராசியில். குரு பார்ப்பது நன்று. பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயம் ஏற்படும். ஸந்ததிகள் நிலை உயரும். புதிய முயற்சிகளில் நல்ல முன்னேற்றம் உண்டு. அரசு ஊழியர்களில் சிலருக்கு சற்றே அனுகூலமான இடமாற்றம் கிடைக்கும். சனி ஆறில் ஆட்சி. எதிலும் வெற்றி தான். நீதிமன்ற விவகாரங்களில் அனுகூலம் உண்டு. தொழில் அதிபர்கள் தங்கள் தொழிலை மேலும் அபிவ்ருத்தி செய்வர். புதனின் ஸஞ்சாரம் வியாபாரிகள், கணக்காயர்களுக்கு நற்பலன்கள் அளிக்கும். சுக்ரனின் ஸஞ்சாரத்தால் கலைஞர்கள், ஸ்த்ரீகள் முன்னேற்றம் காண்பர். செவ்வாய் 9ல். சகோதரவகை அதிருப்தி நிலவும். மந்த்ரராஜபத ஸ்தோத்ரம் ஸேவிக்கவும்.* ***சந்த்ராஷ்டமம்*** *(3.9.20 பகல் 2.17 முதல் 5 : 6.9.20 இரவு 2.22 வரை).* ***அனுகூலமான நாட்கள்: ஆகஸ்ட்:*** *19,20,23,24,30,31,* ***செப்:*** *1,2,10,11,12,14.*

**கன்னி** *(உத்திரம் ¾, ஹஸ்தம், சித்திரை ½)*




*ராசிநாதன் புதன் 11,12 மற்றும் ராசியில். வித்தையில் மேன்மை உண்டு. வியாபாரிகள் தங்கள் துறையை மேலும் அபிவிருத்தி செய்வர். கணக்காயர்கள், வழக்கறிஞர்கள் முன்னேற்றம் காண்பர். குரு நான்கில் கேது ஸம்பந்தம். அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். நிதிநிலைமை சாதாரணம். சனி 5ல் ஆட்சி. மின் சாதனங்களைக் கையாள்வதிலும், வாகனங்கள் ஓட்டுவதிலும் அதிகக் கவனம் தேவை. கணினித்துறையில் உள்ள சிலருக்கு தேக்கநிலை நிலவும். அபீதிஸ்தவம் ஸேவிக்கவும்.* ***சந்த்ராஷ்டமம்*** *(5/6.9.20 இரவு 2.22 முதல் 8.9.20 பகல் 3.17 வரை).* ***அனுகூலமான நாட்கள்: ஆகஸ்ட்:*** *17,18,22,26,* ***செப்:*** *2,3,4,11,12,13,14.*

**துலாம்** *(சித்திரை ½, ஸ்வாதி, விசாகம் ¾)*



*ராசிநாதன் சுக்ரன் 9 மற்றும் 31.8.20 முதல் பத்தாமிடத்தில். சிலருக்கு உத்யோகஸ்தல மாற்றம் வரும். களத்ரவகை லாபம் ஏற்படும். குரு மூன்றில். கேது ஸம்பந்தம். பணம் வரும். கையில் தங்காது. செலவினங்கள் காத்திருக்கும். புதிய முயற்சிகளைத் தள்ளிப்போடுவது நன்று. சனி நான்கில். கீழ்படிந்தோர் சக ஊழியர் தொல்லை தருவர். தாயாரின் உடல் நலம் சற்றே பாதிக்கப்படும். உணவு விஷயத்தில் கட்டுப்பாடு தேவை. சூரியன் 11ல் ஆட்சி. தக்க தருணத்தில் பெரியோர்கள் உயர் பதவியில் உள்ளோர் ஆதரவு கிடைக்கும். வித்தையில் மேன்மை உண்டு. செவ்வாய் ஏழில். சிலருக்குக் கண்ணில் உபாதை காட்டும். ஸ்ரீலக்ஷ்மிநரஸிம்மரை ஸேவிக்கவும்.* ***சந்த்ராஷ்டமம்*** *(8.9.20 பகல் 3.17 முதல் 10 / 11.9.20 இரவு 2.33 வரை).* ***அனுகூலமான நாட்கள்: ஆகஸ்ட்:*** *17,18,19,20,23,24,28,* ***செப்:*** *4,5,6,7,14,15,16.*

**வ்ருச்சிகம்** *(விசாகம் ¼, அனுஷம், கேட்டை)*



*ராசிநாதன் செவ்வாய் ஆறில் ஆட்சி. குரு பார்வை விசேஷம் நிதிநிலைமை நன்கு அமையும். சேமிக்கமுடியும். சுபகார்யங்கள் முடியும். சிலருக்கு ஸந்தான ப்ராப்தி உண்டு. சூரியன் பத்தாமிடத்தில் ஆட்சி. குரு பார்வை. பெரியோர்கள், உயர் பதவியில் உள்ளோர் ஆதரவு நன்கு அமையும். அரசு ஊழியர்களில் சிலருக்கு அனுகூலமான இடமாற்றம், பதவி / சம்பள உயர்வு கிடைக்கும். கணினித்துறையில் உள்ள சிலருக்கு எதிர்பாராத நற்பலன்கள்*

*நடைபெறும். வித்தையில் பலிதம் சுமார். தொழிலில் கூட்டாளிகளை அதிகம் நம்ப வேண்டாம். ஸ்ரீஹயக்ரீவரை ஸேவிக்கவும்.* **சந்த்ராஷ்டமம்** *(10 / 11.9.20 இரவு 2.33 முதல் 13.9.20 காலை 10.30 வரை).* **அனுகூலமான நாட்கள்: ஆகஸ்ட்:** *19,20,21,22,26,30,31,* **செப்:** *6,7,8,9,16.*

தநுஸ்



**(மூலம், பூராடம், உத்திராடம் ¼)**

*ராசிநாதன் குரு ராசியில். நிதிநிலைமை சாதாரணம். அலைச்சல் அதிகமாகும். ஸந்ததிகள் பற்றிய ப்ரச்னைகள் இருக்கும். குரு தன் மனையில் இருப்பதால் சமாளிக்கும் திறன் இருக்கும். சனி இரண்டில். வாக்கில் நிதானம் தேவை. கீழ்படிந்தோர், சக ஊழியர் தொல்லை தருவர். தொழில் அதிபர்களுக்குப் போட்டியும், மந்தநிலையும் நிலவும். செவ்வாய் 5ல். பூர்வீகச் சொத்துக்களில் ஆதாயம் குறைந்து காணும். ஆகார விஷயத்தில் நியமம் தேவை. கர்ப்பிணிகள் அடிக்கடி தக்க மருத்துவ பரிசோதனை செய்து கொள்வது நன்று. புதனின் ஸஞ்சாரம் வியாபாரிகளுக்குச் சற்றே அனுகூலம். மந்த்ரராஜபத ஸ்தோத்ரம் ஸேவிப்பது நன்று.* **சந்த்ராஷ்டமம்** *(17.8.20 முதல் 18 / 19.8.20 காலை 4.08 வரை மற்றும் 13.9.20 காலை 10.30 முதல் 15.9.20 பகல் 2.25 வரை).* **அனுகூலமான நாட்கள்: ஆகஸ்ட்:** *21,22,23,24,28,* **செப்:** *1,2,10,11,12.*

மகரம்



**(உத்திராடம் ¾, திருவோணம், அவிட்டம் ½)**

*ராசிநாதன் சனி ராசியில். ஏழரைச் சனி. ராசிநாதன் என்பதால் அதிக பாதகம் இராது. அலைச்சலும், உழைப்பும் அதிகமாகும். தொழில் அதிபர்களுக்கு போட்டியும், மந்தநிலையும் நிலவும். குரு 12ல். பணவசதி சாதாரணம். செலவினங்கள் குறையாது. புதிய முயற்சிகளைத் தள்ளிப்போடுவது நன்று. சூரியன் எட்டில். அரசு ஊழியர்களில் சிலர் விருப்ப ஓய்வு பெறுவர். சிலர் விடுப்பில் செல்ல நேரும். செவ்வாய் நான்கில். கணினித்துறையில் உள்ள சிலருக்குத் தேக்கநிலை நிலவும். சகோதரவகை அதிருப்தி நிலவும். சுக்ரன் ஆறு, மற்றும் ஏழில். எவரையும் அதிகம் நம்பவேண்டாம். சுந்தரகாண்ட பாராயணம் செய்வது நன்று.* **சந்த்ராஷ்டமம்** *(18 / 19.8.20 காலை 4.08 முதல். 20 / 21.8.20 காலை 5.15 வரை மற்றும் 15.9.20 பகல் 2.25 முதல் 16.9.20 வரை).* **அனுகூலமான நாட்கள்: ஆகஸ்ட்:** *23,24,25,26,30,* **செப்:** *2,6,7,12,13,14.*

கும்பம்



**(அவிட்டம் ½, சதயம், பூரட்டாதி ¾)**

*ராசிநாதன் சனி 12ல் ஆட்சி. ஏழரைச் சனி ஆரம்ப நிலை. செலவினங்கள் குறையாது. மறைமுகமான எதிர்ப்புகள் இருக்கும். கீழ்படிந்தோர் சக ஊழியர் தொல்லை தருவர். குரு 11ல். கேது ஸம்பந்தம். நிதிநிலைமை அபிவ்ருத்தி அடையும். அரசு ஊழியர்களில் சிலருக்கு சாதகமான சூழ்நிலை அமையும். ஸந்ததிகள் நிலை உயரும். செவ்வாய் மூன்றில். கணினித்துறையில் உள்ள சிலருக்கு முன்னேற்றம் காணும். சூரியன் ஏழில். சிலருக்கு உஷ்ண ஸம்பந்தமான பிணிகள் காட்டும். புதன் 6, 7 மற்றும் எட்டில். சிலர் பூர்வீகச் சொத்துக்களை க்ரயம் செய்வர். சக்கரத்தாழ்வாரை ஸேவிக்கவும்.* **சந்த்ராஷ்டமம்** *(20 / 21.8.20 காலை 5.15 முதல் 23.8.20 காலை 6.09 வரை).* **அனுகூலமான நாட்கள்: ஆகஸ்ட்:** *17,18,19,26,27,29,* **செப்:** *2,6,7,14,15,16.*

மீனம்



**(பூரட்டாதி ¼, உத்திரட்டாதி, ரேவதி)**

*ராசிநாதன் குரு பத்தாமிடத்தில். தொழிலை மாற்ற சிலர் யோசனை செய்வர். தனகாரகன் குரு தனஸ்தானத்தைப் பார்ப்பதால் நிதிநிலைமை சமாளிக்கப்படும். சனி 11ல். தொழில் அதிபர்கள் முன்னேற்றம் காண்பர். சூரியன் ஆறில். நீதிமன்ற விவகாரங்களில் வெற்றி காண்பீர். குருபார்வை சூரியன் மீது விழுவதால் அரசு ஊழியர்களில் சிலருக்கு எதிர்பாராத நற்பலன்கள் நடைபெறும். செவ்வாய் இரண்டில் ஆட்சி. சகோதரவகை அதிருப்தி நிலவும். சிலருக்குக் கண் / பல் உபாதை காட்டும். புதன் 5,6,7ல். தொழிலில் கூட்டாளிகள் ஆதரவு குறைந்து காணும். சுக்ரன் 4 மற்றும் 5ல். கலைஞர்கள், ஸ்த்ரீகளுக்கு அனுகூலமான காலம். ஸ்ரீஹயக்ரீவரை ஸேவிக்கவும்.* **சந்த்ராஷ்டமம்** *(23.8.20 காலை 6.09 முதல் 25.8.20 காலை 8.20 வரை).* **அனுகூலமான நாட்கள்: ஆகஸ்ட்:** *19,20,21,22,28,29,30,* **செப்:** *4,5,10,16.*



ஸ்ரீ:

# இஞ்சிமேடு ஸ்ரீமதழகியசிங்கர் சாரிடபுள் டிரஸ்ட்
# (ISAC TRUST)

22, மோதிலால் தெரு, திருவள்ளூர் - 602001
போன் : 044 - 27662574

ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தானத்தை அலங்கரித்த இஞ்சிமேடு ஸ்ரீமதழகியசிங்கர் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்யபாதுகாஸேவக ஸ்ரீவண் ஶடகோப ஸ்ரீரங்கஶடகோப யதீந்த்ர மஹாதேஶிகன் (42ம் பட்டம்) திருவள்ளூரில் 1953 வருடம் மார்ச் 1ம் தேதி திருநாட்டை அலங்கரித்தார். அன்று முதல் ஸ்ரீமத் அழகியசிங்கரின் சிஷ்யர்களால் ஆரம்பிக்கப்பட்டு 67 வருடங்களாக தொடர்ந்து ஸ்ரீமத் அழகியசிங்கர் திருநக்ஷத்ரம் 10 நாட்கள், ஆராதனம் 3 நாட்கள், ப்ரதிமாதம் த்வாதசி மற்றும் அமாவாஸ்யைகளிலும் ஸ்ரீவீரராகவன் தை ப்ரஹ்மோத்ஸவம், பகல் மற்றும் இராப்பத்து 21 நாட்களிலும் 41, 43, 44, 45, 46ம் பட்டம் ஸ்ரீமத் அழகியசிங்கர்களின் திருநக்ஷத்ரங்களை விமர்சையாகவும் ததீயாராதனைகளை நடத்தியும், மருத்துவ உதவியும், ஏழை எளியோரின் குழந்தைகள் படிக்க உதவியும், ச்ரமப்படும் கோயில் கைங்கர்யபரர்களுக்கு உதவியும், அன்னதானமும் செய்து வருகின்றோம்.







2020 மார்ச் மாதம் 25ம் தேதி முதல் ஊரடங்கு உள்ளபடியால் ஸ்ரீவீரராகவன் ஸந்நிதியில் கைங்கர்யம் செய்யும் அர்ச்சகர், ஸ்தானீகர்கள் மற்றும் சுற்றுகோவில் கைங்கர்யபரர்களுக்கு பண உதவியும் மற்ற சிப்பந்திகளுக்கு அரிசி மற்றும் மளிகை சாமான்கள், சுகாதார சிப்பந்திகள், போலீஸ் பந்தோபஸ்துகாரர்கள், ஸ்ரீ வீரராகவன் கோவில் அருகில் உள்ள ஆட்டோ ஓட்டுனர்கள் ஆகியோருக்கு அரிசி மற்றும் மளிகை சாமான்கள் கொடுத்து உதவி புரிந்திருக்கிறோம்.



ஸ்ரீவீரராகவன் கோசாலை ஆயர்பாடியில் உள்ள பசு மற்றும் கன்றுகள் தீவனம், கோவில் அன்னதானத்திற்கும் த்ரவ்யங்கள் கொடுத்து வருகிறோம்.

மேற்கூறிய கைங்கர்யங்களில் ஸஹாயம் செய்யவேண்டுமென நினைக்கும் உதாரகுணமுடைய ஆஸ்திகர்கள் முடிந்த அளவு தங்களால் இயன்ற பண உதவியையும், பொருளுதவியையும் செய்யுமாறு விண்ணப்பிக்கிறோம். மேற்படி டிரஸ்ட் 80 G வரிவிலக்குள்ள டிரஸ்ட். கணக்குகள் சரியாக வருமானவரித்துறையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

பணம் அனுப்புவோர் கீழே கொடுக்கப்பட்டுள்ள விபரங்களின்படி இணையதளம் மூலமாகவோ, சென்னையில் மாற்றக்கூடிய காசோலை மூலமாகவோ அனுப்ப ப்ரார்த்திக்கிறோம்.

**ISAC Trust, Punjab National Bank, Tiruvallur.**

**S.B. A/c. No.6079000100003022. IFSC Code: PUNB0607900**

பணம் அனுப்பிய விபரங்களை டிரஸ்டிகளுக்கு தெரிவிக்குமாறு கேட்டுகொள்கிறோம்.

**Managing Trustee: K. Narasimhan (Mob.) 9840924230**

## ஜோதிஷ பலன்கள் மற்றும் ப்ரச்னம்



- ❖ திருமண பொருத்தம்
- ❖ திருமணம் தாமதம்
- ❖ புத்திர பாக்யம் தாமதம்
- ❖ கல்வி ஆலோசனை
- ❖ வியாதி அவஸ்தை
- ❖ ருண ரோக தோஷங்கள்
- ❖ உத்யோகம் மற்றும்
- ❖ வீடு மனை யோகம்
- ❖ தொழில் முடக்கம்
- ❖ கடன் தொல்லை

மற்றும் அனைத்து ஜாதக ஆலோசனைகளுக்கும் அணுகவும்


திரு. வீரராகவன் கண்ணன் (ந்ருஸிம்ஹ உபாசகர்)

பதிவு நேரம் 9.00 a.m. to 1.30 p.m. & 3.30 p.m. to 6.00 p.m.

Cell: 0 - 98405 98204 / 044 - 4868 8253

E-Mail: vkastrology@gmail.com ⋆ தொலைதூரவாசிகளுக்கு C.D. / இணையதளம் மூலம் பலன்களை பதிவுசெய்து அனுப்பப்படும்.


## MATRIMONIALS



**Parents** can take up **membership** of **Sri Nrisimha Priya** for publication of **matrimonial advertisements for their children.** They need to pay subscription amount of Rs.600/- for either Tamil or English Sri Nrisimha Priya for two years or Rs.300/- for one year for both language issues.

For publication of advertisement in any English month, the **matter should reach the office before the 15th of Previous English Month together with the remittance.**

A concession of 50% of the above charges will be allowed if you advertise in our English language Nrisimha Priya also.

**IMPORTANT ANNOUNCEMENT**

The schedule of GST rates for services as approved by GST Council includes selling of space for advertisements in Print Medium at 5% with full ITC. Consequently, the Matrimonial Advertisement tariff stands revised as under with effect from 16.06.2017. (a) Rs.18/- per word upto 20 words (minimum 350) (b) between 21 and 30 words Rs.600 lumpsum (c) between 31 and 40 words Rs.1,000/- (d) email identities reckoned as 10 words. (e) For Box No. Advertisements Rs.300/- extra

*சீக்ரம் நல்லமுறையில் கல்யாணம் ஆவதற்கு ஸ்வாமி தேசிகன் அருளிய ஸ்ரீ ஸ்துதி மற்றும் கோதாஸ்துதியை தினந்தோறும் பாராயணம் செய்யலாம்.*

வாய்ப்பு கிடைக்கும்பொழுது ஸ்வாமி தேசிகன் அவதரித்த தூப்புல் திவ்யதேசத்திற்குச் சென்று தீபப்ரகாசன் ஸந்நிதியில் விளக்கேற்றி வழிபடலாம்.

*செல்ல இயலாதவர்கள் அருகிலுள்ள கோயில்களிலுள்ள பெருமாள், தேசிகன் ஸந்நிதிகளில் விளக்கேற்றி வழிபடலாம்.*

## மணமகள் தேவை BRIDE WANTED

1. **Vadakalai Bharadwajam,** Moolam Padam 1, Born Jan 1992, 5’9", Grandson of Sangu Srinivasan, H1B, fair, handsome, Athletic, MS (USA), working San Jose California, seeks good looking, enthusiastic, an energetic individual from credential family & background, and with a well qualified professional degree employed / employable bride in the USA +1 2133589512 / +917358262100 / send a family profile with horoscope & picture. Email: sv.raghavan@careultimate.com

2. **Vadakalai Vadoolam** Rohini April 1992 5’10” US Citizen B.Tech (IITM) Ph.D currently pursuing PostDoc at MIT seeks suitable bride in USA. Ph: 044-24994865, 9841073601

**3. Vadakalai Bharathwajam** Poosam Nov. 1979 178 cms MBA, Manager, Alliance Group of Companies 65000 pm seeks bride. 9677449996 / 9444851034

**4. Vadakalai Sankruthi** Pooram June 1993, 5'6", B.Tech and M.Sc (Automobile) working Private Company seeks suitable qualified employed girl. 9952042061 / 9840213690

**5. Vadakalai Srivatsam** Poosam (2), November 1986, 6'1", B / Tech, Senior System Analyst, Rs. 14 LPA, only son seeks qualified employed girl. Kalai no bar. 9176166156

**6. Vadakalai Naidhruva-Kasyapam** Thiruvonam (4), May 1989, 5'8", BE employed Schlumberger Coimbatore seeks professionally qualified girl 9600117681. Email: rsantos86@gmail.com

**7. Thenkalai Koundinyam** Chithirai (4), October 1986, 6'0", M.S. I.T., Manager (Australia) seeks qualified Iyengar bride. Phone: 988485539 email: v.vr4252@gmail.com

**8. Vadakalai Haritham** Poorattadhi May 1991, 166 cms, M.S. (Bio-Medical), pursuing Ph.D, Philadelphia seeks well educated girl willing to relocate to USA. Any Kalai. Phone: 9944948092

**9. Tenakalai Viswamithram** Revathy, July 1992 (2.12 am), 6'0", B.Tech (Sastra), MBA (Pune), working in Chennai seeks suitable bride. 9444058313. email: ranga4ranga@yahoo.co.in

**10. Vadakalai Naidhruva-Kasyapam** Swathi May 1987, 5'11', B.Com, MBA working as Asst Manager Chennai seeks suitable bride. Any kalai. 9710903301 / 9841374848

**11. Vadakalai Kousigam** Bharani January 1993 180 cms, BE actively engaged in more than 60 years old Chennai based family business seeks suitable bride. Email: kaushikam1993@gmail.com

**12. Vadakalai Naidhruva-Kasyapam** Kruthika, 5'8", September 1984, B.Com., M.H.R.M., Wipro Bengaluru 13 LPA seeks suitable bride, any kalai. 9952028217 email: psmurali49@gmail.com

**13. Tenkalai Bharadwajam** Arudra August 1991, 5'11", BE, MS USA seeks suitable bride any kalai. 9731912463 / 9480014028. Email: tksrajagopalan@gmail.com

**14. Vadakalai Bharadwajam** Hastham (3) November 1983 5'9" MBA, Ph.D only son professor at Hyderabad seeks any PG (or) Ph.D professionally qualified employed bride. Contact: 09849799938, 08790816065, 040 27228662. E.mail: ragavanvenkatavaradha@gmail.com

**15. Vadakalai Kousigam** Swathi Mar 92 5'8" BE MS (USA) Father Telugu Iyer Mother Iyengar employed in USA seeks suitable bride 2 - 5 years difference. Ph: 9940618733.

**16. Vadakalai Koundinyam** Revathi May 1992 6'0" B.Com MBA employed in MNC Chennai Rs. 10 LPA seeks suitable bride. Ph: 9841667902 E.mail: padmark15@gmail.com

**17. Vadakalai Satamarshanam** Bharani February 1990, 58", B.Tech (IT), MBA, working in MNC Chennai seeks suitable educated bride. Contact: 07010683778 / 09841769903

**18. Vadakalai Kausikam** Maham Simha Rasi, april 1991, 6'0", tall, B.Com, MBA working in State Street Inc, Bangalore seeks well qualified and employed bride. Contact: 9731425508 / 9886215344

**19. Vadakalai Bharadwajam** Makam (2), 5’11", September 1993, Doctor MD seeks professionally qualified Vadakalai bride 9444286803 / 9597290220

**20. Thenakalai Athreya** Chitra, 28, 186 cm, BE employed Chennai, Rs. 80,000 / - PM seeks graduate employed girl. Any kalai. Ph: 044-24423874 / 9176413427 / 9994341057

**21. Vadakalai Bharadwajam** Moolam (1) October 1989 5’4", Software, MNC Chennai 14.00 Lakhs per year seeks professionally qualified employed bride. Kalai no bar. Contact: 9444066530 / 9042046346

**22. Vadakalai Haritham** Pooram January 1991, 5’7", CA CWA employed in an auditing company seeks professionally qualified working girl. 9884468770 / 9962546955

**23. Vadakalai Srivathsam** Poorattadhi (3), April 1991, 5’10", B.Com., WISTRON Bangalore. Seeking qualified bride. Kalai no bar. 9841917812

**24. Vadakalai Srivathsam** Anusham Vrischikam October 1992, 5’11”, B.Sc., HDFC, Hyderabad 5 LPA seeks suitable bride. 9704630397 / 8106301749

## மணமகன் தேவை BRIDEGROOM WANTED

**1. Vadakalai Sandilya** Anusham July 1993, 5’3", B.Tech (EEE), MSC (Wildlife Science) Senior Research Fellow at a non-profit Oranization, Phd Aspirant seeks a suitable grooom. Contact: 9449457377 Email: pvsrajan2008@rediffmail.com

**2. Vadakalai Viswamithram** Mrigaseersham (4) June 1995, 5’8" MS employed in Dallas, USA (H1B visa), seeks professionally qualified bridegroom working in USA. Ph: 9791182017 / 9962621181.

**3. Vadakalai Srivatsam** Visakam (2) & tula Rasi May 1995, 164 cm, MBBS, pursuing MD Pondy seeks professionally qualified and employed bridegroom 9444262005

**4. Vadakalai Bharadwajam** Uthiram (1), 5’3", April 1995, B.Tech US citizen working in Chennai seeking professionally well qualified groom. Ph: 7358091150 Email: uthiram041995@gmail.com

**5. Vadakalai Bharadwajam** Anusham April 1991, 163 cm, BSc, BS, studied and working at Berklee College of Music, Boston, 01-B visa holder, seeking suitable well qualified groom. 09962932747 / 09445392820

**6. Vadakalai Srivathsam** Bharani July 1981, 5’7", B.Sc., (Maths), CA (Inter), qualified - completing CA final. Currently employed in CA Firm with interest in public service. We invite proposal from like minded professionally qualified groom, friendly partner. 98400 47598 Email: sarngam@gmail.com

**7. Vadakalai Bharadwajam** Anusham (3), September 1996, 5’6", B.E., working in MNC Bangalore seeks professionally qualified groom. Contact 04242431627 / 9488693627

**8. Thenkalai Gargyam** Ayilyam (3) January 1997, 5’3", B.E (ECE) working MNC Chennai seeks professionally qualified groom settled Chennai / Abroad. 9500179691 / 9566218437

**9. Vadakalai Shadamarshanam** Poratathi (2), November 1992, 5’5'”, M.A (Education) employed in Chennai as educator seeks professionally qualified groom. Age difference upto 3 years. Contact 944846079 / 9739277107. rajagopalan626@gmail.com

**10. Vadakalai Koundinyam** Magam (2), June 1996, 5’3", B.E., employed, seeks

professionally qualified groom. 8637646292 / 9952079899

**11. Vadakalai Srivatsam** Bharani, 5’5", October, 1989, Bangalore seeks professionally qualified girl. Kalai no bar. Ph: 9498052220 Email: padhukrishna4@gmail.com

**12. Vadakalai Koundinyam** Hastham May 1996, 5’6", B.Tech, employed in Chenai 7 Lakhs seeks suitable groom. Age difference 3 years. 9940316629

**13. Vadakalai Bharadwajam** Uthiram (1) January 1993, 165 cms, CA employed as Analyst in MNC Bank seeks professionally qualified groom Ph: 9003040160 email: kgiretharan@yahoo.com

**14. Vadakalai Koundinyam** Pooram October 1994 5’6" 14 LPA seeks professionally qualified groom with modern outlook. Age difference 1 to 3 years. Contact 9600160903

**15. Vadakalai Vadhoolam** Thiruvaadhirai September 1994, 5’1", B.E., pursuing Masters HRM (2nd year) seeks Vadakalai professionally qualified employed groom India. 9445988312 / 9941135847

**16. Vadakalai Srivatsam** Sadhayam November 1995, 5’5", B.Tech, pursuing MS in Germany. Kalai no bar seeks professionally qualified groom. 9952037295

**17. Vadakalai Bharatwajam** Visakam (3), May 1996, 5’6", MBA doing Phd, seeking suitable employed groom with 2 to 3 years of difference. Kalai no bar. 9843504436 / 9159165376

**18. Vadakalai Shadamarshanam** Anusham June 1994 5’3" BABL (Hons) ACS employed in Chennai seeking professionally qualified groom preferably Doctor Lawyer or CA or PG from a good family. Ph: 9444034491.


**19. Thenkalai Vathoolam** Pooram, 5’5", September 1995, BE (CSE), got admit to do MS in UCR / US, seeks suitable professionally qualified groom. age difference 2-5 years. Contact: 9444979660 email: sampathsarathy20@gmail.com


**20. Vadakalai Kausikam** Moolam June 1994, 5’6", CA, employed in Chennai seeks professionally qualified well settled groom. 9884691873. ramansrinivasan60@gmail.com

**21. Vadakalai Koushika** Hastam, January 1988, 5’7", B.E., M.S (U>K), working Canada, holds PR seeks qualified groom working Canada / USA. 9901828100 / 9900564947. malashashikanth@gmail.com



श्रीः










श्री अहोबिलमठीय – वेद - दिव्यप्रबन्ध - शास्त्र – पाठशाला





**நெ. 8-C, ஆர்த்தி நகர், கிழக்கு தாம்பரம், சென்னை – 600 059**

# ''वेदो रक्षति रक्षित:''

**ஸ்ரீமதழகியசிங்கர்** (45ஆவது பட்டம்) **ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்யபாதுகாஸேவக ஸ்ரீவண்சடகோப ஸ்ரீநாராயண யதீந்த்ர மஹாதேசிக**னால் துவக்கப்பட்ட இந்த **வேத ஸ்தாபனத்தின் வித்யார்த்திகளுக்கு உதவலாமே!**



1. தங்க இடமும், உடுக்க உடையும் மற்றும் உண்ண உணவும் நல்ல முறையில் வழங்கப்படுகிறது.

2. வேதம், திவ்யப்ரபந்தம், ஸம்ஸ்க்ருதம், ஸ்தோத்திரம், தமிழ், ஆங்கிலம், கணினி – இவைகளில் நல்ல முறையில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

   1. **க்ருஷ்ண யஜுர்வேதம்** (க்ரமாந்தம் – 8 வருடம்)
   2. **ஸாமவேதம்** (ரஹஸ்யாந்தம் – 8 வருடம்)
   3. **திவ்யப்ரபந்தம் & ஆகமம்** (ஸ்ரீபாஞ்சராத்ரம்) (6 வருடம்)

3. வித்யார்த்திகளுக்கும், பெற்றோர்களுக்கும் மாதம் ரூ.500/- (ரூ.250/- + ரூ.250/-) வைப்புநிதியாக வங்கி கணக்கில் வைத்து படிப்பு முடிந்தவுடன் நற்சான்றிதழுடன் மொத்த பணமாக கொடுக்கப்படவுள்ளது.

4. நல்ல தேர்ச்சி பெற்ற வித்யார்த்திகளுக்கு ஆசார அனுஷ்டானங்கள் கற்றுக்கொடுத்து ஸ்ரீ ஸந்நிதி மூலமாக கைங்கர்யங்களுக்கான வசதி செய்து கொடுக்கப்படும்.

5. ஒவ்வொரு வித்யார்த்திக்கும் இந்த தகுதிகள் ஏற்படுத்துவது நமது பாடசாலையின் சிறப்பு அம்சமாகும்.

6. இந்த மஹத்தான தொண்டிற்கு ஒரு வித்யார்த்திக்கு ஒரு வருடத்திற்கு ரூ.25,000/-மும், ஒரு வித்யார்த்தியின் பூர்த்தியான படிப்பிற்கு ரூ.2,00,000/-மும், ஒரு நாள் அன்னதானத்திற்கு ரூ.6,000/-மும் தேவைப்படுவதால் இந்த கைங்கர்யத்தில் சக்திக்குத் தகுந்தவாறு கலந்து கொண்டு ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனின் க்ருபைக்கும், ஸ்ரீமதழகியசிங்கரின் பரமானுக்ரஹத்திற்கும் பாத்திரர்களாகும்படி ப்ரார்த்திக்கிறோம்.

*(இதற்கான **காசோலை, டிடி, எம்.ஓ** – ஆகியவற்றை*
**Vidyadhanam & Annadhanam Trust** என்ற பெயரிட்டு,
***30, வெங்கடேசஅக்ரஹாரம், மைலாப்பூர், சென்னை – 600 004.***
என்ற முகவரிக்கு அனுப்பவும்.
**மேற்படி நன்கொடைகளுக்கு 80-G உண்டு.**

ஸ்ரீநியமனப்படி
வித்யாதானம் - அன்னதானம் டிரஸ்ட்

॥ शुभमस्तु ॥

# மஹனீயரின் பரமபதப்ராப்தி



அன்னாதூர் ஸ்வாமி என அன்புடன் அனைவராலும் அழைக்கப்படும் திருக்கள்ளம், உருப்பட்டூர், அன்னாதூர் ராஜகோபாலாசார்யார் ஸ்வாமி பரமபதித்ததைக் கேட்டு ஸ்ரீமதழகியசிங்கர் மிகவும் சோகித்தாயிற்று. இந்த ஶார்வரி வருடத்தில் தொடர்ந்து ப்ரஹ்ம வித்துக்களின் நிர்யாணம் ஶோசநீயமே. इदं वो याज्यानां उदितमुदितं यत्कुलमभूत् என்று முராரி எனும் கவி அநர்கராகவத்தில் வஸிஷ்டரின் ஸம்பந்தத்தால் முடிசூட்டப்பட்ட ரகுவம்ச மன்னர்கள் என்கிறான். அதுபோன்று மதுராந்தகம் ஏரிகாத்த ராமருக்கு பல பட்டாபிஷேகங்களைச் செய்து வைத்த மஹாத்மா இவர்.

1922ல் ஸ்ரீஶடகோபன் ஸ்வாமிக்கும், ஸ்ரீமதி கனகவல்லி அம்மங்காருக்கும் ஸுபுத்ரனாக இந்த ஸ்வாமி அவதரித்தார். இந்த ஸ்வாமி ஸ்ரீ உ.வே. கோஷ்டீபுரம் சுந்தர ஸௌம்ய நாராயணாச்சார் ஸ்வாமியிடம் யஜுர்வேதம், காவ்யம் மற்றும் சாஸ்த்ரமும் ஸ்ரீ உ.வே. வில்லிவலம் நாராயணாச்சார் ஸ்வாமியிடம் ந்யாய சாஸ்த்ரமும் கோஷ்டீபுரம் ஸ்ரீ உ.வே. வாஸுதேவாசார்யரிடம் பாஞ்சராத்ர ஆகமமும், தேவனார்விளாகம் ஸ்ரீமதழகியசிங்கரிடம் க்ரந்த சதுஷ்டயத்தையும் க்ரமமாகப் பயின்றார்.

பின்னர் மதுராந்தகம் பாடசாலையில் 20 வருடங்களுக்கும் மேலாக அத்யாபகராக இருந்தார். தர்மசாஸ்த்ரங்களில் அதிகாரியாகத் திகழ்ந்த இந்த ஸ்வாமி, நம் ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியாவில் பலகாலமாக பஞ்சாங்க ஸங்க்ரஹம் மற்றும் வினா-விடை பாணியில், வாசகர்களின் சாஸ்த்ரத்தை ஒட்டிய ஸந்தேஹங்களுக்குப் பதில் அளித்து வந்ததை அனைவரும் அறிவர்.

அவர் பெற்ற விருதுகளில் சில,

2011ல் ஸம்ஸ்க்ருதத்திற்கு ராஷ்ட்ரபதி விருதும், 'ஸ்ரீபாஞ்சராத்ர ப்ரக்ரிய சக்ரவர்த்தி' விருது நம் முக்கூர் ஸ்ரீமதழகியசிங்கரிடமிருந்தும், 'ஸ்ரீபாஞ்சராத்ர பாஸ்கரா' விருது பெரியாஶ்ரமம் ஸ்ரீமத் ஆண்டவனிடமிருந்தும், 'ஸ்ரீபாஞ்சராத்ர பராவர ப்ரவீணா' விருது கிஞ்சித்காரம் ட்ரஸ்டிலிருந்தும், 'ஸ்ரீவைஷ்ணவ ரத்னம்' விருது, ஸ்ரீபராசர குருகுலம், பெலகுலா மைசூரிலிருந்தும், 'ஸ்ரீபாஞ்சராத்ர ஸாம்ராட்' விருது திருமலை திருப்பதி தேவஸ்தானத்திலிருந்தும் பெற்றார். நாட்டின் தற்போதைய அஸாதாரண சூழ்நிலையிலும் ப்ரஹ்மமேத பூர்வகமாக ஸ்வாமியின் கைங்கர்யத்தைப் புத்ரர்கள் குறைவின்றி நடத்தினர்.

இந்த ஸ்வாமியின் பிரிவு, நம் ஸ்ரீவைஷ்ணவ ஸத்ஸம்ப்ரதாயத்திற்குப் பேரிழப்பாகும்.

- ஸம்பாதகர்

மஹாபாரதம் கூறும் நல்லுபதேசம் - 13

# அஷ்டாவக்ரர் உபாக்யானம்

தொகுப்பு: திருப்புல்லாணி ஸ்ரீநிவாஸன், சென்னை 91.

नारायणं नमस्कृत्य नरं चैव नरोत्तमम् ।
देवीं सरस्वतीं व्यासं ततो जयमुदीरयेत् ॥

நாராயணம் நமஸ்க்ருத்ய
நரம் சைவ நரோத்தமம் ।
தேவீம் ஸரஸ்வதீம் வ்யாஸம்
ததோ ஜயம் உதீரயேத் ॥

புருஷோத்தமனுன நாராயணனையும், நரனையும், வாக்தேவியான ஸரஸ்வதியையும், வியாஸரையும் வணங்கிய பிறகு ஜயத்தை - பாரதத்தைச் சொல்ல வேண்டியது என்பது இந்த ஶ்லோகத்தின் பொருள்.

குறிப்பு - வனவாஸத்தில் பாண்டவர்களுக்கு உதவி புரிந்து தக்க - வழிகாட்டியாக இருந்த லோமேச மஹரிஷி பாண்டவர்களை பாரததேஶம் முழுவதும் தீர்த்த யாத்ரை செய்யும்படி அநுக்ரஹித்து அவரும் அவர்களுடனே வருகிருர். ஆங்காங்கே வனத்தில் இருக்கும் ஆஶ்ரமங்களைப் பற்றியும் பல தீர்த்தங்களின் பெருமையைப் பற்றியும் கூறி வருகிருர். இப்படி இருக்கும் பொழுது, லோமேசர் பாண்டு புத்ரர்களுக்கு ஒரு ஸமயம் வனத்தில் ஒரு ஆஶ்ரமத்தைக் காண்பிக்கிருர். மேலும், அந்த ஆஶ்ரமம் ஶ்வேத கேதுவின் ஆஶ்ரமம் என்று சொல்கிருர். ஶ்வேத கேது உத்தாலகருடைய புதல்வர். பூமியில் மந்த்ரங்களை நன்கு கற்றறிந்தவர் என்ற ப்ரஸித்தியும் இவருக்கு உண்டு. சிறந்த மேதாவி. இந்த யுகத்தில் ப்ரஹ்மவித்துக்களுள் மிகச் சிறந்தவர்கள் ஶ்வேத கேதுவும் அஷ்டாவக்ரரும் ஆவார்கள். அவர்களுள் ஶ்வேத கேது உத்தாலகருடைய புதல்வர். கஹோளருடைய புதல்வர் அஷ்டாவக்ரர். அஷ்டாவக்ரர் ஶ்வேத கேதுவின் மருமகன்.

இவர்கள் இருவரும் ஒரு ஸமயம் ஜனக ராஜனுடைய யாகத்திற்குச் செல்லத் தீர்மானித்தனர். அங்கு சென்ருல் ஶாஸ்த்ர விவாதங்களை நன்கு அறிவோம். நம் ப்ரஹ்ம ஜ்ஞாநம் அபிவ்ருத்தியாகும். யாகம் மிகவும் மங்களகரமாக நடப்பதைப் பார்த்து ஸந்தோஷமுறுவோம். வேத கோஷங்களை நன்கு அனுபவிக்கலாம். சிறந்த அன்னத்தையும் புசிக்கலாம் என்பதால் அவர்கள் இருவரும் செல்கின்றனர். இனி மிகவும் ஸ்வாரஸ்யமான இக் கதையினையும் பின்னர் பண்டிதர்களின் வாதங்களையும் வாதத் திறனையும் கண்டு ரஸியுங்கள்.

அம்மானும் மருமானுமான அவர்கள் செல்வப் பெருக்குள்ள ஜனகராஜனுடைய யாகத்தைக் குறித்துச் சென்றனர். அஷ்டாவக்ரர் செல்லும் வழியில் எதிரில் வந்த அரசன், 'வழியை விட்டு விலகிச் செல்' என்ருன். அதைக் கேட்ட அஷ்டாவக்ரர் கூறலானார்.

வழியைத் தடுத்த அரசனை நோக்கி அஷ்டாவக்ரர், 'குருடன், செவிடன், ஸ்த்ரீகள், சுமைகொண்டு வருபவர் முதலானேர் வரும்போது, மற்றவர் விலகி வழிவிட வேண்டும். ப்ராம்மணன் அருகில் வராதபோதுதான் வழி அரசனுடையதாகும்' என்ருர்.

அரசன், 'இப்பொழுதே உமக்கு வழி விட்டுவிட்டேன். உமக்கு இஷ்டமான வழியில் செல்லலாம். நெருப்பில் மிகவும் சிறியதான நெருப்பு இல்லை. இந்திரன்கூடத்

தினமும் ப்ராம்மணர்களை நமஸ்கரிக்கிறான்' என்றான்.

அஷ்டாவக்ரர் ஶ்வேதகேதுவுடன் தமக்கு இஷ்டமான வழியில் சென்று யாகசாலையை அடைந்தார். வாயிற்காப்பவன் அவர்களை முறைப்படி தடுத்தான்.

அஷ்டாவக்ரர், 'வாயிற்காப்பவனே! நாங்கள் யாகத்தைப் பார்க்க மிக்க ஆவலுடன் வந்திருக்கிறோம். உள்ளே செல்வதற்கு உன் கட்டளையை எதிர்பார்க்கிறோம். இந்திரத்யும்னனுடைய குமாரனான ஜனகனுடைய (இவன் ஸீதையின் தந்தையல்ல) யாகத்தைக் காண வந்த நாங்கள் வாதம் செய்ய விருப்பமுள்ளவர்களாகவும் ஜனகராஜனைக் காண விருப்பமுள்ளவர்களாகவும் இருக்கிறோம். ஐயனே! நீ கோபம் கொள்ளலாகாது. உத்தமனான வந்தியை விரைவில் நாங்கள் கிட்டும்படி செய்வாயாக' என்றார்.

வாயிற்காப்பவன், 'நாங்கள் வந்தியின் கட்டளைப்படி செயல்படுபவர்கள். நான் சொல்வதை நீர் கேளும். இந்த இடத்தில் சிறுவர்களான ப்ராம்மணர்கள் ப்ரவேசிப்பதில்லை. முதிர்ந்தவர்களும் கற்றறிந்தவர்களுமான ப்ராம்மணர்களே ப்ரவேசிக்கின்றனர்' என்றான்.

அஷ்டாவக்ரர், 'வாயிற்காப்பவனே! இந்த இடத்தில் முதிர்ந்தவர்கள்தாம் செல்லலாம் என்ற வ்யவஸ்தை இருக்கும் பக்ஷத்தில் நாங்களும் உள்ளே செல்லத் தகுதி பெற்றவர்களே. நாங்கள் விரதங்களை அநுஷ்டித்தவர்கள். வேதமோதியவர்கள். வேதசாஸ்த்ரங்களைக் கேட்பதில் விருப்பமுள்ளவர்கள். இந்த்ரியங்களை அடக்கினவர்கள். வேதாந்த சாஸ்த்ரத்தில் தெளிவைப் பெற்று ஜ்ஞாநத்தால் முதியவர்களாகவே இருக்கிறோம். பெரியோர்கள், 'சிறுவனைச் சிறுவனாக நினைக்கக் கூடாது' என்கின்றனர். அக்னி சிறியதாக இருந்தாலும் தொட்டால் எரிக்கிறது அல்லவா?' என்றார்.

த்வாரபாலகன், 'வேதாந்தமாகிய உபநிஷத்து மிகவும் சிறந்தது. முனிவர்களால் அடையப் பெற்றது. அழிவற்ற பரப்ரஹ்மத்தை மிகத் தெளிவாக அறிவிப்பது. மந்த்ரம், அர்த்தவாதம் முதலியவற்றால் அனேக ரூபமுள்ளது. கர்ம காண்டத்தைக் காட்டிலும் மிகச் சிறந்து விளங்குவது. அப்படிப்பட்ட உபநிஷத்தை நீ அறிவாயாகில் சொல், பிள்ளாய்! உன்னைச் சிறுவனென்று அறி. ஏன் வீணாகப் புகழ்ந்து கொள்கிறாய்? நீ வாதஸித்தியை ஒருநாளும் பெறமுடியாது' என்றான்.

அஷ்டாவக்ரர், 'இலவங்காயின் நடுவிலுள்ள பஞ்சு நன்கு பருத்திருப்பது போல் சரீரம் பருத்திருப்பதைக் கொண்டு ஒருவன் அறிவு முதிர்ந்தவன் என்று கருதுவதற்கில்லை. ஒருவன் உடம்பு மிகக் குட்டையாய்ச் சிறியதாக இருந்தாலும் ஜ்ஞாநம் என்ற சிறப்பு அவனிடம் இருந்தால் அவனே முதியவன். அறிவில்லாதவன் முதியவனல்லன்' என்றார்.

**न ज्ञायते कायवृद्ध्या विवृद्धि-**
**र्यथाष्ठीला शाल्मलेः सम्प्रवृद्धा ।**
**ह्रस्वोऽल्पतायः फलितो विवृद्धो**
**यश्चाफलस्तस्य न वृद्धभावः ॥**

*ந ஜ்ஞாயதே காயவ்ருத்யா விவ்ருத்தி:*
*யதாஷ்டீலா ஶால்மலேஸ் ஸம்ப்ரவ்ருத்தா ।*
*ஹ்ரஸ்வோல்பகாய: பலிதோ விவ்ருத்தோ*
*யஶ்சாபலஸ் தஸ்ய ந வ்ருத்தபாவ: ॥*

த்வாரபாலகன், 'சிறுவர்கள் பெரியவர்களிடமிருந்து ஜ்ஞாநத்தைப் பெற்று நாளடைவில் பெரியவர்களாகிறார்கள். ஸ்வல்ப காலத்தில் ஜ்ஞாநத்தை ஸம்பாதிப்பதும் எளிதன்று. பாலகனான நீ என்ன காரணத்தால் முதிர்ந்தவன் போலப் பேசுகிறாய்? என்றான்.

அஷ்டாவக்ரர், 'தலை நரைத்ததனால் மனிதன் முதிர்ந்தவனாகான். வேத சாஸ்த்ரங்களைக் கற்றுணர்ந்தவன் பாலகனாக இருந்தாலும் அவனையே தேவர்கள் முதிர்ந்தவன் என்கின்றனர். பிராயம், நரை, பொருள், உறவினர் இவற்றையெல்லாம்

கொண்டு ஒருவரை முதிர்ந்தவர் என்று அறியும்படி ரிஷிகள் கூறவில்லை. அங்கங்களோடு கூடிய வேதங்களை நன்கு அத்யயனம் செய்தவனே முதிர்ந்தவன். நான் ராஜஸபையில் வந்தியைப் பார்க்க வந்திருக்கிறேன். ஐயனே! பொன்மாலையை அணிந்து கொண்டிருக்கிற அரசனிடம், நான் வந்திருப்பதைத் தெரிவி. வாயில்காப்பானே! நான் வித்வான்களோடு வாதம் செய்வதை நீ பார்ப்பாய். வந்தியோடு வாதம் பெருகினால் அவன் என்னிடம் தோற்பதைக் காண்பாய். கல்வி நிரம்பினவர்களும் ப்ரதான புரோஹிதர்களுடன் கூடினவருமான ப்ராம்மணர்கள் அரசனுடன் இப்பொழுது எல்லோரும் பேசாமல் இருக்கும் தருணத்தில் என் உயர்வையோ தாழ்வையோ பார்க்கப் போகின்றனர்' என்றார்.

த்வாரபாலன், 'பத்தே வயது நிரம்பிய நீ மிகக் கற்றவர்களான வித்வான்களே ப்ரவேசிக்கத் தக்க யாகசாலையில் எப்படிப் ப்ரவேசிக்கலாம்? நான் சொல்லுகிறபடி செய். அரசன் உன் சொல்லைக் கேட்கக் கூடிய இடத்தில்தான் வீற்றிருக்கிறார். அவரை நீ தெளிவான சொற்களால் ஸ்தோத்திரம் செய். அவர் உனக்கு உள்ளே வர அநுமதியையும், உனக்கு இஷ்டமான அனைத்தையும் ப்ரீதியுடன் கொடுப்பார்' என்றான்.

அஷ்டாவக்ரர், 'ஓ ஓ அரசனே! ஜனக வம்சத்தில் பிறந்த அரசர்களுள் மேன்மை வாய்ந்தவனே! நீயே ஸம்ராட்-பேரரசன். உன்னிடத்தில் எல்லாம் நிறைந்திருக்கின்றன. முற்காலத்தில் யயாதி எல்லா யாக கர்மாக்களையும் செய்தது போல் இக்காலத்தில் நீ ஒருவனே எல்லா யாக கர்மாக்களையும் செய்பவன். வித்வானான வந்தி தனக்கு எதிரி இல்லை என்று எண்ணி, வாதத்தில் வல்லவர்களை வாதத்தில் வென்று, தோற்றவர் அனைவரையும் உன் கட்டளைப்படி உன் இஷ்டத்தைச் செய்யும் வேலைக்காரர்களைக் கொண்டு ஜலத்தில் அமிழ்த்துவிக்கிறான் என்று கேள்விப்படுகிறோம். நான் ஸபையில் ப்ராம்மணர்களருகில் வேத வேதாந்த அர்த்தங்களைச் சொல்வதற்காகவே வந்திருக்கிறேன். அந்த வந்தி எங்கே? அவனை எதிர்த்து, சூரியன் நக்ஷத்ரங்களை மறையச் செய்வது போல் நாசம் செய்வேன்' என்றார்.

அரசன், 'நீ எதிரியான வந்தியின் வாதபலத்தை அறியாமல் அவனை ஜயிப்பதாகக் கூறுகிறாய். வந்தியின் வாதத் திறமையை நன்கு அறிந்தவர்கள் இவ்விதம் பேசமாட்டார்கள். வாதம் செய்வதில் மிகவும் கைதேர்ந்த பல ப்ராம்மணர்கள் வந்தியிடம் வாதம் செய்து பார்த்துவிட்டனர். முற்காலத்தில் இந்த வந்தியின் பலத்தை அறியாமல் இவனை வெல்ல விரும்பின ப்ராம்மணர்கள் இவனை எதிர்த்து, சூரியனால் நக்ஷத்ரங்கள் ஒளியற்றன ஆவதுபோல் ஒளியற்றவராயினர். வீண் ஆசையினால் வந்தியை எதிர்க்க விரும்புகிறாய். அவனை எதிர்த்தால் நாசம் ஸித்தம். இந்தச் சபையை வெல்லுவதற்கு உனக்கு என்ன திறமை உள்ளது? என்றான்.

அஷ்டாவக்ரர், 'அரசனே! வந்திக்கு இதுவரையில் என்னைப் போன்றவர்களுடன் வாதம் செய்யும் ஸந்தர்ப்பம் ஏற்படவில்லை. ஆகையால்தான் சூரனாகத் தன்னை நினைத்துக்கொண்டு அச்சமின்றிச் செல்கிறான். இப்போது என்னை எதிர்த்துத் தோல்வியுறப் போகிறான். வழியில் முறிந்து கிடக்கிற வலிமையற்ற வண்டி போலக் கிடக்கப்போகிறான்' என்றார்.

அரசன், 'ஆறு நாபியுள்ளதும், பன்னிரண்டு அச்சுகள் உள்ளதும், இருபத்துநான்கு பொருத்துக்களையுடையதும், முந்நூற்றறுபது ஆர்கள் உள்ளதுமான சக்கரத்தின் பயனை அறிந்தவனே சிறந்த கவி' என்றான்.

அஷ்டாவக்ரர், 'இருபத்துநான்கு பொருத்துக்களும், ஆறு நாபியும், பன்னிரண்டு அச்சுகளும், முந்நூற்றறுபது ஆர்களும்

உள்ளதும், எப்பொழுதும் ஓடிக் கொண்டிருப்பதுமான காலசக்கரம் உன்னைப் பாதுகாக்க வேண்டும்' என்றுர்.

அரசன், 'தேரில் பூட்டிய இரண்டு பெண்குதிரைகள் போல் சேர்த்திருப்பவையும் பருந்துகள் போல விழுகிறவையுமான இரண்டு வஸ்துக்கள் இருக்கின்றன. தேவர்களுள் எவன் அவற்றைக் கர்ப்பத்தில் தரிக்கிறுன்? அவ்விரண்டும் எந்தக் கர்ப்பத்தை உண்டுபண்ணுகின்றன' என்று கேட்டான்.

அஷ்டாவக்ரர், 'அரசனே! உன் வீட்டிலும் உன் பகைவர் வீட்டிலுங்கூட மின்னலும் இடியும் நேர வேண்டாம். மேகம் அவ்விரண்டையும் உண்டு பண்ணுகிறது. அவை அந்த மேகத்தையே உண்டு பண்ணுகின்றன' என்றுர்.

அரசன், 'எந்தப் பிராணி தூக்கத்தில் கண்ணை மூடாமல் இருக்கிறது? எந்த வஸ்து பிறந்து அசைவற்றிருக்கிறது? எதற்கு இதயம் இல்லை? எது வேகத்தால் விருத்தியடைகிறது?' என்று வினவினுன்.

किंस्वित् सुप्तं न निमिषत्यि
किंस्विज्जातं न चोपति? ।
कस्वस्विद्धृदयं नास्ति?
किंस्विद् वेगेन वर्धते? ॥

கிம்ஸ்வித் ஸுப்தம் ந நிமிஷதி:
கிம்ஸ்வித் ஜாதம் ந சோபதி? ।
கஸ்யஸ்வித் ஹ்ருதயம் நாஸ்தி?
கிம்ஸ்வித் வேகேந வர்த்ததே? ॥

அஷ்டாவக்ரர், 'மீன், தூக்கத்தில் கண்ணை மூடுவதில்லை. முட்டை பிறந்ததும் அசைவதில்லை. சரீரமில்லாததற்கு இதயம் இல்லை. நதி, வேகத்தால் விருத்தியடைகிறது' என்று பதிலளித்தார்.



मत्स्यः सुप्तो न निमिषत्यण्डं जातं न चोपति ।
अस्मनो हृदयं नास्ति, नदी वेगेन वर्धते ॥

மத்ஸ்யஸ் ஸுப்தோ ந நிமிஷதி,
அண்டம் ஜாதம் ந சோபதி ।
அஶ்மனோ ஹ்ருதயம் நாஸ்தி,
நதீ வேகேந் வர்ததே ॥

அரசன், 'தேவன் போன்ற திறமை வாய்ந்தவனே! நான் உன்னை மனிதனுகக் கருதவில்லை. நீ பாலகனன்று. அறிவினுல் மிகவும் முதிர்ந்தவன். சிறப்பாகப் பேசுவதில் உனக்கு நிகர் யாருமில்லை. கற்றறிந்தவனே! நீ ஸபைக்குள் தாராளமாகப் ப்ரவேசிக்கலாம்' என்றுன். ✵

Printed and Published by J.S. Vasan at 30, Venkatesa Agraharam, Mylapore, Chennai 600 004 on behalf of H.H. Jeer, of Sri Ahobila Mutt and printed at M/s. Versatile Prints & Packs, 3/9-A, Thangavel Vaithiyar Street, Triplicane Chennai 600 005. Editor : M.V. Anannthapadmanabhan
Volume: 79
Issue : 5
E-mail: srinarasimhapriya@gmail.com

# *The Sundaram Promise*













For nearly six decades, Sundaram Finance has been the Benchmark for Excellence in Customer Service, built on the strong foundations of Trust and Prudence.

Over the years, we have striven hard to safeguard the wealth of tens of thousands of investors, who have placed their faith in Sundaram Finance. We have delivered consistent and attractive returns on their hard earned money.

But above all, we have ensured Peace of Mind for three generations of depositors, who have given us their unflinching Trust.

Today, as ever, we reiterate our commitment to the timeless Sundaram Values.

**We make you THE SUNDARAM PROMISE.**

SUNDARAM FINANCE GROUP
Enduring values. New age thinking.

Sundaram Finance
www.sundaramfinance.in

Sundaram BNP Paribas Home
www.sundarambnpparibashome.in

Sundaram Mutual
www.sundarammutual.in

Royal Sundaram
www.royalsundaram.in

**Sri Nrisimhapriya RNI No.11824 Registered TN/CH(C)/348/2018-20 and WPP No.TN/PMG(CCR)WPP-214/2018-20 Licensed to post without prepayment August 2020 Date of Publishing 8th of Every Month**

